# நியூ ரூபி
ஆபரண மாளிகை



நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05



# ASI Boucherie

அனைத்து இறைச்சி வகைகளையும் தரமானதாகப் பெற்றுக்கொள்ள...



195 rue du fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M°: La Chapele Gare du Nord



பிரான்ஸ் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 01 02 - 15 பெப்ரவரி 2016 முழக்கம் 16



# பிரான்ஸ்
செய்திகள்
அரச நிர்வாக தகவல்கள் தமிழில்
www.ParisTamil.com
பரிஸ்தமிழ்
ParisTamil.Com .கொம்


## ஐ.நா. ஆணையாளர் இலங்கை பயணம் இந்திய வெளிவிகார அமைச்சரும் விரைகிறார்





## புலிகளின் போராட்டம் சுதந்திரப் போராட்டம்


BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20

Spécialitées Indienne et Srilankaise

www.restaurantbharath.com

www.cafe-bharath.com




## (ஏ)மாற்றம் காணும் நல்லாட்சி!



## தடம்மாறும் சம்பந்தரும், தடுமாறும் விக்னேஸ்வரனும்



## தந்தைக்காகத் தமிழீழத்தை பழிவாங்கும் தனையன்


# V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

# Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03


# EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்

33 bis, rue du Chatêau Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55

Le Bourget
# SABARI PALACE



புத்தம் புதிய ஆடைகள்
ஆபரணங்கள்
பரிசுப் பொருட்கள்
அனைத்திற்கும்
ஒரே இடத்தில்...



42 avenue Jean Jaures - 93350 Le Bourget
Tél.&Fax: 01.48.35.35.66 / 06.15.62.65.08

IMPORT EXPORT
லாச்சப்பல்
# நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்



64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

# VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


பரீஸ் மாநகரில்...
GANESHA CORNER
இலங்கை, இந்திய அறுசுவை உணவுகள்...
01-01-2016
முதல்
புதிய உதயம்
Ganesha Corner
Restaurant Indien
25, rue du Château Landon
75010 Paris
Tél : 0967274521
Corner Restaurant
Spécialités Indiennes et Srilankaises
16, rue Perdonnet / 63, rue Louis Blanc
75010 Paris
Tél : 0140340692
உங்கள் மண்டப அல்லது வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு
சாப்பாடுகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப செய்து தரப்படும்!


DEVI Textiles & Tailors
சாரி பிளவுஸ்
30
நிமிடங்களில்
தைத்துத்
தரப்படும்
ஆண் பெண்
இருபாலாருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்ப்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
M°: La Chapelle (ligne 2)
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50

ஈழமுரசு
mediacentre ஊடகமையம்
முரசு 01 | 02 - 15 பெப்ரவரி 2016 | முழக்கம் 16

"தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்."



- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# ஐ.நா. ஆணையாளர் இலங்கை பயணம் இந்திய வெளிவிவகார அமைச்சரும் விரைகிறார்

*(02.02.2016, செவ்வாய்க்கிழமை)*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் செயிட் அல் - ஹுசேன், உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் 5ம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கைக்கு முதன் முறையாகப் பயணமாகின்றார். கடந்த செப்டெம்பர் மாதம்



ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 30வது கூட்டத் தொடரில் சிறீலங்கா அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக ஆராய்வதற்கும் மதிப்பீடுகளை செய்வதற்காகவும் இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தங்களது விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை எக்காரணம் கொண்டும் இணைத்துக்கொள்ளமாட்டோம் என சிறீலங்காவின் ஜனாதிபதி உறுதியாகத் தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கைக்கான பயணம் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

எதிர்வரும் 9ம் திகதி வரை சுமார் ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் செய்ட் அல் ஹுசேன், சிறீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களுடனும், சிவில் சமூக பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளார். அதேவேளை, 6ம் திகதி சனிக்கிழமை வடக்குக்கு பயணம் செய்யும் ஆணையாளர் செயிட் அல் - ஹுசேன், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுடனும் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பின்னரான நிலைமைகள் குறித்து அவருடன் கலந்துரையாடுவார் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன் போர் காரணமாக பாதிக்கப்பட்டவர்ளை சந்தித்து கலந்துரையாடுவதற்கும் வடக்கில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சந்திப்புக்களை முடித்துவிட்டு கொழும்பு திரும்பவுள்ள செயிட் அல் ஹுசேன் சிறீலங்கா அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். இதன்போது உள்ளக விசாரணை பொறிமுறை மற்றும் சர்வதேசத்தின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. விசேடமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 30வது கூட்டத் தொடரில் சிறீலங்கா அரசு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பாகவும், வெளிநாட்டு நீதிபதிகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் இந்தச் சந்திப்பின் போது விரிவாக பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சனிக்கிழமை இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் செய்ட் அல் ஹுசேன் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது விசாரணை பொறிமுறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக பேச்சு நடத்தப்படவுள்ளது.

இவரது பயணம் இவ்வாறிருக்க, மனித உரிமை ஆணையாளர் இலங்கை செல்லும் அதேதினமான வெள்ளிக்கிழமை இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கொழும்பு செல்கின்றார். இந்தப் பயணத்தின்போது மனித உரிமை ஆணையாளரின் சந்திப்பிற்கு முன்னதாக சிறீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களை அவர் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தவுள்ளதாக தெரியவருகின்றது.

சிறீலங்கா - இந்திய கூட்டு ஆணைக்குழுவில் கலந்து கொள்ளும் திட்டத்துடன் கொழும்பு செல்லும் இந்திய வெளிவிவகார அமைச்சர், மனித உரிமை ஆணையாளர்



வடக்குக் பயணம் செய்யும் அதேதினம் வட மாகாணத்திற்குச் சென்று பல்வேறு சந்திப்புகளில் கலந்து கொள்ளவுள்ளார். குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் இரு நாட்டு பல்துறைசார் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் சிறீலங்கா - இந்திய கூட்டு ஆணைக்குழுவின் சந்திப்பு எதிர்வரும் 5ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னாயத்தங்களை செய்வதற்காக கடந்த மாதம் 12ம் திகதி இந்திய வெளியுறவு செயலர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு சென்று அரசின் உயர்மட்டத்தினரையும், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈழமுரசு
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE" JOURNAL TAMOUL
bimensuel Gratuit

MEDIACENTRE
BP 18
93701 Drancy Cedex,
France
Tel: 00 33 970 464 464
Port: 00 33 783 838 868

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** P.Velupillai
தலைவர்: ப.வேலுப்பிள்ளை

**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
அசுரன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ஆதவன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
வேந்தன் (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

**Impression:**
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா:
Mohan: 00 44 742 988 5742
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
(அஞ்சற் செலவு மட்டும்)
**வருட சந்தா**
பிரான்ஸ் 49€
ஐரோப்பா 59€
ஏனைய நாடுகள் 69€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில் ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80


# 7ம் ஆண்டு நினைவில்



ஈகைப் பேரொளி

## முருகதாசன்

பிறப்பு : 02-12-1982 சாவு : 12-02-2009

உன்னை எழுதவும் பாடவும் எமக்கிருக்கும்
வார்த்தைகளில் எதுவுமேயில்லை.
உன்னை வணங்குகிறோம்.- நீ
எரிந்தபொழுதினில் எம்நெஞ்சில்பட்ட
சுடுதழும்பை ஆறவிடாமல் வன்மம் வளர்ப்போம்.

காலம் எவ்வளவு கடந்தாலும் அனலாடிய உன்
ஆன்மத்தை, அதனிலும் உயர்ந்த உன் ஈகத்தை
எம்முள் நிரந்தரமாய் படிந்துவிட்ட காயத்தை
எதையுமே நாம் மறவோம்.
நீ நினைத்த விடுதலையை நாளைப்பொழுது
மீட்டுவரும்.நம்பிக்கையோடு இரு.

## தமிழ் ஊடகத்துறைக்கு ஒரு பேரிழப்பு



சாவு : 12-02-2009
பிறப்பு : 30-10-1972



## நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி

ஊடகங்களும், ஊடகவியலாளர்களும்
அராஜக இனவாத அரசுகளிற்கு
கனவிலும் துாங்கவிடாத, போர் ஆயுதங்கள்.
தமிழர்களின் மீது
இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட
இனவாதச் சிங்கள அரசிற்குத்
தமிழ்த்தேசிய ஊடகங்களும்
தமிழ்த்தேசிய ஊடகவியலாளர்களும்
எப்பொழுதும் புலிச் சொப்பனந்தான்!!
தன் பேனாவினால்
தழிழ்த்தேசியத் தொண்டாற்றிய
நாட்டுப்பற்றாள ஊடகவியலாளனே
உனை நாம் இழந்து நிற்கின்றோம்!
நாடுகடந்தும் கொலைக்கரம் விரிக்கும்,
சிறீலங்காவின் அரசபயங்கரவாதத்தின்
இலக்குகளில் நின்று,
உனை நினைவு கூர்கின்றோம்!!!

ஊடகமையம் – ஈழமுரசு குடும்பத்தினர்




# போகாத ஊருக்கு வழிதேடி...

'குண்டுச் சட்டிக்குள் மீண்டும் ஒரு குதிரை ஓட்டம்' தொடங்கியிருக்கின்றது. 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி வைகுண்டம் காட்டுவேன்' என்று சொன்ன கதையாக, தமிழர்களுக்கு மீண்டும் சமஷ்டி (Federal) காட்டும் பணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியிருக்கின்றது. "பெடரல் பெடரல் என்று செல்வநாயகம் காலத்தில் இருந்து 57 ஆண்டுகளாக தமிழர்கள் இடறல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். சிங்களவன் தமிழுருக்கு ஒரு பெடரலையும் தரமாட்டான்" என்று தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், சிறீலங்கா அரசு உருவாக்க முனைந்துவரும் புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்குள் சமஷ்டியையும் உள்ளடக்கி தமிழர்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுவிடப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது.

60 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் பேசப்படும் இந்தச் சமஷ்டி பற்றி ஆராய கூட்டமைப்பின் பிரமுகர்கள் இப்போதுதான் ஸ்கொட்லாந்திற்குப் படையெடுத்திருக்கின்றார்கள். அவர்கள் பயணம் செய்துள்ள அதேவேளையில்தான் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கு இலங்கையில் இடமில்லை என தற்போதைய சிறீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக கூறியிருக்கின்றார்.

சமஷ்டி என்றால் எதோ தமிழருக்கான விடியல் என்றும், நிரந்தரத் தீர்வென்று எண்ணிவிட்டார்கள். சமஷ்டி என்பது கூட்டாச்சியின் இன்னொரு வடிவம்தான். 'மத்தியில் கூட்டாச்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற ஈபிடிபி டக்ளஸ் தேவானந்த அடிக்கடி சொல்லும் வாசகமும் இந்த சமஷ்டி என்ற மாயைக்குள்தான் அடங்கிக்கிடக்கின்றது. அண்மையில் டக்ளஸ் கூட "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதுதான் எனது வழியில் வந்திருக்கின்றது" என்று இதனை வைத்துத்தான் சொன்னாரோ என்னவோ..? இப்போது அந்தச் சமஷ்டியைத் தேடித்தான் கூட்டமைப்பு ஸ்கொட்லாந்து வரை வந்திருக்கின்றது.

முதலில் சமஷ்டி என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டாலே, அது இலங்கைத் தீவில் சாத்தியப்படுமா என்பது புரியவரும். பலதரப்பட்ட இனங்களை அல்லது சமூகங்களை ஒரு பொது அரச கட்டமைப்பில் அச்சமூகங்களின் பொதுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்படும் அரசாட்சி முறையே சமஷ்டி எனப்படுகிறது. அதாவது கூட்டாட்சி முறையின் இன்னொரு வடிவம்தான் இந்த சமஷ்டி (Federal system). இந்தியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா, சுவிச்சர்லராந்து போன்ற சில நாடுகளில் இவ்வாறான நடைமுறையே இருக்கின்றது. சில நாடுகள் மாநிலங்களில் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒதுங்கி நிற்கின்றன. ஆனால், பெரும்பாலான நாடுகளில் மத்திய ஆளும் வர்க்கத்தின் பிடியிலேயே மாநிலங்களின் ஆட்சி இருக்கின்றன. இதுதான் சமஷ்டி.

இதனை இன்னொரு வகையிலும் சொல்லலாம். கயிறு கட்டிய மாடு தனது வரையறைக்குள் மேயலாம். மேய்ப்பவன் கையில்தான் மூக்கணாங் கயிற்றின் பிடி இருக்கும். தேவை ஏற்பட்டால் கயிற்றை இழுத்துப்பிடித்து அதன் மேய்ச்சலைக் கட்டுப்படுத்தலாம். இதுக்கு சிறந்த உதாரணமாக வடமாகாண சபையையே எடுத்துக் கொள்ளலாம். வட மாகாண சபையைக் கைப்பற்றினால் தமிழருக்கு 'அரைத் தமிழீழம்' கிடைத்ததற்கு சமம் என்பதுபோல் தமிழ்க் கட்சிகள் தேர்தலின்போது பிரச்சாரம் செய்தார்கள். ஆனால், கழிப்பறை கட்டுவதற்கு கூட சிங்கள ஆட்சியாளர்களின் அனுமதி பெறவேண்டிய நிலையில் இருக்கின்றது வட மாகாணசபை. காகிதங்களில் தீர்மானங்களை நிறைவேற்றாலாமே தவிர, எவற்றையும் நடைமுறைப்படுத்த முடியாது. வடமாகாண சபையின் தலைவராக சி.வி.விக்னேஸ்வரன் இருக்கின்றார். ஆனால், அவரால் நினைத்தவுடன் எதனையும் செய்துவிட முடியாது. அவரது கயிறு வடமாகாண ஆளுநரின் கையில் இருக்கின்றது. தாங்கள் விரும்பிய வகையில் அவரைச் செயற்பட வைக்க ஆளுநரால் முடியும். இந்த ஆளுநர் சிறீலங்கா ஆளும் வர்க்கத்தினால் தீர்மானிக்கப்படும் ஒருவராக இருக்கின்றார். எனவே, பெயரளவில்தான் வடமாகாண சபை முதல்வர். ஆட்சி அதிகாரம் எனும் சூட்சுமக் கயிறு சிங்கள ஆளும் வர்க்கத்திடம்தான் இருக்கும். இதேதான் சமஷ்டி முறையிலான தீர்வும். இந்த சமஷ்டி என்ற சொற்பதத்திற்குள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு தமிழர்களை நிரந்தரமாக அடங்கிப் போகவைக்கும் அம்சம்தான் அடங்கிக்கிடக்கின்றது.

சரி, ஸ்கொட்லாந்திடம் சமஷ்டி குறித்து அறியப்போன கூட்டமைப்பினர், அந்நாடு சமஷ்டி வேண்டாம் தனிநாடாகப் பிரிந்துபோகப்போகின்றோம் என்று அரசியல் ரீதியாகப் போராடி வருவதையும் அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியிருப்பதையும் இந்தக் கூட்டமைப்பினர் அறிந்துகொண்டனரா தெரியவில்லை.

கடந்த ஓரிரு ஆண்டுகளுக்கு முன்கூட அந்நாடு தனியாகப் பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பை நடத்தியது. அதில் குறைந்தளவான வாக்குகளுடன் பிரிந்துபோவதற்கான வாய்ப்பை இழந்தபோதும், 'தனிநாட்டுக்கான தமது கனவு ஒருபோதும் சாகாது' என்று சூழுரைத்து, தனது முதலமைச்சர் பதவியைவிட்டு விலகிய அலெக்ஸ் சல்மன்ட், 'தனிநாட்டுக்காக தொடர்ந்து போராடும், வாக்களிக்கும் உரிமையை மாணவர்களின் கைகளில் கொடுத்து, விடுதலைக்கான பணியை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு ஒய்வுபெற்றது' பற்றியாவது தெரிந்துகொண்டனரா தெரியவில்லை.

ஆனால் ஒன்று, தனிநாட்டையல்ல, இந்தச் சமஷ்டியைக்கூட சிங்கள தேசம் தமிழர்களுக்கு ஒருபோதும் தந்துவிட மாட்டாது. இது 60 வருடங்களுக்கு மேற்பட்ட தமிழர்களின் அனுபவப்பாடம்.

போகாத ஊருக்கு வழி தேடியதுபோல, சமஷ்டி குறித்து தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஆராய்கின்றது. இது யாரை ஏமாற்றுவதற்கு..? சிங்களவர்களையும், இந்த உலகத்தையும் இல்லை என்பது மட்டும் உறுதி.

# முடிசூடிய மன்னனை முகம் வாடித் தலைகுனிய வைத்த பிள்ளைப் பாசம்

10 ஆண்டுகள் சிங்கள தேசத்தின் முடிசூடிய மன்னனாகத் திகழ்ந்த, துட்டகைமுனுவின் வாரிசு என்று புகழப்பட்ட சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இத்தனை விரைவாக தலைகுனிந்து கூனிக் குறுகிப் போவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட்ட திமிருடன், இலங்கைத் தீவில் ராஜபக்ச குடும்ப ஆட்சியை நிரந்தரமாக நிலை நிறுத்தி விடலாம் என்ற கனவுலகில் மிதந்த ராஜபக்ச குடும்ப ஆட்சியாளர்கள், தினந்தோறும் ஊழல் விசாரணை என்ற பெயரில் நாயாய், பேயாய் அலைக்கழிக்கப்படுகின்றார்கள். இதன் ஒரு கட்டமாக அவரது மகன் முதலாவது ஆளாக இப்போது சிறைச்சாலையின் கம்பிகளை எண்ணத் தொடங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவிற்கு சோதிடம், மந்திரம் என மூடத்தனங்கள் மீது அசைக்கமுடியாத அத்தனை நம்பிக்கை. தன்னை உச்சத்திற்குக் கொண்டுபோனது அவைதான் என உறுதியாக நம்பியவர். ஆனால்,



இப்போது தன்னை இத்தனை அதளபாதாளத்திற்குதான் தள்ளப்படுவேன் என்று கொஞ்சமும் அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். முன்னைய காலத்தில் தங்களால் எதுவும் செய்ய முடியாத மன்னர்களை மக்கள் அறம்பாடிக் கொல்வதாக கதைகள் கூறப்படுகின்றன. தமிழ் மக்கள் பாடிய அறம், தமிழர்கள் விட்ட கண்ணீர் அவரை அத்தனை இலகுவில் விட்டுவிடுமா என்ன..? விதைத்த வினையை இப்போது மகிந்த கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அறுவடை செய்யத் தொடங்கியுள்ளது.

இதன் ஆரம்பமாகத்தான் அவரது மகன் கைதாகியுள்ளதைக் கொள்ளலாம். சட்டவிரோதப் பணபரிமாற்றம் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டில் விளையாட்டுகளை ஒளிபரப்பிவரும் சி.எஸ்.என். (Ceylan Sports Network) தொலைக்காட்சி நிறுவன நடவடிக்கைகள் குறித்து யோஷிதவிடம் நிதிக்குற்றப் புலனாய்வு அமைப்பினர் விசாரித்துள்ளனர். மகிந்த ராஜபக்ச குடும்பத்துக்கு சொந்தமான இந்தத் தொலைக்காட்சியின் நிர்வாகம் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பாக கடந்த பல மாதங்களாக விசாரணை நடத்தப்பட்டு வந்தன. கொழும்பில் உள்ள சிஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனம் பலமுறை சோதனையிடப்பட்டு ஆவணங்கள், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டும் இருந்தன.

மகிந்த ஜனாதிபதியாக பதவி வகித்தபோது, சி.எஸ்.என். தொலைக்காட்சிக்கு சிறீலங்கா அணியின் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமம் வழங்கப்பட்டது. இதில் பெருமளவு அரச நிதி மோசடி நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து, சி.எஸ்.என். தொலைக்காட்சியின் தலைமைச் செயல் அதிகாரியான நிஷோந்தா ரணதுங்க கைது செய்யப்பட்டார். இத் தொடலைக்காட்சியின் ஊடகப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ச உட்பட மேலும் நால்வர் கடந்த 30ம் திகதி கைது செய்யப்பட்டிருக்கின்றனர். கதுவெலா நகர நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட 5 பேரையும் பெப்ரவரி 13ம் திகதி வரை காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. எப்படியாவது சிறைக்குள் செல்லாமல் தடுப்பதற்காக விசாரணை இடம்பெற்றபோது மகிந்த, கோத்தபாய, பசில் உட்பட ராஜபக்ச குடும்பப் பிரமுகர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர். ஆனாலும் அவர்களின் பலத்தையும் மீறி நிதி மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் அவர் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

வார்த்தைகளின்றி நீதிமன்றில் தலைகுனிந்து மௌனமாக அமர்ந்திருந்த மகிந்த, பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில், பயங்கரவாதத்தை ஒழிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நிதி தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தெளிவான குற்றச்சாட்டுக்களை முன்வைக்காது கைது செய்யப்பட்டுள்ள தனது மகன் உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் நீதிமன்றத்தின் மூலம் நியாயம் கிடைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். அத்துடன், எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் செல்வாக்கு தமக்கு அதிகரித்து காணப்படும் நிலையில், அதனை முடக்கும் வகையில் இவ்வாறான கைதுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். பின்னர் தனது முகநூலில் கருத்து வெளியிட்ட மகிந்த, தாம் உள்ளிட்ட தனது முழுக் குடும்பத்தையும் கைது செய்து சிறையில் அடைத்தாலும், 1936ம் ஆண்டு முதல் இருந்துவரும் அனுபவமும் முதிர்ச்சியும் ராஜபக்ச குடும்பத்தாருக்கு ஒருபோதும் இல்லாமல் போகாதென எழுதியுள்ளார்.

இதேவேளை மிகவும் கொந்தளிப்புடன் காணப்பட்ட கோத்தபாய, நல்லாட்சி என்ற போர்வையில் அதிகாரத்தை கைப்பற்றிய கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டி, நாட்டிற்கு மகிந்த ராஜபக்ச வழங்கிய சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான தருணம் வந்துவிட்டதாக நீதிமன்றத்தில் நின்று ஊடகவியலாளர்களிடம் குமுறியுள்ளார்.

இந்தக் கைது சிறிசேன ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பழிவாங்கல் நடவடிக்கை. அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து கடந்த ஒரு வருடமாக அவர்கள் இதனையே செய்ய முயன்று வருகின்றனர் என்று கூறியவர், குழந்தையொன்றைப் பழிவாங்குவது பிழையான விடயம் என்று குறிப்பிட்டுச்சொன்னதுதான் உலக நகைப்புக்குரியதாக இருந்தது.

குழந்தை என்றும் பாராது தமிழீழத் தேசியத் தலைவரின் இளைய புதல்வரை சுட்டுப் படுகொலை செய்ய உத்தரவிட்ட கோத்தபாய, மகிந்தவின் வளர்ந்த மகனை குழந்தையென்று வருந்தியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், போரின் போது இளைஞர்களை விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரில் ஈடுபடுத்துவது கடினமாக காணப்பட்டது. அவ்வேளை நானே தனிப்பட்ட ரீதியில் மகிந்த ராஜபக்ச மற்றும் சிராந்தியுடன் கதைத்து மகனை படையில் சேர்க்க அனுமதி வாங்கினேன். அவர்களை ஒரு மகனை தருமாறும், அது ஏனைய குடும்பங்களிற்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கும் என நான் தெரிவித்தேன், எனினும் இன்று போரிற்காக தன்னை அர்ப்பணித்த அந்த குழந்தையை கைது செய்துள்ளனர் என்று வருந்தியுள்ளார்.

போரினை முடித்துவைத்து ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் காப்பாற்றப்படுவதற்கு காரணமாகயிருந்தவர் எனது சகோதரர், எனினும் அவரது குழந்தையை கைதுசெய்வதன் மூலம் அவரை காயப்படுத்துவதை எவரும் அனுமதிக்கமாட்டார்கள். இது நல்லாட்சி என தெரிவித்துகொண்டே அவர்கள் கொடுங்கோல் ஆட்சியை கொண்டுவந்துள்ளனர் என கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கைதின் பின் கருத்து வெளியிட்ட சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஊழலுக்கு எதிரான அரசாங்கத்தின் முடிவுகள் யாவை என்பது இப்போது அனைவருக்கும் தெரியவந்துகொண்டிருக்கின்றன என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே, மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அவரும் குற்றவாளியாக இனங்காணப்படுவார் என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். தற்போது அவர் நிதிமோசடிப் பிரிவு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பவற்றில் முன்னிலையாகி

தொடர்ச்சி 12ம் பக்கம்

### சுவர் இடிந்து விழுந்து ஒருவர் பலி

காங்கேசன்துறை பகுதியில் பழைய சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் இளம் குடும்பத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஸ்ணன் மயூரன் (வயது 25) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயர்பாதுகாப்பு வலயமாக விருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதியில் இருந்த உடைந்த வீடொன்றின் சுவரை கடந்த 23ம் திகதி சனிக்கிழமை உடைக்கும் போதே, இவர் மீது சுவர் இடிந்து விழுந்துள்ளது.

### திருமலையில் ரஷ்யக் குடிமகன் பலி

திருகோணமலை – குச்சவெளி சாகரபுரப் பகுதிக் கடலில் மூழ்கி 39 வயதுடைய ரஷ்யக் குடிமகன் இவெக்சி ஸ்டீவன் என்பவரே பலியாகியுள்ளார். இது தொடர்பில் அவரது மனைவி வழங்கிய வாக்கு–மூலத்தில், இருவரும் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, கணவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

### நாடு கடத்தப்பட்ட இலங்கையர் கைது

ஓமானிலிருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சியை சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 25 வயதான குறித்த இளைஞர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றி வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இந்த இளைஞர் இத்தாலி செல்ல முயற்சித்தார் என்று குற்றம்சாட்டி குறித்த இளைஞரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

### யாழ் பல்கலைக்கழகத்தில் பௌத்த சுவரொட்டிகள்

யாழ்.பல்கலைக்கழக வளாகத்திற்குள் பௌத்த விகாரை அமைக்கப்பட வேண்டும் எனக்கோரி துண்டு பிரசுரங்கள்




ஒட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழக வளாகத்திற்குள் கலைப்பீடப் பகுதியில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மேற்படி துண்டு பிரசுரங்கள் கடந்த 27ம் திகதி ஒட்டப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக சிங்கள் மாணவர்கள் கல்வி கற்கின்றபோதிலும் இது வரையில் இத்தகைய கோரிக்கை எதுவும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எந்தவொரு மாணவர் அமைப்பும் முன் வைக்கவில்லையென பல்கலைக்கழக உயர் மட்ட அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள். 'யாழ் பல்கலைக்கழக பௌத்த மாணவர் ஒன்றியம் இலங்கை' என பெயர் குறிப்பிடப்பட்டே இந்த துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.


### பொன்சேகாவிற்கு புதிய பதவி

மறைந்த, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்தனவின் வெற்றிடத்துக்கு, ஜனநாயகக் கட்சியின் தலைவரும் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முன்னாள் தளபதியுமான பீல்ட் மார்ஷெல் சரத் பொன்சேகா நியமிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எம்.கே.டி.எஸ் குணவர்தன, தேசியப் பட்டியல் ஊடாக, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் உயிரிழந்த இடத்திற்கு பொன்சேகா நியமிக்கப் படவுள்ளதாகதகவல்கள் வெளியாகியுள்ளன.

# சிறுநீரக வியாபாரத்தில் திளைக்கும் சிறீலங்காவிற்கு நெருக்கடி!

**வெற்றிநிலவன்**

உலகத்தில் கண்தானம் செய்வதில் இலங்கைத் தீவு முதலிடத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கையில் கண்தானம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் கண்களைத் தனமாகக் கொடுப்பவர்களும், விபத்துக்களில் மற்றும் தற்கொலை போன்ற வழிகளில் உயிரிழப்பவர்களின் கண்களும் பெறப்பட்டு உலகெங்கும் பார்வை இழந்தவர்களுக்கு வைக்கப்படுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஆனால், கண்தானத்தில் முதலிடத்தில் இருக்கும் சிறீலங்கா இப்போது சிறீநீரக 'தானத்திலும்' முதலிடத்தைப் பிடித்து விடும் போல் இருக்கின்றது. அத்தளவிற்கு தெற்காசியாவில் மனித உறுப்புகளை குறிப்பாக சிறுநீரகத்தை சட்டவிரோதமாக மாற்றும் அறுவைச் சிகிச்சைக்கு சிறீலங்கா பெயர் பெற்றுள்ளது.



கடந்த இரு வாரங்களாக இலங்கையில் சிறுநீரக சத்திரசிகிச்சை குறித்த செய்திகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்தச் செய்தி இப்போதுதான் வருகின்றன என்றில்லை. மகிந்தவின் ஆட்சிக் காலத்திலும் சிறீலங்காவில் நடைபெறும் இந்தச் 'சிறுநீரக வியாபாரம்' குறித்து, ஊடகங்கள் ஆதாரங்களுடன் எழுதியபோதும், இலங்கைத் தீவில் அது பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் அப்போது ஆட்சியில் இருந்த மகிந்த குடும்ப ஆட்சியாளர்களுக்கும் இலங்கை மருத்துவ சங்கத்தினருக்கும் இடையில் மிகவும் நெருங்கிய உறவு இருந்தது. அதனைவிட, முக்கிய தனியார் மருத்துவமனைகளும் இந்த மகிந்த குடும்ப அதிகார வர்க்கத்தின் கைகளில்தான் இருக்கின்றன. அவற்றைவிட முக்கிய அரசியல் பிரமுகர்களின் கைகளிலும் பல தனியார் மருத்துவமனைகள் இருக்கின்றன. அங்குதான் பெருமளவான சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளும் இடம்பெற்றன. இதனால் இவ்வாறான செய்திகள் வெளிவந்தால் அவை சில நாட்களிலேயே அடங்கிப்போய்விடும்.

ஆனால் இப்போது நிலைமை அவ்வாறில்லை. மகிந்த கூட்டத்தை முற்றாக இலங்கை அரசியலில் இருந்து ஓரங்கட்ட வைக்கும் கங்கணத்துடன் செயற்படும் மைத்திரி ஆட்சியாளர்களுக்கு, இவ்வாறான விடயங்களைப் பெரிதுபடுத்த வேண்டிய தேவை இருப்பதால் இப்போது இந்த விடயம் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. இந்தியாவிலிருந்து இதுதொடர்பான அழுத்தங்கள் எழுந்துள்ளதால் இவற்றைப் பெரிதுபடுத்தி அரசியல் ஆதாயத்தை சம்பாதிக்க மைத்திரி ஆட்சியாளர்கள் விளைந்துள்ளனர்.

தற்போது தனியார் மற்றும் அரச வைத்தியசாலைகளில் வெளிநாட்டு பிரசைகளுக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்த மோசடியைத் தடுப்பதற்காக தற்காலிக நடவடிக்கையாக சுகாதார அமைச்சின் அனுமதி பெறாமல் எந்தவொரு உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்ரம தெரிவித்துள்ளார். இந்த விடயங்களை மைத்திரி ஆட்சியாளர்கள் பெரிதுபடுத்துவதனால்தான், மகிந்த ஆட்சியில் போராட்டமே நடத்தாத இலங்கை மருத்துவ சங்கத்தினர், இப்போது மைத்திரியின் ஆட்சியில்அடிக்கடிபோராட்டங்களைநடத்தத்தொடங்கியுள்ளனர்.

சரி இலங்கையில் சிறுநீரகம் மாற்றுவதில் வெளிநாட்டவர்களுக்கு குறிப்பாக இந்தியர்களுக்கு ஏன் இத்தனை ஆவல்? இந்தியாவில் இரத்த உறவில்லாத ஒருவர் உயிருடன் இருக்கும்போது தனது உடலுறுப்புகளை தானம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் சிறீலங்காவில் இவ்வாறான சட்டம் இல்லை. யாரும் யாருக்கும் தங்கள் விருப்பப்படி (சில சட்ட உடன்படிக்கைகளுடன்) உடலுறுப்புகளை உயிருடன் இருக்கும்போதோ அல்லது உயிரிழந்த பின்னரோ தானமாகக் கொடுக்கமுடியும். இந்த வசதிதான் சிறீலங்காவை நோக்கி இவ்வாறான தடை செய்யப்பட்ட நாடுகளில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை படையெடுக்க வைக்கின்றது. அதுவும் இந்திய வசதி படைத்தவர்கள் இந்த வாய்ப்பைச் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். சிறுநீரகத்தை விற்க முயல்பவர்களை அல்லது தங்களுக்கு பொருந்தக்கூடிய சிறுநீரகங்களை வைத்திருப்பவர்களை பேரம் பேசி இலங்கைக்கு அழைத்து வருகின்றார்கள். வறுமையில் வாடும் மக்களுக்கு பெரும் தொகையான பணம் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறப்படுகின்றன. இதனால் பலரும் தங்கள் சிறுநீரகத்தை விற்க முன்வருகின்றார்கள். இதற்கான நிழலுலக தரகர்கள் பெருமளவில் இந்தியாவில் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். சிறுநீரகத்தை விற்பவரும் அதனை வாங்குபவரும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு அங்குவைத்து சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருவரும் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச்






லங்கா வைத்தியசாலையில் கோத்தபாய உட்பட்ட பிரமுகர்கள்


தெலுங்கானா குற்றப் பிரிவு

சென்றுவிடுவார்கள். கிட்டத்தட்ட 25 முதல் 30 இலட்சம் இந்திய ரூபா வரை நடைபெறும் இந்த வியாபராத்தில் சிறுநீரகத்தை விற்றவருக்கு தரகர் பணம் எல்லாம் போய் ஓரிரு இலட்சங்களே இறுதியில் கிடைக்கும். ஏனைய இலட்சங்கள்..? சத்திரசிகிச்சை நிபுணர் மற்றும் அவரது உதவியாளர்களுக்கு இரண்டு மூன்று இலட்சங்கள் போக, மருத்துவமனைக்கே இதில் பெருமளவு பணம் போகின்றது. இதில் கொள்ளை இலாபம் கிடைப்பதால் தனியார் மருத்துவமனைகள் இந்த வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன.

இந்நிலையில்தான், சட்டவிரோதமான முறையில் சிறுநீரக மாற்று நடவடிக்கைகளில் தொடர்புபட்டுள்ளதாக கூறப்படுகின்ற சிறீலங்காவின் முன்னணி மருத்துவர்கள் 6 பேருக்கு எதிராக இந்தியக் காவல்துறையினர் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றனர். குறித்த மருத்துவர்களின் பெயர் விபரங்களையும் இந்தியக் காவல்துறையினர் வெளியிட்டுள்ளனர். மாதவா, மொனிக், சந்தனா (மூவரும் நவலோக்க வைத்தியசாலை), சமிலா (ஹேமாஸ் வைத்தியசாலை), நிரோஷினி (லங்கா வைத்தியசாலை), ஹபீபா 'பீப் (மேற்கு வைத்தியசாலை) ஆகியோரது பெயர்களை இணைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுமார் 30ற்கும் மேற்பட்ட சட்டவிரோத சிறுநீரக மாற்று நடவடிக்கைகள் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளதாக இந்தியக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆறு வைத்தியர்கள் சம்பந்தமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் முடிவில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்படவுள்ளதாகவும் சிறீலங்கா சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.



ஆனால், இந்தக் குற்றச்சாட்டு இந்தியாவின் திட்டமிட்ட சதி என சிறீலங்கா அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் டொக்டர் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார். சீபா உடன்படிக்கைக்கு இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்ட காரணத்தினால், இந்தியா இவ்வாறு சூழ்ச்சி செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, சிறுநீரகம் செயலிழந்த நோயாளர்களுக்கு தமிழ்நாடு, டில்லி மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து சட்டவிரோதமாக சிறுநீரகங்களை பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் தெலுங்கானாவை சேர்ந்த வைத்தியர் மற்றும் அவரது உதவியாளர்கள் உள்ளிட்ட பலரை, தெலுங்கானா குற்றப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். சட்டவிரோதமாக சிறுநீரகங்களை வழங்க முற்படுபவர்களை இவர்கள் கொழும்பிற்கு அனுப்ப கடவுச்சீட்டு மற்றும் சுற்றுலா விசா ஆகியவற்றை பெற்றுக் கொடுத்துள்ளதாக கூறப்படுகின்றது. மேலும், சந்தேகநபர்கள் சுமார் 30 சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை சிறீலங்காவில் ஏற்பாடு செய்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தெலுங்கானா குற்றப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காச் சட்டத்தின் படி, சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ள வைத்தியசாலையிலுள்ள மூவர் அடங்கிய குழுவை, சிறுநீரகத்தை பெறுபவர் சம்மதிக்க வைக்க வேண்டும். சிறுநீரகத்தை வழங்குபவர் தானாக முன்வந்து அதனை வழங்க வேண்டும். அதற்கான சட்ட உடன்படிக்கையில் அவர் கையொப்பம் இடவேண்டும். அத்துடன், சிறீலங்கா சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவரும் இரண்டு மருத்துவர்களும் அனுமதி வழங்கினால் சிறுநீரகமொன்றை தானமாக வழங்க முடியும். சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கும் குழுவிற்கு, ஒவ்வொரு சத்திர சிகிச்சைக்கும் 500 அமெரிக்க டொலர் இலஞ்சம் வழங்கப்படுவதாகவும் இது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சுரேஷ் பிரஜாபதி என்பவர் தெரிவித்துள்ளதாக தெலுங்கானா காவல்துறையினர் தெரியவித்துள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, இஸ்ரேலிய முகவர்களும் சிறீலங்கா மருத்துவர்களுடன் இணைந்து சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது சர்வதேச காவல்துறையின் விசாரணைகளில் இருந்து தெரியவந்திருகின்றது. 2012ம் ஆண்டு இஸ்ரேலிய நீதிமன்ற அறிக்கையில் அந்நாட்டு முகவர்களுக்கும் சிறீலங்கா மருத்துவர்களுக்கும் இடையில் சிறுநீரக வர்த்தகம் தொடர்பிலான தொடர்பு பேணப்பட்டமை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த 65 வயதான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான எட்வட் சான்டலர் என்ற நபர் சட்டவிரோத சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்.

*தொடர்ச்சி 14ம் பக்கம்*

# தந்தைக்காகத் தமிழீழத்தை பழிவாங்கும் தனையன்

'கலாநிதி' சேரமான்



தமிழீழம் என்பது எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது என்ற புனைவை மேற்கொள்வதற்குத் தமிழீழத்தின் கனவுலகப் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் எடுத்த முயற்சி மண்கவ்வியிருக்கும் நிலையில் இப்பொழுது நிலைமையைச் சமாளிப்பதற்குப் பல்வேறு சாக்குப் போக்குகளை அவருக்குப் பரிவட்டம் கட்டுவோர் முன்வைத்து வருகின்றனர்.

இவையெல்லாவற்றுக்கும் ஒவ்வொன்றாகப் பதிலளிப்பது எம்மைப் பொறுத்தவரை அனாவசியமானது. ஆனாலும் தமிழீழம் என்ற கருத்தியலின் தோற்றுவாய் பற்றியும், அதற்குச் செயல்வடிவம் கொடுத்து அதனை முன்னகர்த்திய பெருமை தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை மட்டுமே சாரும் என்பதையும் ஒரு சிறிய வரலாற்றுப் பதிவாக மேற்கொள்வது இன்றைய சூழமைவில் தவிர்க்க முடியாததாகின்றது.

இன்று தமிழீழம் என்று அழைக்கப்படும் ஈழத்தீவின் வடக்குக் கிழக்கு மாநிலங்களும், புத்தளம் மாவட்டமும் போர்த்துக்கேயரின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பகுதிகளாக விளங்கின. அதாவது இன்றைய தமிழீழம் அன்றொரு காலத்தில் யாழ்ப்பாண இராச்சியமாக அழைக்கப்பட்டது.

எனினும் பின்னைய காலங்களில் இவ் எல்லையில் மாற்றம் ஏற்பட்டு, ஈழத்தீவில் தமது படையினர் முதன் முதலில் கால்பதித்த பொழுது அங்கு யாழ்ப்பாணம், மாந்தோட்டை, சிலாபம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய ஐந்து தமிழ் இராச்சியங்களும், வன்னிச் சிற்றரசுகளும் இருந்ததாகத் தனது பதிவில் போர்த்துக்கேய படைத்தளபதி கப்டன் ஜோஆவோ ரிபெய்ரோ அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவரது குறிப்பின் படி பார்த்தால், போர்த்துக்கேயரின் வருகை நிகழ்ந்த பொழுது தமிழீழம் என்பது ஐந்து இராச்சியங்களாகவும், சிற்றரசுகளாகவும் பிளவுபட்டிருந்ததே தவிர, அவை அனைத்தும் தமிழர்கள் வாழும் நிலங்களாகவே திகழ்ந்தன.

ஈழத்தீவில் தமிழர்களின் தாயகமாக விளங்கிய இப்பகுதிகளை முதன் முதலாகத் தமிழீழம் என்று அழைத்த பெருமை சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்களையே சாரும். பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்குட்பட இலங்கைச் சட்ட சபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் சிறுமைப்படுத்தப்பட்டதன் எதிரொலியாக 1922ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் சம்மேளனம் என்ற அமைப்பை உருவாக்கிய அருணாச்சலம் அவர்கள், அவ் அமைப்பின் இரண்டாவது பொதுக் கூட்டத்தில் தமிழீழம் என்ற சொற்பதத்தை அறிமுகம் செய்து, பிரதேச வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையுடன் தமிழீழம் இயங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆனாலும் தமிழீழம் என்ற சொற்பதத்தை அருணாச்சலம் அவர்கள் அறிமுகம் செய்து இருபத்தாறு ஆண்டுகள் கடந்த நிலையில் 1948ஆம் ஆண்டின் இறுதியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் அன்று தனது கட்சிக்குத் தமிழீழ அரசுக் கட்சி என்று பெயர்சூட்டவில்லை. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தனது கட்சியின் பொதுக் கூட்டங்களிலும் தமிழீழம் என்ற சொற்பத்தை அவர் கையாளவில்லை. ஈழத்தீவின் வடக்குக் கிழக்கு மாநிலங்களில் தமிழர்களுக்கென்று சமஸ்டித் தமிழரசு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வலியுறுத்தினாரே தவிர, அச் சமஸ்டி அரசு தமிழீழம் என்று அழைக்கப்பட வேண்டும் என்பதில் அவருக்கு ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை. தவிர, தமிழரசுக் கட்சி என்று தமிழில் பெயர்சூட்டப்பட்ட தனது கட்சிக்கு பெடரல் பார்ட்டி (சமஸ்டிக் கட்சி) என்றே அவர் ஆங்கிலத்தில் பெயர்சூட்டியிருந்தார்.

**இச்செய்தி பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம். ஆனால் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு இவ் உண்மை புலப்படும். அதாவது கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலில் திளைத்தவரான உருத்திரகுமாரனின் தந்தை சட்டத்தரணி விசுவநாதன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அடிவாங்கியவர்.**

தேர்தல் மேடைகளில் தமிழர் தேசம் என்றும், தமிழர் தாயகம் என்று இடையிடையே எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும், அவரது தமிழரசுக் கட்சியினரும் முழக்கங்களை எழுப்பினாலும்கூட, இவையெல்லாம் பெரும்பாலும் தேர்தல் கோசங்களாகவே பயன்படுத்தப்பட்டன. இதற்கான உதாரணமாக 26.07.1957 அன்று சிங்களப் பிரதமர் சொலமன் பண்டாரநாயக்கவுடன் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் ஏற்படுத்திய பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நாம் குறிப்பிடலாம். அதில் தமிழர்கள் தேசிய சிறுபான்மையினர் என்றே விளிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அவ் ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாநிலங்கள் ஒற்றை நிர்வாக அலகாக வரையறுக்கப்படவில்லை. மாறாக வட மாகாணம் ஒரு பிரதேச சபையாகவும், கிழக்கு மாகாணம் குறைந்த பட்சம் இரண்டு பிரதேச சபைகளாகவும் வரையறுக்கப்பட்டிருந்தது. அதாவது இன்று வடக்கு, கிழக்கு என்று இரண்டு நிர்வாக அலகுகளாகக் கூறுபோடப்பட்டுள்ள தமிழீழ தாயகம், பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் மூன்று கூறுகளாக்கப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தை பண்டாரநாயக்கா பின்னர் கிழித்தெறிந்தது வேறு கதை.

ஆக, அன்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும், தமிழரசுக் கட்சியினரும் ஒப்புக்குத் தமிழர் தாயகம் என்றும், தமிழர் தேசம் என்றும், தமிழரசு என்றும் தேர்தல் மேடைகளில் முழங்கினார்களே தவிர, தமிழீழ தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை என்பது பற்றிய தெளிந்த பார்வையோ, அவை தொடர்பான பற்றுறுதியோ அவர்களிடம் இருக்கவில்லை எனலாம்.

அதற்காக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்களையோ, பௌத்த-சிங்கள மேலாதிக்கவாதத்திற்கு எதிரான எதிர்ப்பியக்கங்களையோ நாம் சிறுமைப்படுத்த முடியாது. காலி முகத்திடல் குந்துமறியல் போராட்டம் தொடக்கம் 1961ஆம் ஆண்டு நடைபெற்ற சிங்கள அரச நிர்வாக இயந்திரத்தைத் தமிழீழ தாயகத்தில் முடக்கிய வழமை மறுப்புப் போராட்டம் வரை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

தொடர்ச்சி 20ம் பக்கம்

### நாணயங்களுக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணத்தில் நாணயக் குற்றிகளுக்கு அண்மைக்காலமாக பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. வங்கிகளில் கூட நாணயங்கள் இல்லாத நிலையில், நாணயக் குற்றிகள் வேண்டும் என வங்கிகளில் முற்பதிவு செய்தே நாணயங்களை வர்த்தகர்கள் பெற்று வருகின்றனர். சில்லறை நாணயங்களின் தட்டுப்பாட்டுடன் 10 ரூபாய் தாளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. முன்னர் மீதிக்காசாக 1 அல்லது 2 ரூபாய்கள் இல்லையென அதற்கு பதிலாக இனிப்புப் பொருட்கள் வழங்கப்படும். ஆனால் இப்போது 10 ரூபாய்க்கு மீதி இல்லையென அதற்கு வர்த்தகர்கள் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

### இராணுவ பேருந்து மோதி ஒருவர் பலி

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினர் பயணித்த பேருந்து கார் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர். மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் பேருந்தும், கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த கார் ஒன்றும் மன்னார் மதவாச்சி வீதியில் உள்ள மீடியாபாம் பகுதியில் விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் காரில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்து செட்டிக்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

### முகநூலில் மூழ்கியுள்ள சிறீலங்காவின் அரச ஊழியர்கள்!

இலங்கையின் அரச அலுவலகங்களில் 60 வீதமான ஊழியர்கள் நாளாந்தம் தங்கள் பணிநேரத்தில் இரண்டு மணித்தியாலங்களை சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் செலவிடுவது ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இலங்கையை மையமாகக் கொண்ட தொழிற்சங்கமொன்று கடந்த மூன்று மாதங்களாக இந்த ஆய்வினை மேற்கொண்டது. சுமார் 350 அரசதுறை அலுவலகங்களில் இந்த ஆய்வு இடம்பெற்றது. இதன்போதே சுமார் 60 வீதமான அரசாங்க ஊழியர்கள் தங்கள் செல்பேசிகள் மூலமாக முகப்புத்தங்களை பார்ப்பதற்கு நாளாந்தம் தங்கள் பணிநேரத்தில் இரண்டு மணித்தியாலங்களை செலவிடுவது தெரியவந்துள்ளது. இந்தஆய்வு குறித்து சிறீலங்காவின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

### யானைச் சுட்டவர் தற்கொலை

காட்டு யானை ஒன்றை சுட்டுக் கொன்ற நபரொருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். எளுவன்குளம் – ரால்மடுவ பகுதியைச் சேர்ந்த செல்வராசா சிவபாதசுந்தரம் எனும் 46 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், தனது மனைவியைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்துள்ளார். அப் பகுதி சுற்றுலா விடுதி ஒன்றில் பணி புரிந்து வந்ததோடு, கடந்த வாரம் தந்தமுடைய யானை ஒன்றை சுட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இந்தநிலையில், குறித்த யானை உயிரிழந்ததை அறிந்த அவர், தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

முன்னதாக தனது தாய்க்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட இவர், தன்னால் ஒரு யானை சுடப்பட்டதாகவும் அந்த யானை இறந்து விட்டதாக தெரியவந்துள்ளது எனவும் அதனால் தானும் தற்கொலை செய்து கொள்வதாகவும் கூறியுள்ளார். அந்த இடத்தில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் சுடப்பட்ட நிலையில் உயிரிழந்து கிடந்த யானையின் உடலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

### கடும் புகையில் இலங்கைத் தீவு

இலங்கையில் வருடமொன்றுக்கு 3 ஆயிரத்து 500 மில்லியன் சிகரெட்டுகள் விற்பனையாகின்றன என்று போதைப் பொருள் தொடர்பான தகவல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் புபுது சுமன சேகர தெரிவித்தார். 2015ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ம் திகதி சிகரெட் விலையை இரண்டு ரூபாவால் அதிகரித்த போது, நிறுவனங்கள் வீழ்ச்சியடையும் என்றும், ஆட்சிமாற்றம் ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் கூறப்பட்டு அதற்கு எதிர்பு வெளியிடப்பட்டது. ஆனால், ஜனவரி 3ம் திகதி நிறுவனங்கள் தாமாக விலை அதிகரிப்பை மேற்கொண்டன. இலங்கையில் வருடமொன்றுக்கு 3 ஆயிரத்து 500 மில்லியன் சிகரெட்டுகள் விற்பனையாகின்றன. அப்படியானால், இரண்டு ரூபாய் விலை அதிகரிப்பு மூலம் நிறுவனங்களுக்கு 7 ஆயிரம் மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கிறது. இது அரசால் வருடமொன்றுக்கு மக்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவின் மொத்த செலவுக்கு நிகரான தொகையாகும் என்றும் அவர் கூறினார்.

### இலஞ்சம் பெறும் போது சிக்கிய அதிபரும் பௌத்த தேரரும்!

சிறீலங்காவின் கேகாலை, ரங்வல மஹாநாக மஹா வித்தியாலயத்தின் அதிபரும் பாடசாலையில் எழுதுவிளைஞர் பதவியில் இருக்கும் பௌத்த தேரர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தரம் 6 இற்கு மாணவர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்காக 60,000 ரூபா இலஞ்சமாக பெற்றுக் கொள்ளும் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கிடைக்கப் பெற்ற தகவலின் படி இவர்கள் பாடசாலை வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைப் பணிப்பாளர் சிரேஷ்ட காவல்துறை அதிகாரி பிரியன்த சந்திரசிறி தெரிவித்தார்.

### லெபனான் அமைதிப் பணியில் இனப்படுகொலை இராணுவம்!

லெபனான் நாட்டில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுவதற்காக இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்காவின் இராணுவம் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிறீலங்காவின் 10வது




அமைதிகாக்கும் படையணியினர் எதிர் வரும் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் செல்லவுள்ளனர். இந்தப் படையணியில் பத்து அதிகாரிகளும் நூற்று நாற்பது பேரும் அடங்குகின்றனர். குறித்த படையணிக்கு லெப்டினன்ட் கேணல் யூ.கே.டி. பி.பி.உடுகம தலைமை தாங்குகிறார். குறித்த பணிக்காக புறப்படுமுன் நடைபெறும் படையணி அணிவகுப்பு கடந்த வாரம் அநுராதபுரம் சாலியபுர, கஜபா ரெஜிமேன்ட் மத்தியஸ்தானத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த அமைதிகாக்கும் படையணி, ஒரு வருட காலத்திற்கு லெபனானில் சேவையில் ஈடுபடுமென இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது. முன்னர் இவ்வாறு அனுப்பபட்ட சிறீலங்காப் படையினர் ஹெய்டி உட்பட்ட நாடுகளில் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# புகலிடப் பதிவுகள்

## ஸ்ரார்ஸ்பேர்க் மாநகரில் தமிழர் புத்தாண்டு

திருவள்ளுவர் ஆண்டு 2047 தைத்திருநாள் ஸ்ரார்ஸ்பேர்க் மாநகரில் 17.01.2016 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் பொங்கி கதிரவனுக்கு நன்றி செலுத்தி நடைபெற்ற விழாவில் ஸ்ரார்ஸ்பேர்க் மாநகர உதவி நகரபிதா, ஸ்ரார்ஸ்பேர்க் ஐரோப்பிய அபிவிருத்திக் குழு உப தலைவி, ஐரோப்பிய பெண்கள் அமைப்புத் தலைவி, மற்றும் அருட்தந்தை ஜெரார்ட் அவர்களுடன் வேற்றின மக்களின் அமைப்பு பிரதிநிதிகள், தமிழ்ச் சோலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.







## பாரிசில் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற தமிழர் திருநாள் பொங்கல் விழா நிகழ்வு

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு இணைந்து நடாத்திய பொங்கல் விழா செந்தனி porte de Paris பகுதியில் 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சவினி சுர் ஓர்ஜ் மாநகர சபை உறுப்பினர் டேவிட் பாப்ர் (David Fabre) கலந்து கொண்டிருந்தார். மற்றும் பிரான்சு மூதாளர் அவை உறுப்பினர், தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். பல்வேறு கலைநிகழ்வுடன் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது.








## அரியாலை ஐக்கிய கழகம் நடாத்திய உள்ளரங்கச் சுற்றுப் போட்டிகள்






தமிழர் விடுயாட்டுத்துறை பிரான்சின் ஆதரவுடன் அரியாலை ஐக்கிய கழகம் பிரான்ஸ் 3வது வருடமாக நடாத்திய உள்ளரங்கச் சுற்றுப் போட்டிகள் அமரர் என்.ஞானலிங்கம் ஞாபகார்த்தமாக கரம் சுற்றுப் போட்டியும், அமரர் ச.விஜய குமார் ஞாபகார்த்தமாக சதுரங்கப் போட்டியும் கடந்த 24. 01.2016 ஞாயிற்றுக்கிழமை பொபினியில் இடம்பெற்றன. அகவணக்கத்துடன் ஆரம்பமான இப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என நூறுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர். போட்டியாளர்கள் கழகங்கள் சார்பிலும், தனி நபர்களாகவும் போட்டிகளில் பங்குபற்றினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது. குறிப்பாக 13 வயதிற்கு உட்பட்ட போட்டியாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.



போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்ற போட்டியாளர்களுக்கு 21.02.2016 அன்று அரியாலை ஐக்கிய கழகம் நடாத்தும் சுதேசியம் 2016 கலைமாலை நிகழ்ச்சியின்போது பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### பரிஸ் சோதியா தமிழ் கலைக் கல்லூரியின் பொங்கல் நிகழ்வில் இருந்து...

கல்லூரியின் பிரதம நிர்வாகி செல்வகுமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவ மாணவியரின் வாத்திய இசை நிகழ்வு, பொங்கல் தொடர்பான பேச்சுகள் போன்றவை இடம்பெற்றிருந்தன.






## ‘தாயகத்தில் இருந்து’ காந்தரூபன்

சிங்கள மேலாதிக்க வர்க்கத்தின் இரும்புப் பிடிக்குள் இருந்து விடுதலை பெறுவதற்கு துடித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் சர்வதேச ரீதியாக பயங்கரவாதப் போராட்டமாக பிரச்சாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தப் போராட்டம் உரிமைக்கான சுதந்திரப் போராட்டம் என்பதை பிரகடனப்படுத்த வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தியமை தவறில்லை. அவர்களின் தியாகம் நிறைந்த போராட்டம் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பதை உலகத்திற்கு இடித்துரைக்க வேண்டும்.

# புலிகளின் போராட்டம் சுதந்திரப் போராட்டம்



*21 ஆம் நூற்றாண்டில் தமிழினம் சுதந்திரப் போராட்டம் ஒன்றை நடத்தியது என்ற ஆவணப் பதிவொன்று அனைத்துலகுக்கும் வெளிப்படைத் தன்மையானதாக சென்றடைய வேண்டும். புலிகளின் போராட்டம் சுதந்திரப் போராட்டம் என்பது தமிழ் மக்களாலேயே பிரகடனம் செய்யப்படவேண்டும்.*

தமிழ் மக்களின் போராட்டம் சுதந்திரப் போராட்டமா, பயங்கரவாதப் போராட்டமா என்ற கேள்வி இன்றுவரை உலகிலுள்ள பல்லின மக்களையும் குடைந்துகொண்டிருக்கின்றது. ஏனெனில், புலிகள் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் நடத்திய யுத்தம் பயங்கரவாத யுத்தம் என்றும் சிறீலங்கா அரசும் அதன் துணை நாடுகளும் சர்வதேசத்தில் பெரும் பிரச்சாரம் ஒன்றை மேற்கொண்டுள்ளன. இந்தப் பிரச்சாரம் உலகத்திலுள்ள பிறமொழி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

உலகில் ஏனைய இனங்களைப் போன்ற உரிமைகளுடன் வாழ முற்பட்ட தமிழினத்தை சட்டத்தையும் சாத்திரங்களையும் கொண்டு அடக்க முற்பட்டதால் எழுந்த விடுதலைப் போராட்டம் இன்று பயங்கரவாத முலாம் பூசி மறைக்கப்பட்டுள்ளது. இந்த மறைப்பில் இருந்து தமிழர்கள் வெளியே துலங்க வேண்டுமாயின் தமிழரின் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் தேவை.

இலங்கைத் தீவில் பூர்வீக குடிகளாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள். முழு இலங்கைக்கும் உரித்துடையவர்களும் தமிழர்களே. ஆனால், எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் முழு இலங்கையிலும் பங்கு கேட்கவில்லை. வந்தேறு குடிகளாக சிங்களவர்கள் வருகை தந்தபோது இலங்கையில் தமிழினம் வாழ்ந்துகொண்டிருந்தது என்பதற்கு சிங்கள இலக்கியங்களிலேயே சான்றுகள் உள்ளன. அந்தச் சான்றுகளைக் காண்பித்து வழக்காடுவதற்கு தமிழ் மக்கள் எந்தவொரு கட்டத்திலும் முயன்றதில்லை. அதற்கான முயற்சிகளில் ஈடுபடப்போவதும் இல்லை.

ஆனால், காலம் காலமாக செறிந்து வாழ்ந்த இடத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதியுங்கள் என்றுதான் தமிழ் மக்கள் கேட்டார்கள். அந்த சுதந்திரத்தை சிங்களம் வழங்க மறுத்த காரணத்தால்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது என்பது வரலாற்று உண்மை. இந்த வரலாற்று உண்மையை ஏன் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்று இன்றுவரை தமிழ் மக்கள் கேள்வி எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அந்த உண்மையை சர்வதேசத்திற்கு உரிய முறையில் எடுத்துக்கூற முன்வரவில்லை.

வெறுமனே கவனயீர்ப்பு போராட்டங்களும், உண்ணாவிரதங்களும் மட்டும் நடத்திவிட்டு தமிழர்கள் வாழாவிருக்கின்றனர். இப்படி இருப்பதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. தனியே நின்று சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை தமிழினம் பட்டறிந்துவிட்டது.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் சிறுபான்மை இனங்கள் நடத்திய போராட்டங்கள் காலத்திற்கு காலம் அடக்கி அழிக்கப்பட்டதே வரலாறாக இருந்திருக்கின்றது. அந்தந்த நாடுகளின் பேரினவாத பூதங்களால் சிறுபான்மை இனங்கள் விழுங்கப்பட்டன. அந்த பேரினவாத பூதம் சிறுபான்மை இனங்களை விழுங்கி ஏப்பம் விட்டதுடன் அந்த மக்களின் கனவுகள், இலட்சியங்கள் அனைத்தையுமே துவம்சம் செய்தது.

இவ்வாறான ஏப்பம்விடும் பேரினவாத சக்திகளிடம் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள முற்பட்ட சில போராட்டவாதிகள் தங்கள் இனத்தையும் தங்களிடம் உள்ள பிரதேசங்களையும் சேர்த்து தனி நாடாக சுதந்திரப் பிரகடனம் செய்தனர். இதேபோன்ற சுதந்திரப் பிரகடனம் செய்வதற்கான முயற்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையிலேயே சிங்கள பேரினவாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களை

தொடர்ச்சி 20ம் பக்கம்

**‘தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் சுதந்திரப் போராட்டம்’ என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவேண்டும். வடக்கு மாகாண சபையில் உள்ள தீவிர சிந்தனை உள்ள சிவாஜிலிங்கம் போன்றோர் இந்த பிரேரணையைக் கொண்டு வந்து முதலமைச்சர் தலைமையில் நிறைவேற்றவேண்டும்.**




### பிரித்தானியாவில் அடைக்கலம் கோருவோரின் கடிதங்கள் போலியானவை!

பிரித்தானியாவில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இலங்கையர்களை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் சட்டத்தரணிகளின் கடிதங்கள் பெரும்பாலும் நம்பிக்கையற்றவையாக உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரக அதிகாரி ஒருவர் பிரித்தானிய உள்துறை அமைச்சுக்கு இந்த விடயத்தை கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். அரசியல் அடைக்கலம் கோரியவர்களுடைய 80 கோரிக்கைகளை பரிசீலித்தபோது அதில் 30 கோரிக்கைகளின் சட்டத்தரணிகள் கடிதங்கள் நம்பிக்கைக்குரியனவாக இருக்கவில்லை. குறிப்பாக குறித்த சட்டத்தரணிகளின் கடிதங்களில் தகமைகள் மற்றும் அங்கத்தவர் ஆவணங்கள் முறையாக இருக்கவில்லை என்று கொழும்பின் உயர்ஸ்தானிகரம் அறிவித்துள்ளது. சில சட்டத்தரணிகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் கைது உத்தரவு உள்ளவர்களுக்கும் கடிதங்களை வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் உயர்ஸ்தானிகரக அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

### நாடு திரும்பிய ஊடகவியலாளர் கைது!

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பிய மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் சிறீலங்காக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 21ம் திகதி குறித்த ஊடகவியலாளர் நாடு திரும்பிய போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவரை கைதுச் செய்ததாகவும் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறியமை தொடர்பிலேயே அவரைக் கைதுச் செய்ததாகவும் காவல் துறை ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 2012ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹிக்கடுவை பகுதியில் இருந்து சட்ட விரோதமாக படகு மூலம் புண்ணியமூர்த்தி சசிகரன் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளார். இந்நிலையிலேயே அவர் இலங்கைக்கு திரும்பியுள்ளார். இதன் போது விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் புண்ணியமூர்த்தி சசிகரனை கைது செய்து, அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

### கரடி தாக்கி ஒருவர் படுகாயம்

திருகோணமலை, நாமல்வத்த காட்டுப்பகுதியில் கடந்த 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒருவர் கரடியின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மூதூரைச் சேர்ந்த நான்கு



பிள்ளைகளின் தந்தையான இப்ராஹீம் அப்துல்லாஹ் (வயது 39) என்பரே கரடியின் தாக்குதலுக்குள்ளானார். கூலிக்காக மாடுகளை மேய்க்கும் இவர், வழமை போன்று காலையில் மாடுகளை மேய்ப்பதற்காக காட்டுப்பகுதிக்கு மாடுகளுடன் சென்றுகொண்டிருந்தபோதே கரடியின் தாக்குதலுக்குள்ளானார். இவரின் முகத்தில் பாரிய காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டேவிட் ஐயாவும் சம்பந்தர் ஐயாவும்

▸▸ டேவிட் ஐயா அனாதை ஆச்சிரமத்தில் பரிதாபச் சாவு.

▸▸ டேவிட் அய்யா, தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களுக்காக அாப்பணித்தவர்.



▸▸ தன் சொத்து முழுவதையும் தமிழ் மக்களுக்கு வழங்கியவர்.

▸▸ தான் காந்தீய கொள்கைகளை நம்பியபோதும் ஆயுதம் ஏந்திய போராளிகளை என்றுமே ஆதரித்து வந்தவர்.

▸▸ இந்தியாவில் தங்கியிருந்தபோதும் இந்திய அரசின் எந்த உதவிகளையும் அவர் பெற்றுக்கொண்டதில்லை.

▸▸ இறுதியில் யாரும் அற்ற நிலையில் கிளிநொச்சி அனாதை அச்சிரமத்தில் பரிதாபகரமாக உயிர் துறந்தார்.

▸▸ அவர் வாழும்போதும் சரி, அவர் இறந்தபின்பும்கூட யாரும் அவருக்கு எந்த விருதும் அளிக்கவில்லை.

சம்பந்தர் ஐயா,

▸▸ வாழ்நாள் முழுவதும் எம்.பி பதவி பெறுவதிலேயே கவனமாக இருக்கிறார்.

▸▸ புலிகள் பலமாக இருந்தபோது அவர்களே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி என்றார். அவர்கள் மூலம் எம்.பி பதவி பெற்றார்.



▸▸ புலிகள் அழிந்த பின்பு அவர்களை பயங்கரவாதிகள் என்றார். அவர்களை தான் ஒருபோதும் ஆதரிக்கவில்லை என்றார்.

▸▸ தன் சொத்தில் ஒரு சதமேனும் மக்களுக்கு வழங்காதவர். போதாக் குறைக்கு லிங்கநகர் மக்களின் காணிகளையும் அபகரிக்க முயல்கிறார்.

▸▸ குடும்பத்தோடு இந்தியாவில் தங்கியிருக்கிறார். தன் இருதய சிகிச்சையை கூட இந்திய உதவியுடனே செய்கிறார்.

▸▸ இதுவரை தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை. ஆனால் அவருக்கு வாழ்நாள் வீரர் விருது அளிக்கிறார்கள்.

▸▸ காணமல் போனவர்கள் யாரும் உயிருடன் இல்லை என்று பிரதமர் ரணில் கூறியுள்ளார். அப்படியென்றால் அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டார்களா? யார் அவர்களைக் கொன்றார்கள்? கொன்றவர்களுக்கு என்ன தண்டனை?

கொல்லப்பட்டவர்களுக்கு என்ன இழப்பீடு? இவற்றுக்கு விசாரணை உண்டா?

இவை குறித்து சம்பந்தர் அய்யாவோ அல்லது தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்கூட இது வரை வாய் திறக்கவில்லை.

இந்த நிலையில் சம்பந்தர் ஐயா என்ன சாதித்தவிட்டார் என்பதற்காக வாழ்நாள் வீரர் விருது வழங்குகிறார்கள்?

▸▸ சிறையில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்படவில்லை

▸▸ காணாமல்போனவர்கள்கண்டுபிடிக் கப்படவில்லை

▸▸ இடம் பெயர்ந்தோர் மீள் குடியேற்றம் செய்யப்படவில்லை

▸▸ இனப்பிரச்சனைதீர்க்கப்படவில்லை

அப்பறம் என்ன ம−−க்கு சம்பந்தர் ஐயாவுக்க விருது?

**கொடுப்பவனுக்கும் வெட்கம் இல்லை**
**வாங்கிறவனுக்கும் வெட்கம் இல்லை**

(முகநூலில் கடந்த வாரம் பரவலாக பரிமாறப்பட்ட தகவல் இது)

# இந்தியா கொடுத்த 40 பேருந்துகளை குடும்பச் சொத்தாக்கிய தொண்டமான்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரியை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 'டாடா சிட்டி ரைடர்' வகையைச் சேர்ந்த 40 பேருந்துகளை முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் கொங்கிரசின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான், மிகவும் இரகசியமான முறையில் விற்று, அப்பணத்தைத் தன்னுடைய சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிடம், 2008ம் ஆண்டு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே, இந்திய அரசாங்கத்தினால் 40 பேருந்துக்கள் வழங்கப்பட்டன. இவை, இந்திய ரூபாயில் 80 மில்லியன் ரூபாய் பெறுமதியானவையாகும்.

இந்தப் பேருந்துகள் யாவும், அன்னை கோதை என்டர் பிரைசஸ் என்ற தனியார் நிறுவனத்தின் பெயரிலேயே பதியப்பட்டுள்ளன. இந்த நிறுவனம், சௌமியமூர்த்தி தொண்டமானின் பாரியாரின் பெயரிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்களாக ஆறுமுகன் தொண்டமான் மகளான கோதை நாச்சியார் மற்றும் இலங்கை தொழிலாளர் கொங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முத்து சிவலிங்கத்தின் மகளான வாணி சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களை மேம்படுத்தும் வகையில் இந்தப் பேருந்துக்கள் கையளிக்கப்பட்டிருந்தபோதிலும் அவை, அம்மக்களின் நலன்புரியை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவில்லை. அவையாவும், குடும்ப உறவினர்கள் பயணம் செய்வதற்கும், சுற்றுலா செய்வதற்கும், அரசியல் நடவடிக்கைகளுக்கும் மற்றும் கட்சி உறுப்பினர்களின் மரண வீடுகளுக்கு செல்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 40 பேருந்துக்கள் தொடர்பில், சிறீலங்காவிற்கான இந்திய தூதுவராலயத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், இலங்கை தொழிலாளர் கொங்கிரசிடமோ அல்லது அந்த நிறுவனத்திடமோ இல்லை என்று வெளியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட, வடக்கிலேயே போதைப்பொருளின் பாவனை அதிகரித்து வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாக சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** இப்ப சந்தோசம் தானே..? இதனைத்தானே எதிர்பார்த்திருந்தீர்கள்..?

★★★★

**செய்தி:-** காணாமல் போனோர் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்ய, ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, தமக்கான கால எல்லையை நீடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.



**எழும் கேள்வி:-** ஏன் தமிழர்கள் கண்ணீர் விடுவதைப் பார்க்க இன்னும் ஆவலோ..?

★★★★

**செய்தி:-** இலங்கை முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் கொண்டவர்கள் அல்ல என அகில இலங்கை மக்கள் கொங்கிரசின் தேசியத் தலைவரும், சிறீலங்கா அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** சிறீலங்கா ஊர்காவல் படையில் இணைந்து தமிழினப் படுகொலையில் ஈடுபட்டவர்கள் எந்த நாட்டு முஸ்லீம்கள்..?

★★★★

**செய்தி:-** முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோர் கூறுகின்ற விடயங்களை பொருட்படுத்தவேண்டிய தேவையில்லையெனவும் அவை கடந்த வருடம் ஜனவரி மாதம் எட்டாம் திகதியுடன் செல்லுபடி அற்றதாகி விட்டதெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அப்ப உங்க கருத்து மட்டும்தான் செல்லுமா..?

★★★★

**செய்தி:-** விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஒட்டுக்குழுவைச் சேர்ந்த பிள்ளையான் கிழக்கு மாகாண சபை அமர்வில் கலந்துகொள்ள சிறைச்சாலை வாகனத்தில் பலத்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டார்.

**எழும் கேள்வி:-** இத்தனை பாதுகாப்புடன் பல இலட்சங்களைச் செலவு செய்து பங்கேற்க வைக்கும் அளவிற்கு அத்தனை முக்கியத்துவமானதா இந்த சபை அமர்வு?

★★★★

**செய்தி:-** சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 'செஸ்' விளையாட்டுக்கு தடை விதிக்குமாறு சவுதி அரேபியாவின் தலைமை மதகுரு ஷேக் அப்துல் பின்-அப்துல்லா அல்-ஷேக் கோரியுள்ளார்.

**எழும் கேள்வி:-** விளையாட்டைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டாரோ..?

★★★★

**செய்தி:-** அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா.சம்பந்தன் மௌனம் காப்பது ஏன் என கேள்வி எழுப்பி கடிதம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** அவர் 'எதிர்க்கட்சி'த் தலைவர் என்பது அரசியல் கைதிகளுக்குத் தெரியாதோ..?

★★★★

**செய்தி:-** கனேடிய தமிழர் பேரவை கடந்த சனிக்கிழமை நடத்திய பொங்கல் விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு 'வாழும் வீரர்' என்ற விருது வழங்கி மதிப்பளித்துள்ளது.

**எழும் கேள்வி:-** என்ன கொடுமை சரவணா..?

★★★★

**செய்தி:-** புளத்சிங்கள எகல்ஓயா பிரதேசத்தில் கடவுச்சீட்டின்றி தங்கியிருந்த 36 வயதான சீனக் குடிமகன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**எழும் கேள்வி:-** தானும் அந்த நாட்டுக் குடிமகன்தான் என்று எண்ணிவிட்டாரோ..?

★★★★

**செய்தி:-** நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை குறைக்க தன்னிச்சையாகவே முன்வந்த ஒரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என சிறீலங்கா அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** எட்டாத பழம் புளிக்கும் என்று இதனைத்தானோ சொல்வது..?

★★★★

**செய்தி:-** யாழ்ப்பாணத்தில் நாணயக் குற்றிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

**எழும் கேள்வி:-** பெறுமதி இல்லையாக்கும்..?

# பிரெஞ்சு தேசச் செய்திகள்

## பயங்கரவாதத் தாக்குதலில் உயர்கல்விப் பாடசாலைகள்

## போலி எச்சரிக்கையா? பயங்கரவாதத் தந்திரமா?

கடந்த 26ம் திகதி செவ்வாய்க்கிழமை பணிப்புறக்ணிகப்புகளும், சாலைப் போக்குவரத்துக்களும், பரிசையும் அதன் வெளிமாவட்டங்களையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தவேளை, வெடிகுண்டுப் புரளிகளும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தத் தவறவில்லை! செவ்வாய்க்கிழமை, பரிசின் பள்ளிகளில் வெடிகுண்டு வைக்கப்பட்டதான அச்சம், பெரும் பீதியையும், கலவரத்தையும் ஏற்படுத்தியது. பரிசின உயர்நிலைப் பள்ளிகளான lycées மாணவர்கள் செவ்வாய் காலை, மிக மிக அவசரமாகக் காவற்து–றையினரால் வெளியேற்றப்பட்டனர். பொதிவெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த எச்சரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலைநகரின் மிகவும் முக்கியமான, பிரபலமான, உயர்நிலைப் பள்ளிகளே இந்த போலி வெடிகுண்டுத் தகவலால் குறிவைக்கப்பட்டன.

Charlemagne (பரிஸ் 4), Henri-IV (பரிஸ் 5), Louis-le-Grand (பரிஸ் 5), Montaigne (பரிஸ் 6), Fénelon (பரிஸ் 6), Condorcet (பரிஸ் 9) ஆகிய பாடசாலைகளே இவ்வாறு குறிவைக்கப்பட்டதில், 9.800 மாணவர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகினார்கள். இந்தப் பாடசாலைகள் உடனடியாகக் காவற்துறையினரால் பொறுப்பேற்கப்பட்டன. மாணவர்கள் அமைதியாக வெளியேற்றப்பட்டனர். பல மாணவர்கள், அவர்களின் பாடசாலைப் பைகள், உபகரணங்கள் என்பவற்றறைப் பள்ளியில் விட்டுவிட்டு உடனடியாக வெளியேறியிருந்தனர்.

வெடிகுண்டு செயலிழக்க வைக்கும் படையினரின் (déminage) ஆய்விற்குப் பின்னர், பரிசின் காவற்துறை ஆணையகம், மெது மெதுவாக, நண்பகலிற்குப் பின்னர் இந்த வெடிகுண்டு எச்சரிக்கையைத் தளர்த்தத் தொடங்கியது. இதனைப் பரிசின் கல்வித்திணைக்களம், மாணவர்களிற்குத் தங்களது டுவிட்டர் மூலம் அறிவிக்கத் தொடங்கியது.




அதேநாள் மாலை (செவ்வாய்க்கிழமை) பொபினி நீதிமன்றம், பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தவேளை, 15.00 மணியளவில், வெடிகுண்டு எச்சரிக்கை வழங்கப்பட்டது! 'அனைவரும் வெளியேறுங்கள்', 'அனைவரும் வெளியேறுங்கள்' என்ற எச்சரிக்கைக் கூச்சலுடன் காவற்துறையினர் அனைவரையும் வெளியேற்றினார்கள். நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்றப் பணியாளர்கள், பொதுமக்கள் என அனைவரும், வெளியேற்றப்பட்டனர். ஆனால் விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்ட கைதிகளும், அவர்களின் காவலிற்கு நின்ற காவற்துறையினரும், வெடிகுண்டு எச்சரிக்கை வழங்கப்பட்டும், அந்த இடத்தை விட்டு நகரவில்லை. 'ஆபத்தாக இருந்தாலும், பாதுகாப்புக் காரணங்களிற்காக நாங்கள் கைதிகளை உள்ளேயே வைத்திருந்தோம். கைதிகள் பயமடைந்தாலும், நாங்கள் அனைவரும் அவர்களுடனேயே இருந்ததால், அவர்களின் பரபரப்பு அடங்கி அமைதியாகவே இருந்தனர்' எனக் காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். வெடிகுண்டு எச்சரிக்கையை அடுத்து, நீதிமன்றம் முழுவதும் குண்டு செயிழக்கச் செய்யும் படையினரால், சோதனை செய்யப்பட்டது. ஆனாலும் எதுவும் கண்டுபிடிக்கப் படாததால் மீண்டும் 17.00 மணிக்கு நீதிமன்றம் தனது பணியை ஆரம்பித்தது.

பரிசின் பள்ளிகளை நோக்கிப் பயங்கரவாதத் தாக்குதல், வெடிகுண்டு மிரட்டல்கள் எனத் தொடரந்து நடாத்தப்பட்டு வருகின்றன. வியாழக்கிழமை காலையும் பரிசின் உயர்கல்விப் பள்ளிகள் ஐந்திற்கு, வெடிகுண்டு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. வெடிகுண்டுத் தாக்குதலும், ஏ.கே.47 இனால் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடாத்தப்பட உள்ளதாகவும், இந்த எச்சரிக்கைத் தொலைபேசி அழைப்புத் தெரிவித்துள்ளது. Louis-le-Grand (பரிஸ்–5), Charlemagne (பரிஸ்–4), Condorcet (பரிஸ்–9), Hélène Boucher (பரிஸ்–20) ஆகிய பள்ளிகளிற்கே இன்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எச்சரிக்கை அழைப்பு வந்து, சில நிமிடங்களிலேயே, காவற்துறையினர் வருவதற்கு முன்பாகவே, பள்ளி நிர்வாகங்கள், மாணவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுத்திருந்தன. சிறிது நேரத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் பெருமளவான காவற்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் அனுப்பப்பட்டனர். அந்தப் பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன. இந்த அநாமதேய அழைப்புக்களைத், தடம் பிடிக்கும் தீவிர முயற்சியில், காவற்துறையினர் இறங்கி உள்ளனர்.

நவம்பர் பதின்மூன்றின் பயங்கரவாதத் தாக்குதலிற்கு, முந்தைய சில நாட்கள், இப்படியான போலியான வெடிகுண்டு எச்சரிக்கைகைகள், தொடருந்து நிலையங்களிலும், முக்கிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் எந்த எச்சரிக்கைகளும் புறக்கணிக்கப்படாமல், காவற்துறையினரால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்டுகின்றன.

## குடியுரிமைப் பறிப்புச் சட்ட முரண்பாடு நீதியமைச்சர் பதவி விலகினார்!

பிரான்சின் நீதியமைச்சராக இருந்து வந்த, கிறிஸ்தியோன் தொபிரா (Christiane Taubira), பதிவி விலகி உள்ளார். இது பிரான்சின் அரசியலில், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரைச் சில ஊடகங்கள் குரங்கு என வர்ணித்த போதெல்லாம் இவரிற்காக, ஊடகங்களை எதிர்த்து நின்ற அரசாங்கம், இப்போது இவரைப் பதவி விலக வைத்துள்ளது.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களின், குடியுரிமைப்





பறிப்புச் சட்டத்தினை, அதுவும் முக்கிமாக இரட்டைக் குடியுரிமையுடன், பயங்கரவாதச் செயற்பாடுகள் புரிபவர்களின் குடியுரிமையை இரத்துச் செய்யும் சட்டத்தினை, உருவாக்கும் பேராட்டத்தில், மனுவல் வால்சும், ஜனாதிபதியும் பெரும் பிரயத்தனம் செய்து வருகின்றனர். இது இடதுசாரிகளிடையே பெரும் பிளவுகளையும், விவாதங்களையும் ஏற்படுத்தி உள்ளது. இந்தச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டிய நீதியமைச்சர், இதற்கு எதிராக நின்று வந்துள்ளார். இந்த அழுத்தங்களின் அடிப்படையில் இவர் சமர்ப்பித்த பதவி துறப்புக் கடிதம், ஜனாதிபதியாலும் பிரதமராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

'கிறிஸ்தியோன் தொபிரா, சட்டமாற்றங்களையும் நீதித்துறையையும் இதயசுத்தியுடனும், பெரும் மனத் திடத்துடனும், உறுதியுடனும் நடாத்தி வந்துள்ளார். ஓரினத் திருமணங்களைச் சட்ட மூலம் (mariage pour tous) ஆக்கியதில் இவரது பங்கு அளப்பரியது' என ஜனாதிபதி இவரின் பதவி விலகலின் போது தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை இந்தியாவில் வைத்து ஜனாதிபதி வழங்கி உள்ளார்.

பிரான்சுவா ஒல்லோந்தின், அரசாங்கத்தில் நீண்ட காலம் பணியாற்றிய அமைச்சர்களில் இவரும் ஒருவர். 3 வருடம் 8 மாதம் 11 நாட்கள் இவர் நீதியமைச்சராக இருந்துள்ளார்.

மனுவல் வால்சின் அரசில் அடிக்கடி அமைச்சர்கள் மாற்றப்படுவது ஒன்றும் புதிதல்ல. இந்த நீதியமைச்சின் (Garde des Sceaux) பதவிக்கு, மனுவல் வால்சின் மிக நெருங்கியவரான ஜோன்–ஜக் உர்வோ (Jean-Jacques Urvoas) நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. 56 வயதுடைய இவர் இப்போது நீதியமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இவர் ஏற்கனவே சோசலிசக் கட்சியின் முக்கிய பொறுப்புக்களை வகித்து வந்தவர். 2015 இல் உருவாக்கப்பட்ட புதிய புலனாய்வுச் சட்டத்தை இயற்றுவதில், இவர் கிறிஸ்தியோன் தொபிராவிற்கு சட்டப் பிரதிநிதியாக இய்கியவர். அவசரகாலத் தடைச்சட்டத்தின் சட்டப் பிரிதிநிதியாகவும், இவர் செயற்பட்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரெஞ்சுப் படைகள் மீது பாலியல் குற்றச்சாட்டு!

மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாட்டில் அமைதி காக்கும் பணிக்காகச் சென்றுள்ள பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளின் படையினர், சிறுமிகளுக்கு இனிப்புகளைக் கொடுத்து பாலியல் வக்கிரத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை இதுதொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளதாகவும், புதிதாக 6 குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளதாகவும், ஐ.நா. மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ளது. உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாட்டில் அமைதி காக்கும் பணிக்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தான் இந்த அக்கிரமச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் 7 வயது சிறுமியை குடிநீர் போத்தல் மற்றும் இனிப்புத் தருவதாகக் கூட்டிச் சென்று பிரெஞ்சுப் படையினர் வன்புணர்வு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தற்போது ஐ.நா. விசாரணைக் குழு விசாரணையில் இறங்கியுள்ளது.



பாதிக்கப்பட்டதாக கூறப்படும் ஐந்து சிறுமிகள் மற்றும் ஒரு 9வயதுச் சிறுவனிடம் அதிகாரிகள் குழு விசாரணை நடத்தியது. இதன்போது சிறுவன் தன்னை ஓரினச் சேர்க்கையில் பிரெஞ்சுப் படையினர் ஈடுபடுத்தியதை புரியவைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐ.நா.மனித உரிமை ஆணையக அதிகாரி ஜீத்ராத் அல் ஹுசேன் கூறுகையில், பிரெஞ்சுப் படையினர் மீதுதான் அதிக குற்றச்சாட்டுக்கள் வருகின்றன என்றார். 7 வயது சிறுமியிடம் நிகழ்த்தப்பட்ட அக்கிரமச் செயலானது 2014ல் நடந்துள்ளது. தலைநகர் பாங்குய் அருகே உள்ள விமான நிலையப் பகுதியில் வைத்து இதைச் செய்துள்ளனர் பிரெஞ்சுப் படையினர் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா. உதவி பொதுச் செயலாளர் அந்தோணி பான்பரி, இந்த பாலியல் வக்கிரச் செயல்கள் குறித்துக் கூறும்போது கண்ணீர் வடித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் செயல்களில் ஈடுபட்டோர் வரிசையில் பிரெஞ்சுப் படையினர் தவிர தற்போது வங்கதேசம், கொங்கோ, நைஜர், செனகல் ஆகிய நாடுகளிலிருந்து சென்றுள்ள காவல் படையினரும் சேர்ந்துள்ளதாக பான்பரி கூறியுள்ளார். இதுவரை இதுபோன்ற பாலியல் குற்றங்களில் ஈடுபடும் ஐ.நா. அமைதி காப்புப் படை நாடுகளின் பெயர்களை ஐ.நா வெளியில் சொன்னதில்லை.தற்போதுதான்முதல்முறையாகஅது அம்பலப்படுத்தியுள்ளது.

முன்பு பிரான்சின் காலணித்துவ நாடாக இருந்த மத்திய ஆபிரிக்கக் குடியரசில், பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவர்கள். 2013ம் ஆண்டு பிற்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. உள்நாட்டுப் போராக விரிவடைந்ததையடுத்து, பல ஆயிரம் பிரெஞ்சுப் படையினர் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றும் சிறீலங்காப் படையினரும் அந்நாடுகளில் பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்டபோது சிறீலங்காப் படையினர் மிக மோசமான, கொடூரமான பாலியல் வல்லுறவுகளைப் புரிந்ததும், அப்பெண்களைப் படுகொலைகள் செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முடிசூடிய மன்னா...

சாட்சியங்களையே அளித்து வருவதால் அவரை தற்போது குற்றவாளியாக கருதமுடியாது. விசாரணைக்கு பின்னர் வழக்கு தொடர்ந்து, நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி அதனூடாக குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால்தான் அவர் குற்றவாளி என்று அவர் மகிந்தவிற்கும் ஒரு எச்சரிக்கை மணியை அடித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, யோஷித ராஜபக்சவின் வெளிநாட்டு கடற்படை புலமைப் பரிசில் மற்றும் பயிற்சிகளுக்காக மகிந்த அரசாங்கத்தால் 22.2 மில்லியனுக்கும் (இரண்டு கோடியே 20 இலட்சம் ரூபா) அதிகமான நிதி செலவிடப்பட்டுள்ளதாக, அமைச்சர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் நலிந்த ஜெயதிஸ்ஸ எழுப்பி கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இதனை வெளியிட்டுள்ளார். பிரித்தானியாவில் மேற்கொண்ட இளம் அதிகாரிகளுக்கான பாடத்திட்டத்திட்டத்திற்காக 6,285,219 ரூபா, பிரித்தானியாவில் கப்பல் தொடர்பான கடற் பயிற்சிகளுக்காக 7,031,614, ரூபா, பிரித்தானியாவில் உபலுத்தினல் தொழிநுட்ப பயிற்சிகளுக்காக 536,670 ரூபா, உக்ரேனில் மேற்கொண்ட சிறப்புக் கல்விப் பயிற்சி – தேசிய பாதுகாப்பு பல்கலைக்க–ழகத்திற்காக 3,573,317 ரூபா என கடந்த ஆட்சிக் காலத்தில் செலவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். தற்போது யோஷித இவை தொடர்பாக இராணுவ நீதிமன்றில் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டிவரலாம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, இராணுவ நீதிமன்றில் யோஷிதவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடற்படைச் சட்டத்தை மீறியதாகவும், அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் யோசித ராஜபக்சவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட உள்ளது. ஏற்கனவே இது தொடர்பாக முழு அளவில் கடற்படையினர் விசாரணைகளை நடத்தியிருந்ததோடு, இந்த விசாரணை அறிக்கை ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. திரட்டப்பட்டுள்ள சாட்சியங்கள் விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெரும்பாலும் யோசித ராஜபக்சவிற்கு எதிராக இராணுவ நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால பரிந்துரை செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, படை அதிகாரியாக கடமையாற்றி அதே காலப்பகுதியில் தொலைக்காட்சி ஊடக நிறுவனத்தின் தலைவராகவும் யோசித கடமையாற்றியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. படையதிகாரியாக கடமையாற்றும் வேளையில் வேறு நிறுவனமொன்றில் பதவி வகிப்பது இராணுவச் சட்டத்திற்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, கடற்படைக்குரிய விதிகள் எதனையும் பின்பற்றாமல் பல முறை வெளிநாட்டு பயணம் மேற்கொண்டிருந்தார். கடற்படையினரிடம் எழுத்து மூல அனுமதி பெற்றுக்கொள்ளாது பல தடவைகள் வெளிநாட்டு பயணங்களை யோசித மேற்கொண்டுள்ளளார். கடற்படைத் தளபதிகளுக்கு கூட இவ்வாறான வரப்பிரசாதம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. மேலும், 30 தடவைகளுக்கு மேல் வெளிநாட்டு பயணங்களை யோஷித மேற்கொண்டுள்ளார். அவரின் வெளிநாட்டுப் பயணங்களுக்காகவும் பெருந்தொகை பணம் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவை குறித்தும் விசாரிக்கப்படவுள்ளன. இராணுவ நீதிமன்றில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் யோசித தண்டிக்கப்படுவார் என பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# (ஏ)மாற்றம் காணும் நல்லாட்சி!




– கந்தரதன்

இன்று நல்லாட்சி நிலவுகின்றது என பிதற்றிக்கொள்பவர்கள் கண்முன்னாலேயே சிங்களத்தின் கபடத்தனம் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கு ஆதாரமாக தமிழர்களின் நிலப்பரப்பான முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தில் பாரிய பௌத்த விகாரையொன்று வேகமாக உருவாக்கப்பட்டு வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த முடியாதவர்களாக, இல்லை இல்லை இதற்கு உடந்தையாகவே தமிழ்பேசும் தலைவர்களும் இருந்துவருகின்றார்கள்.

ஈழப்போர் முடிவுற்றதன் பின்னர் இந்த பகுதியில் புதிதாக குடியேற்றப்பட்ட மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிங்களவர்களின் பயன்பாட்டுக்காக என்ற போர்வையில் இந்த பாரிய பௌத்த விகாரை ஒன்று கட்டியெழுப்பப்படுகிறது. சிறீ திஸ்ஸபுர குணரத்ன ஹிமி என்ற தேரர் இந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்த விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கு நிதியுதவி சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ் வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது. எங்கள் கண்ணை எம் கைகளாலே குற்றும் நிலை போன்றதே இது.

குறித்த பௌத்த விகாரையை பார்ப்பதற்கென அப்பிரதேசத்துக்கு ஏராளமான சிங்கள மக்கள் வந்து செல்லத் தொடங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**இந்த விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கு நிதியுதவி சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ் வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது. எங்கள் கண்ணை எம் கைகளாலே குற்றும் நிலை போன்றதே இது.**



இது அப்பகுதி மக்களை ஆத்திரமூட்டி வருகின்றது. அங்கு வரும் சிங்களவர்கள், தமிழ் மக்களை சீண்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்திலும் இவ்வாறான ஒரு பௌத்த விகாரையை அமைக்கவேண்டும் என சிங்கள மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த ஆரம்பத்தில், சிங்கள மாணவர்களை யாழ். பல்கலையில் அனுமதிப்பதற்கு தமிழ் சமூகத்தால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தமை நினைவிருக்கலாம். இப்பகுதியில் கூட பலதடவைகள் நாம் இதுகுறித்து எழுதியிருந்தோம். இன்று ஒட்டகத்திற்கு இடம்கொடுத்த கதையாக, யாழ். பல்கலை வளாகத்தினுள் ஒரு பாரிய புத்தவிகாரையை அமைக்கும் எண்ணம் முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் அதிகளவில் உள்ளீர்க்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வித்தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கேனும் போதியளவு வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கடுமையான அரசியல் மயப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு சிங்கள மாணவர்களை உள்ளீர்க்கும் வீதம் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது ஆரோக்கியமானதல்ல, போரின் பின்னர் வடக்கு கிழக்கு கல்வி அபிவிருத்திக்கு அரசாங்கம் வழங்கி வரும் பங்களிப்பு திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என விஜயகலா மகேஸ்வரன் நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத்தீவில் இருந்த ஒரே ஒரு தமிழ் பல்கலைக்கழகம், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் திட்டமிட்டு சிங்கள மாணவர்களை அங்கு சிறீலங்கா அரசு நுழைத்து. அது படிப்படியாக அவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றது ஒரு புறம் என்றால், சிங்கள தேசத்தில் உள்ள பல்கலைக் கழகம் போல மாற்றும் ஒரு திட்டமிட்ட இன அழிப்பு அரங்கேறத் தொடங்கியுள்ளது.

அதன்படி சிங்கள மாணவர்களால் முதலில் பல்கலை வளாகத்துக்கு வெளியே வெசாக் தினம் கொண்டாடப்பட்டது. அடுத்த தடவை அது பல்கலை வாசலில் பவுத்த கொடியை ஏற்றி பல்கலைக்குள்ளே வெசாக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. அங்கு திட்டமிட்டு சேர்க்கப்பட்ட சிங்கள மாணவர்கள் சிலர் தமிழ்மாணவர்களின் போராட்டங்களை படையினருக்கு காட்டிக்கொடுக்கும் வேலையை செய்து வந்தார்கள். இதனால் பல தமிழ் பல்கலை மாணவர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இப்படியாக விஸ்வரூபம் எடுக்கும் திட்டமிட்ட இன அழிப்பின் அடுத்த கட்டமாக பல்கலை வழக்கத்தின் உள்ளே சிங்கள மாணவனும், மாணவியும் பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைககளில் ஈடுபட்டமை அதிர்ச்சி அளிக்கின்றது.

தமிழர்களின் மூலதனமான கல்வியை அழிக்க சிங்கள அரசு எடுக்கும் முயற்சிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காப்பதன் ஊடாகப் பல்கலை நிர்வாகமும் அதற்கு உடந்தையோ என்று ஐயம்கொள்ள வைக்கின்றது. ஈழத்தமிழர்களின் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் கல்வியில் அக்கறை உள்ள அனைவரும் இவ்விதமான செயற்பாடுகளை தடுக்க முன்வரவேண்டும் என ஆர்வலர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த 2011 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மாணவர்கள் வெளியேறவேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தமை நினைவிருக்கலாம். யாழ் பல்கலைக்கழகத்திற்கு வழமைக்கு மாறாக சிங்கள மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இணைத்ததையடுத்து பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மாணவர்களை வெளியேறும்படி பல்கலைக் கழக நிர்வாகம் அறிவிப்பை விடுத்திருந்தது. ஏற்கனவே மருத்துவபீடம் மற்றும் விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த 40 சிங்கள மாணவர்கள் விடுதியில் கல்வி கற்றுவந்துள்ள நிலையில் விஞ்ஞான பீடத்திற்கு 140 மாணவர்களும் முகாமைத்துவ பீடத்திற்கு 50 மாணவர்களும் மேலும் வருகை தந்திருந்தனர். யாழ் பல்கலைக்கழக சூழலில் சிங்கள மாணவர்களும் அவர்களை அழைத்து வந்துள்ள பெற்றோர்களும் நிறைந்து காணப்பட்டனர். இதனால் தமிழ் மாணவர்கள் அச்சமடைந்தனர். இதனைத் தட்டிக் கேட்ட மாணவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர். இதன் தொடர்ச்சியாக அண்மையில் இடம்பெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் அதிகளவான சிங்களமாணவர்கள் பட்டம் பெற்றிருந்தனர்.

இது இவ்வாறிருக்க, வடக்கில் வவுனியா மாவட்டத்தில் 23 ஆயிரத்து 777 ஏக்கர் காணி இராணுவத்தின் அபகரிப்பில் உள்ளதாகவும் அதனை எவரும் கண்டுகொள்ளவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் வளமான, கேந்திர முக்கியத்துவமான பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. வடக்கில் மொத்தமாக 71 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சிறிலங்கா இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இவற்றில் விவசாய நிலங்கள், தொழிற்புலங்கள், பொதுமக்களின் காணிகள், அரச காணிகள், பொதுமக்கள் அலுவலகங்கள் எனப் பலவும் அடங்குகின்றன.

வடக்கு மாகாணத்தில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே அதிகளவான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக அந்த மாவட்ட செயலகத்தின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளையும் வாழ்வாதாரத் தொழிலையும் இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*தொடர்ச்சி 14ம் பக்கம்*

# தடம்மாறும் சம்பந்தரும், தடுமாறும் விக்னேஸ்வரனும்

**சேயோன்**



தமிழர்களின் தலைமைகள் என்று கூறிக்கொள்வோர் தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை எங்கே கொண்டுபோய் புதைக்கப் போகின்றார்கள் என்ற எண்ணும் அளவிற்குக் கடந்த ஒரு வார காலப் பகுதிகள் நிகழ்ந்தேறிய அரசியல் சம்பவங்கள் அமைந்துள்ளன.

ஒருபுறத்தில் ஸ்கொட்லாந்தின் சமஸ்டி முறையை ஆராய்வதாகக் கூறிக்கொண்டு சம்பந்தரும், அவரது பரிவாரங்களும் பிரித்தானியாவில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு அரசியல் பித்தலாட்டத்தில் ஈடுபட, மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றீடான நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதப்பட்ட தமிழ் மக்கள் பேரவையோ சமஸ்டித் தீர்வு எனும் பெயரில் தமிழீழ தேசத்தின் தனியரசு இலட்சியத்திற்கு சாவுமணி அடிக்கும் வகையிலான தீர்வுப் பொதியொன்றை வெளியிட்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுப் பொதி பற்றிய எமது பார்வையை முன்வைப்பதற்கு முன்னர், சம்பந்தரின் ஸ்கொட்லாந்து சமஸ்டிப் பித்தலாட்டம் பற்றிய சில உண்மைகளை பிட்டு வைப்பது அவசியமாகிறது.

முதலாவதாக பிரித்தானியா (ஐக்கிய இராச்சியம்) ஓர் ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கொண்ட அரசு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது பிரித்தானியாவைப் பொறுத்தவரை அதில் இறைமை (இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம்) பொருந்திய கட்டமைப்பாகத் திகழ்வது அதன் வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றம் ஆகும். இந் நாடாளுமன்றம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒன்று முடியாட்சி பீடம். அடுத்தது பிரபுக்கள் சபை. மற்றையது பொதுச் சபை. இதில் முடியாட்சி பீடத்தைக் குறியீடு செய்பவராக இன்று எலிசபெத் மகாராணியார் திகழ்கின்றார். அடுத்த கட்டமைப்பான பிரபுக்கள் சபையானது பிரித்தானியாவின் நிலப்பிரபுக்களையும் (குறுநில மன்னர்கள் போன்றவர்கள்), வாழ்நாள் நிலப்பிரபுக்களையும் (கௌரவ அடிப்படையில் பிரபுப் பட்டம் பெற்றவர்கள்) கொண்ட அவையாகத் திகழ்கின்றது. இவற்றில் மூன்றாவது கட்டமைப்பான பொதுச் சபையே மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்டமைப்பாகும்.

பொதுவாக பிரித்தானிய மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் அல்லது அவர்களைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் பொதுச் சபையிலேயே அறிமுகம் செய்யப்படும். ஆனாலும் அவற்றைக் கேள்விக்குறியாக்குவதற்கும், தேவையேற்பட்டால் அவற்றை நிறைவேற்றவிடாது இழுபறி நிலையை ஏற்படுத்துவதற்குமான அதிகாரம் பிரபுக்கள் சபைக்கு உண்டு. இவ்விரு சபைகளையும் ஒரு சட்டமூலம் வெற்றிகரமாகக் கடந்தாலும், அதன் பின்னர் முடியாட்சி பீடத்தின் (மகாராணியின் ஒப்புதலை) அது பெறவேண்டும். அல்லாது போனால் அது சட்டம் ஆகாது.

ஆக வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றத்தின் இம் மூன்று பிரிவுகளும் ஒத்திசைவாக இயங்கும் பொழுது, பிரித்தானிய மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கக் கூடிய அல்லது அவர்களைப் பாதிக்கக்கூடிய எந்தச் சட்டமும் நிறைவேற்றப்படலாம். அவ்வாறான இறைமையைக் கொண்ட கட்டமைப்பாகவே வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றம் திகழ்கின்றது.

தற்போதைய பிரித்தானியா என்பது நான்கு தேசங்களைக் கொண்டது: இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவை அந் நான்கு தேசங்களாகும். இதில் வேல்ஸ் பல நூற்றாண்டுகளாகவே இங்கிலாந்தின் முடியாட்சி பீடத்திற்கு உட்பட தேசமாகவே விளங்கி வந்துள்ளது. மறுபுறத்தில் வட அயர்லாந்து என்பது 1921ஆம் ஆண்டு அயர்லாந்து தேசத்திற்கு சுதந்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானியாவின் நில ஆளுகைக்கு உட்பட்ட தேசமாகப் பரிணமித்துள்ளது. அதற்கு முன்னர் வட அயர்லாந்து என்று அழைக்கப்பட்ட ஒரு தேசம் பிரித்தானியாவில் இருக்கவில்லை. மாறாக பிரித்தானியாவின் காலனியாக விளங்கிய அயர்லாந்து என்ற தேசத்திற்கு உட்பட அதன் வடபுல நிலப்பகுதியாகவே வட அயர்லாந்து விளங்கியது.

ஆனால் ஸ்கொட்லாந்தின் நிலைமை அவ்வாறு இல்லை. பல நூற்றாண்டுகளாகத் தனியரசாக விளங்கிய ஸ்கொட்லாந்து தேசம், 1707ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் இணைந்து கொண்டது. அதற்கு முன்னர் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக (1603ஆம் ஆண்டு முதல்) இங்கிலாந்தையும், ஸ்கொட்லாந்தையும் ஒரே மன்னர்களே ஆட்சி செய்தாலும், இரண்டு வெவ்வேறு அரசுகளாகவே அவை நிர்வகிக்கப்பட்டு வந்தன. எனினும் 1707ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்றமும், இங்கிலாந்தின் நாடாளுமன்றமும் ஒரு நாடாகச் சங்கமிக்கும் சட்டங்களை நிறைவேற்றியதை அடுத்துத் தனியரசு நிலையை ஸ்கொட்லாந்து இழந்தது.

இருந்த பொழுதும் தனித்துவமான தேசியப் பண்புகளை ஸ்கொட்லாந்து தேசம் கொண்டிருப்பால் 1707ஆம் ஆண்டுக்குப் பின்னரும், அங்கு தனியான நீதித்துறைப் பொறிமுறையே பேணப்பட்டு வருகின்றது. பிரித்தானியாவில் அதியுச்ச அதிகாரத்தைக் கொண்ட நீதிமன்றமாக அதன் உச்ச நீதிமன்றம் திகழ்ந்தாலும், ஸ்கொட்லாந்தின் சட்டம், ஒழுங்கு என்று வரும் பொழுது எல்லா விடயங்களில் அதற்கு நியாயாதிக்கம் இல்லை.

அத்தோடு, ஸ்கொட்லாந்திற்குத் தனியான வைப்பகமும் உண்டு. இவ் வைப்பகமானது இங்கிலாந்தும், ஸ்கொட்லாந்தும் ஒன்றாகச் சங்கமிப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் (1695ஆம் ஆண்டு) உருவாக்கப்பட்ட கட்டமைப்பாகும். இதற்கு ஸ்கொட்லாந்திற்கான தனி நாணயங்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விடும் அதிகாரமும் உண்டு.

இவ்வாறு தனியான நீதித்துறையையும், வைப்பகத்தையும், நாணயத்தையும் கொண்ட ஸ்கொட்லாந்து தேசத்திற்கு சுயாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கம் வாயிலாகத் தனியான மாநில நாடாளுமன்றத்தையும், ஆட்சியதிகாரத்தையும் (அரசாங்கம்) வழங்குவதற்கு 1997ஆம் ஆண்டு ரொனி பிளேயரின் அரசாங்கம் முடிவு செய்தது. இதற்கான பொது வாக்கெடுப்பு அவ்வாண்டு நடாத்தப்பட்டு, மறு ஆண்டு இதற்கான சட்டம் வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1999ஆம் ஆண்டு முதல் வெஸ்மின்ஸ்ரர் நாடாளுமன்றத்திடம் இருந்து அதிகாரத்தைப் பரவலாக்கம் பெற்ற கட்டமைப்பாக ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்றமும், அதற்குப் பொறுப்புக்கூறும் ஆட்சியமைப்பாக ஸ்கொட்லாந்தின் அரசாங்கமும் இயங்கி வருகின்றன.

ஆனால் இவ் அதிகாரங்கள் அனைத்தையும் தேவையேற்படும் பட்சத்தில் கையகப்படுத்தும் உரிமை வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றத்திற்கு உண்டு. அதாவது வெஸ்ற்மின்ஸ்ரர் நாடாளுமன்றத்தின் கட்டமைப்புக்களான பொதுச் சபையும், பிரபுக்கள் சபையும், முடியாட்சி பீடமும் நினைத்தால் இன்னுமொரு சட்டத்தை நிறைவேற்றி ஸ்கொட்லாந்து தேசத்திற்கு பரவலாக்கம் செய்யப்பட்ட அதிகாரங்களைப் பறிக்கலாம்.

இதுதான் ஒற்றையாட்சியமைப்புக்களின் பண்பியல்பாகும். இவற்றை அரசியல் அகராதியில் எவரும் சமஸ்டி என்று அழைப்பது கிடையாது. அதாவது ஸ்கொட்ல்ந்தில் சமஸ்டி அமைப்பு நடைமுறையில் இல்லை.

ஒரு அரசு சமஸ்டி அமைப்பாக விளங்கும் பட்சத்தில், அதன் அதியுச்ச அதிகாரங்கள் (இறைமை) ஒரு கட்டமைப்பிடம் குவிந்திருப்பதில்லை. அந்த வகையில் ஒரு சமஸ்டி அரசில் மாநில அரசின் அதிகாரங்களைப் பறிக்கும் உரிமை மத்திய அரசுக்கோ அன்றி அதன் நாடாளுமன்றத்திற்கோ இருப்பதில்லை. அவ்வாறு மத்திய அரசு செய்வதாயின் அது ஒரு ஆயுதப் புரட்சியை நிகழ்த்தியாக வேண்டும்.

யதார்த்தம் இவ்விதம் இருக்கும் பொழுது ஸ்கொட்லாந்தின் சமஸ்டி அமைப்பை ஆராயப் போவதாக சம்பந்தரும், அவரது பரிவாரங்களும் பிரித்தானியாவில் மேற்கொண்டிருக்கும் சுற்றுப்பயணங்களை என்னவென்று சொல்வது? உண்மையில் சமஸ்டி அமைப்பை ஆராயும் ஆவல் சம்பந்தருக்கு இருந்தால் தனது பரிவாரங்களை அழைத்துக் கொண்டு அவர் அமெரிக்காவிற்கு அல்லது சுவிற்சர்லாந்திற்கு சென்றிருக்க வேண்டும். குறைந்த பட்சம் கனடாவிற்காவது அவர் சென்றிருக்கலாம்.

அதனை விடுத்து சமஸ்டியின் பெயரில் பிரித்தானியாவில் சம்பந்தர் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருப்பதானது, தமிழர்களை ஏமாந்த சோணகிரிகளாக அவர் கருதுகின்றாரா? என்றே ஐயப்பட வைக்கின்றது.

இவ்வாறு சமஸ்டியின் பெயரில் தமிழ் மக்களின் தலையில் சம்பந்தர் மிளகாய் அரைத்துக் கொண்டிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாகச் செயற்படப் போகின்றது என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையோ, தமிழீழ தேசத்தின் தனியரசு இலட்சியத்திற்கு சாவுமணி அடிக்கும் தீர்வுத் திட்டத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது சமஸ்டித் தீர்வல்ல. தமது தாயக மண்ணில், தமது தேசிய அடையாளத்தைப் பேணக் கூடிய வகையிலான தன்னாட்சியுரிமைத் தீர்வையே தமிழர்கள் வேண்டி நிற்கின்றார்கள். இதற்கான முதற்படியாக வேண்டுமென்றால் சமஸ்டி இருக்கலாம். ஆனால் அதுவே முடிவாக இருக்க முடியாது. அதாவது சமஸ்டி என்பது ஒரு இடைக்கால ஒழுங்காக இருக்க முடியுமே தவிர, அது தமிழினத்தின் வேணவாவைப் பிரதிபலிக்கும் தீர்வாக இருக்க முடியாது.

அவ்வாறு தமிழர்களின் தன்னாட்சியுரிமைப் பயணத்தில் ஒரு இடைக்கால ஒழுங்காகச் சமஸ்டித் தீர்வைத் தமிழ் மக்கள் பேரவை முன்வைத்திருந்தால் அதனை நாம் ஆழமாகப் பரிசீலனைக்கு உட்படுத்தலாம். ஆனால் பேரவையின் தீர்வுத் திட்டம் அப்படியாக இல்லை.

பேரவை வெளியிட்டிருக்கும் தீர்வுத் திட்டத்தின் 1.4 சரத்து பின்வருமாறு கூறுகின்றது: ?தனது சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரிக்கும் இடத்து பிளவுபடாத ஒற்றுமையான இலங்கை அரசிற்கு தமிழ் மக்கள் தமது பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றனர்.?

இது ஒரு அபத்தமான சரத்து: ஆபத்தானதும் கூட. ஏனென்றால் சுயநிர்ணய உரிமை (தன்னாட்சியுரிமை) என்பது அதன் முழுமையான அர்த்தத்தில் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதையே குறிக்கின்றது. சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கும் ஒரு தேசம் விரும்பினால் அவ் உரிமையின் அடிப்படையில் இன்னொரு தேசத்தோடு இணைந்து வாழலாம். இதனையே அரசியல் அறிஞர்கள் உள்ளக சுயநிர்ணய உரிமை என்கின்றார்கள். ஆனால் உள்ளக சுயநிர்ணய உரிமையை ஒரு தேசம் ஏற்பதன் அர்த்தம் வெளியக சுயநிர்ணய உரிமை என்று அழைக்கப்படும் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையைக் கைவிடுவது அல்ல.

இதற்கான உதாரணமாக கியூபெக், ஸ்கொட்லாந்து ஆகிய தேசங்களின் தன்னாட்சியுரிமையை நாம் குறிப்பிடலாம். இவ்விரு தேசங்களும் முறையே கனடா, பிரித்தானியா ஆகிய அரசுகளுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி முறைமையை ஏற்றிருந்தாலும், பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தமது உரிமையை இவை கைவிட்டதில்லை. 1995ஆம் ஆண்டு கியூபெக் தேசமும், 2014ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து தேசமும் பிரிந்து சென்று தனியரசு அமைப்பது பற்றிய பொது வாக்கெடுப்பில் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தியிருந்தன.

ஆக, தத்துவார்த்த ரீதியாகப் பார்த்தாலும் சரி, அரசியல் நடைமுறையின் படி பார்த்தாலும் சரி, எந்தவிதமான சுயாட்சி ஒழுங்கிற்கு ஒரு தேசம் உட்பட்டிருந்தாலும், தேவைப்படும் பொழுது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அது பிரிந்து சென்று தனியரசு அமைக்கலாம்.

இப்படியிருக்கும் பொழுது எதற்காகப் பிளவுபடாத ஒற்றுமையான இலங்கை அரசிற்கான பற்றுறுதியைத் தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டும்? அவ்வாறு செய்வது தமிழர்களின் பிரிந்து செல்லும் உரிமைக்கு சாவுமணி அடிப்பதாக அல்லவா அமையும்? இது பேரவையின் அரசியல் விற்பன்னர்களுக்குத் தெரியவில்லையா? அல்லது புரியவில்லையா?

இதனைவிட மேலும் பல குறைபாடுகள் பேரவையின் தீர்வு யோசனையில் காணப்படுகின்றன. இலங்கை ஒரு பௌத்த சிங்கள அரசு என்ற நிலையில் இருந்து மதசார்பற்ற அரசு என்ற நிலைக்கு வர வேண்டும் என்று வலியுறுத்தும் பேரவை, சிறீலங்கா என்ற அப்பட்டமான பௌத்த சிங்களப் பெயர் மாற்றப்படுவது பற்றி எதுவுமே கூறவில்லை. சிறீலங்கா (அல்லது இலங்கை என்று பேரவை குறிப்பிடும் அரசு) வாளேந்திய சிங்கக் கொடியை அகற்ற வேண்டிய அவசியம் பற்றியும் அது மூச்சு விடவில்லை.

இதனை விட ஒரு மாநிலம் சமஸ்டி அமைப்பிலிருந்து பிரிந்து செல்லும் முயற்சிகளில் ஈடுபடும் பட்சத்தில் அவசர கால நிலையைப் பிரகடனம் செய்து மாநிலத்தின் அதிகாரங்களை நாட்டு அதிபர் கையகப்படுத்தலாம் என்று பேரவையின் தீர்வுத் திட்டத்தின் 21.1 சரத்து குறிப்பிடுகின்றது. அதாவது தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனியரசை அமைக்க முற்பட்டால் உடனடியாக மாநில அரசை மத்திய அரசு கையகப்படுத்தலாம் என்கின்றது பேரவை. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்க வேண்டிய பேரவை, எதற்காகச் சிங்களவர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இவ்வாறான திட்டத்தைத் தனது தீர்வு யோசனையில் உள்ளடக்கியிருக்கின்றது?

இங்கு ஆசுவாசமளிக்கக்கூடியதாக ஒரேயொரு விடயம்தான் உள்ளது. அதாவது பேரவை வெளியிட்ட தீர்வு யோசனையைத் தயாரிப்பதில் வடதமிழீழ முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் எவ்வித பங்களிப்பையும் மேற்கொள்ளவில்லை என்பதுதான். இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அவர் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தம்தான் காரணம் என்று அவரே ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

ஆனாலும் இது இன்னொரு உண்மையைப் புலப்படுத்துகின்றது. தடம்மாறிப் பயணிக்கும் சம்பந்தனின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சரியான தடத்தில் இட்டுச் செல்வதற்கும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை இலட்சிய உறுதியோடு முன்னகர்த்துவதற்கும் தேவையான மக்கள் ஆணையைக் கொண்டுள்ள விக்னேஸ்வரன் அவர்கள், இப்பொழுது தடுமாறுகின்றார் என்பதுதான் அது. விக்னேஸ்வரனின் தடுமாற்றத்தின் விளைவாகவே தமிழீழ தேசத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு சாவுமணி அடிக்கும் வகையிலான தீர்வு யோசனையைத் தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது.

தடம்மாறிப் பயணிக்கும் சம்பந்தரை சரியான தடத்திற்குக் கொண்டு வருவது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனாலும் தனது தடுமாற்றத்திற்கு விக்னேஸ்வரன் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தால் நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் மக்கள் பேரவையையும் சரியான தடத்திற்கு அவரால் இட்டுச் செல்ல முடியும். தடுமாற்றம் காரணமாக 2014ஆம் ஆண்டு இனவழிப்புத் தீர்மானத்தை வடக்கு மாகாண சபையில் நிறைவேற்ற மறுத்த விக்னேஸ்வரன், பின்னர் கடந்த ஆண்டு அதே தீர்மானத்தை நிறைவேற்றியதை இதற்கான சான்றாக நாம் கொள்ளலாம்.

***ஆனால் இங்கு எழும் மில்லியன் டொலர் கேள்வி இதுதான்: தனது தடுமாற்றத்திற்கு எப்பொழுது விக்னேஸ்வரன் முற்றுப்புள்ளி வைப்பார்?***

# புலிகள் இல்லாத பூமியில் இதுவும் நடக்கும் இன்னும் நடக்கும்...

## திருமணம் செய்யுமாறு வலியுறுத்தி பெண் கிராம அலுவலர் கடத்தல் !



யாழ். தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமஅலுவலர் பிரிவில் கடமையாற்றும் பெண் கிராம அலுவலர், கடந்த 21ம் திகதி வியாழக்கிழமை வாகனத்தில் கடத்தப்பட்ட நிலையில், சில மணி நேரங்களில் பின்னர் அவர் மீட்கப்பட்டார். இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய 8 பேரை சிறீலங்கா நாட்டுக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

தனது சகோதரனுடன் உந்துருளியில் அலுவலகத்துக்குச் சென்ற கிராம அலுவலரை வாகனத்தில் வந்தவர்கள் மறித்து, சகோதரனை அடித்துவிட்டு கிராம அலுவலரை இலக்கத்தகடற்ற வாகனத்தில் கடத்திச் சென்றனர். இது தொடர்பில் ஊர் மக்கள் பிரதேச செயலகத்துக்கு அறிவித்ததையடுத்து, பிரதேச செயலர் கொடிகாமத்திலுள்ள சிறீலங்காக் காவல்துறையினருக்கு அறிவித்ததுடன், தங்கள் வாகனங்கள் மூலமும் தேடுதல் மேற்கொண்டனர். இந்நிலையில் கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை பின்தொடர்ந்து உந்துருளிகளில் சென்ற ஒருவர், இலக்கதகடு மறைக்கப்பட்ட துணி காற்றில் விலகியபோது, இலக்கத்தகட்டின் இலக்கத்தைக் குறித்து கொடிகாமம் காவல்துறையினரிடம் கையளித்தார். உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய காவல்துறை, கடத்தப்பட்ட வாகனம் புதுக்குடியிருப்புப் பகுதியால் சென்றுகொண்டிருந்த போது மடக்கிப்பிடித்தனர். இதன்போது வாகனத்தில் மயங்கிய நிலையில் இருந்த பெண் கிராம அலுவலர் மீட்கப்பட்டதுடன், வாகனத்தில் இருந்து 8 பேரையும் கைது செய்தனர். கிராம அலுவலர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். திருமணம் செய்யுமாறு மேற்படி பெண் கிராமஅலுவரை நபரொருவர் தினமும் அச்சுறுத்தி வந்ததாகவும், இதனால் கடந்த ஒரு வார காலமாக சகோதரனின் உந்துருளியில் கிராம அலுவலர் சென்று வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வடபகுதி மாணவர்களின் கல்வியை கெடுத்துக் குட்டிச்சுவராக்க திட்டமிட்டு சதி!

### வடமாகாண முதலமைச்சர் எச்சரிக்கை!

வடபகுதி மாணவ மாணவியர்க்குரிய மிகச் சிறப்பான இயல்பு அவர்கள் கல்வியில் மேம்பட்டிருப்பதே. இதனைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் வகையில் பல்வேறு தீய நடவடிக்கைகள் எமது மாணவ சமுதாயத்தின் மத்தியில் நன்கு திட்டமிடப்பட்டு பரப்பப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு முதலமைச்சரின் வாழ்க்கை எப்பேர்ப்பட்ட சுமை நிறைந்தது என்பதை, இப்பொழுதே உணர்கின்றேன். ஒரு முதலமைச்சர் பேச்சாளராகவும் நிர்வாகியாகவும் சகல துறை வல்லுநராகவும் மக்கள் மனமறிந்து நடப்பவராகவும் சமயோசிதம் மிகுந்தவராகவும் சவால்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய வராகவும் ஊர் உலகத்தில் நடப்பதை உணர்ந்தவராகவும், உடல் வலு கொண்டவராகவும் இன்னும் பல தகைமைகளைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்கின்றேன் என்று கூறியவர், மாணவர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது, தெரியாதவர்களுடனான சிநேகிதம், உங்களை விட வயதில் பல வருடங்கள் கூடியவர்களுடனான சிநேகிதம் என்பன உங்கள் வாழ்வை வீணாக்கி விடும் என்பதை நன்கு தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். இன்றைய காலம் அவ்வாறானது. பத்திரிகைகளில் தினமும் வருகின்ற பல திடுக்கிடும் செய்திகள் எம்மை வருத்துவனவாக அமைந்துள்ளன. வடபகுதி மாணவ மாணவியர்க்குரிய மிகச் சிறப்பான இயல்பு அவர்கள் கல்வியில் மேம்பட்டிருப்பதே.

இதனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் வகையில் பல்வேறு தீய நடவடிக்கைகள் எமது மாணவ சமுதாயத்தின் மத்தியில் நன்கு திட்டமிடப்பட்டு பரப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறான செயல்களுக்கு நீங்கள் பங்குதாரர்களாகாதீர்கள். தெரிந்தோ தெரியாமலோ அவற்றில் ஈடுபட்டுவிடக் கூடாது என உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் நண்பர்கள் யாராவது தீய வழிகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்களையுந் திருத்தி உங்களின் நல்ல வழிகளில் அவர்களையும் கொண்டு செல்வதற்குப் பாடுபடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடு அதிகரிப்பு!

2015ம் ஆண்டில் 10,732 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளதாக சிறீலங்காவின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் நடாஷோ பாலேந்திரா தெரிவித்துள்ளார். பதிவு செய்யப்பட்டுள்ள குற்றசாட்டுக்களில் 753 பாலியல் ரீதியிலான அடக்குமுறைகளும் 433 வன்புனர்வு சம்பவங்களும் 313 சிறுவர் தொழிலாளார்களாக அமர்த்தல் தொடர்பான குறச்சாட்டுக்களும் 2317 சிறுவர் மீதான துன்புறுத்தல்களும் 219 சிறுவர் கடத்தல் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதில், தமிழர் தாயகமான அம்பாறையில் 246, மட்டக்களப்பில் 158, யாழ்ப்பாணத்தில் 198, கிளிநொச்சியில் 104, மன்னாரில் 65, முல்லைத்தீவில் 121, திருகோணமலையில் 130, வவுனியாவில் 128 என்ற எண்ணிக்கையில் முறைபாடுகள் பதிவாகியுள்ளன என அவரது புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தமிழர் தாயகத்தில் மட்டும் கடந்த ஆண்டு 1150 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




இதேவேளை, சிறீலங்காவில் ஆகக் கூடுதலாக கொழும்புவில் 1522 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். அடுத்த இடத்தில் கம்பஹா (1187) மாவட்டம் இடம்பெற்றுள்ளது.

### கஞ்சாவுடன் கிளிநொச்சியில் இளைஞர் கைது!

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாப் பொதியுடன் இளைஞன் ஒருவர் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் மாவட்ட விசேட போதைவஸ்து குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த நபரை, கைது செய்ய முற்பட்டபோது அவர் தப்பிச் சென்றுள்ளார். உந்துருளியில் தப்பிச் சென்றுள்ள குறித்த சந்தேக நபரை கிளிநொச்சிப் பகுதியில் வைத்து சிறீலங்காக் காவல்துறையினர் மடக்கிப்பிடித்து கைது செய்துள்ளனர்.

### கஞ்சா வியாபாரி கைது!

யாழ். நகரில் பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதானவர், குருநகர் பன்சல் வீதியினை சேர்ந்த 37 வயதுடைய நபரென சிறீலங்காக் காவல்துறையினர் கூறியுள்ளனர். தங்களுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்த, 14 வயது சிறுவனொருவனிடம் பணத்தினைக் கொடுத்து கஞ்சா வாங்கி வருமாறு காவல்துறையினர் அறுவுறுத்தியிருந்தனர். சிறுவனுக்கு கஞ்சாவினைக் கொடுக்க முற்பட்டபோது சிவில் உடையில் நின்ற காவல்துறையினர், அவரை அந்த இடத்திலேயே கைது செய்தனர்.

## 16 வயது மாணவி துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு பாடசாலையொன்றின் 16 வயதுடைய மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆசிரியரை, எதிர்வரும் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் மணிக்கவாசகர் கணேசராஜா கடந்த 26ம் திகதி செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரியருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதற்கு உடந்தையாக இருந்ததாக கூறப்படும் அதிபருக்கு எதிராகவும் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும், குறித்த இருவரும் வேறெந்தப் பாடசாலையிலும் கடமையாற்ற முடியாதவாறு செய்யுமாறு கோரி பாடசாலை முன்றலில் பெற்றோர் மற்றும் பொதுமக்கள், திங்கட்கிழமை (25) பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து பாடசாலையைச் சேர்ந்த 52 வயதான ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

## சிறுநீரக வியாபாரத்தில்....

அமெரிக்காவின் டெக்ஸாஸைச் சேர்ந்த 83 வயதான ஒருவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய 175,000 அமெரிக்கா டொலர்களையும், இஸ்ரேலைச் சேர்ந்த டொரின் என்ற பெண்ணுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய 200,000 அமெரிக்க டொலர்களையும் பெற்றுக் கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளையும் சிறீலங்காவில் மேற்கொள்வதாக குறித்த இஸ்ரேலிய முகவர் இருவருக்கும் உறுதியளித்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது. அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதற்காக இலங்கை வருவதற்கு முன்னதாக குறித்த முன்னாள் இராணுவ அதிகாரியை இஸ்ரேலிய காவல்துறையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட குறித்த நபருக்கு அந்நாட்டு நீதிமன்றம் தண்டனையும் விதித்துள்ளது. இலங்கையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை நடாத்துவதற்காக இந்தியாவைத் தவிர, இஸ்ரேல் மற்றும் உக்ரேன் போன்ற சில நாடுகளைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் வந்துள்ளனர். இஸ்ரேலியர்களுக்கு சிறுநீரகங்களை தானமாக அதிகளவில் பாலஸ்தீனவர்கள் வழங்கியுள்ளதாக இன்டர்போல் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தரகராகச் செயற்பட்டவருக்கே இஸ்ரேல் தண்டனை கொடுத்துவிட்டது. சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணாக மாற்றியவர்களுக்கு சிறீலங்கா அரசு என்ன தண்டனை கொடுக்கப்போகின்றதோ..?

## (ஏ)மாற்றம் காணும்.....

இதேவேளை, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில் புதிய அரசு 23ஆயிரத்து 777 ஏக்கர் நிலத்தில் வெறும் 14 ஏக்கரை மாத்திரமே வவுனியா மாவட்டத்தில் விடுவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் மண்ணில் தொடரும் நில அபகரிப்புக்கு பலியாகும் மற்றுமொரு தமிழர் நிலமான உழவனூர் பகுதியில் 35 ஏக்கர் தனியார் காணி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது.




குறித்த காணிக்கு உரிமையாளர் இருந்த போதும் 15 நாட்களுக்குள் உரிமை கோருமாறும் இல்லையேல் அரச உடமை ஆக்கப்படும் என போடப்பட்ட அறிவித்தலின் பிரகாரமே இக் காணி எடுக்கப்பட்டு இராணுவத்தினரின் 11 ஜி ஆர் படைப்பிரிவிக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த காணி உரிமையாளர் வயதானவர் என்றும் அவர் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதை தெரிந்துகொண்டே இதனைச் சாதகமாக பயன்படுத்தி இக் காணி எடுக்கப்பட்டுள்ளது என ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக 15 நாட்களுக்குள் அறிவித்தலிட்டு இராணுவத்தினருக்கு காணி வழங்க முடியும் என்றால் காணி அனுமதி பத்திரமின்றி தாங்கள் 40 வருடங்களுக்கு மேலாக வசித்து வருவதாகவும் மீள்குடியேறிய பின்பு 6 வருடமாக தற்காலிக வீட்டில் வாழ்வதாகவும் இதனால் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்பட்டு பாடசாலைகளிலும் முன்பள்ளிகளிலும் தமது வாழ்வை கழிப்பதாகவும், இவ்வாறு பாதிக்கப்பட்ட எங்களுக்கு காணி அனுமதி பத்திரமோ வீட்டுத்திட்டமோ வழங்க அனுமதிக்காத சட்டம் இராணுவத்தினருக்கு எவ்வாறு இடமளித்துள்ளது என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்தோடு இராணுவ மயமாக்க 35 ஏக்கர் காணியை வழங்கிய சட்டத்திற்கு கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட குடும்பங்களுள் 666 குடும்பங்கள் நிரந்தர காணியற்று இருக்கிறார்கள் அவர்களுக்கு சரி வழங்குவதற்கு சட்டத்திற்கு கண் தெரியவில்லையா என்ற பல கேள்விகளையும் ஊர்மக்கள் எழுப்புகின்றனர்.

இந்த மக்களுக்கு இவர்கள் கூறப்போகும் பதில் என்ன? விடை உரியவர்களின் மனங்களில் தான். சிந்தியுங்கள்! சிந்தித்து செயற்படுங்கள்!!

*(சூறையாடல்கள் தொடரும்)*

# இந்திய தேசச் செய்திகள்

## ரஜினிக்கு பத்மவிபூஷண் விருது மோடியின் தேர்தல் தந்திரம்

இந்திய குடியரசு தினத்துக்கு முன்பாக ஆண்டு தோறும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு பத்ம விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும். இந்த ஆண்டு நடிகர் ரஜினிகாந்த், வாழும் கலைஞர் சிறீசிறீ ரவிசங்கர் உட்பட சிலருக்கு பத்மவிபூஷண் விருது வழங்கப்பட உள்ளது. அத்துடன் இந்தி நடிகர் அனுபம் கெர், இந்துஸ்தானி இசைக் கலைஞர் கிரிஜாதேவி, விளையாட்டு வீராங்கனைகள் சானியா மிர்சா, சாய்னா நேவால் உட்படச் சிலருக்கு பத்ம பூஷண் விருதுகள் வழங்கப்பட உள்ளன. இவர்களை தவிர நடிகர்கள் அஜய்தேவ் கான் மற்றும் பிரியங்கா சோப்ரா ஆகியோருக்கு பத்மசிறீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள் ளன. தற்போதுள்ள தமிழ் நடிகர்களில் நடிகர் ரஜினிகாந்த் மட்டுமே இந்தியாவின் இரண் டாவது உயரிய விருதான பத்ம விபூஷண் விருதைப் பெறப்போ கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. திரையுலகில் ஏராளமான விருது களை பெற்றுள்ள ரஜினிகாந்த் 2000ம் ஆண்டு பத்ம பூஷண் விருது பெற்றார். அடுத்த 5 ஆண்டுகளில் அவருக்கு பத்ம விபூஷண் விருது தேடி வந்திருக்கின்றது. பத்ம விருதுகள் வழங்கும் விழா விரைவில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவிருக்கிறது. அப்போது ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பத்ம விருதுகளை வழங்குவார். இதற் கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மாளிகை அதிகாரிகள் செய்து வருகிறார் கள்.



இதேவேளை, 'ரஜினிகாந்த் அப்புடி என்னத்த வெட்டி கிழிச்சாருன்னு அவருக்கு இந்த பத்மவிபூஷன் விருத அறிவித்திருக்கு இந்த கேடி அரசு?' என்று சமூக வலைத் தளங்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கேள்வி எழுப்பி வருகின்றார்கள். பெருமளவானவர் இதற்கு கேலியும் கிண்டலும் செய்து வருகின்றனர்.

இது குறித்து முகநூலில் எழுதியுள்ள ஒருவர், விமர்சனங்கள் பல இருந்தாலும், கமல்ஹாசன், விஜயகாந்த் போன்ற நடிகர்கள் இந்த ரஜினி மாதிரி நடிகர்களை விட எவ்வளவோ மேல் தான். அரசியல் பக்கம் வரவே மாட்டேன் என்று சொல்லி, நற்பணி செய்வதே ரசிகர்களின் பணியாக இருக்க வேண்டும் என்று சொன்ன கமல் இந்த ரஜினியை விட எவ்வளவோ மேல். அரசியலுக்கு வருவேன் வரமாட்டேன் என்று வித்தை காட்டி ஊரை ஏமாற்றாமல், தெளிவாக வருவேன் என்று சொல்லி தனது ரசிகர்களை ஏமாற்றாது முழு நேர அரசியலில் இறங்கிய விஜயகாந்த் இந்த ரஜினியை விட எவ்வளவோ மேல். இந்த விருதுக்கு தகுதியான எத்தனையோ நடிகர்கள் திரையுலகில் இருக்கும் போது, ரஜினியை தேர்ந்தெடுக்க காரணம் தேர்தல் அரசியல் தான். இந்துத்துவா முத்திரை வரக்கூடாதுன்னு விருதை மறுத்த ஜெயமோகன் எங்கே? தகுதியே இல்லாம விருது வாங்குற ரஜினி எங்கே? ஏன் தமிழ்நாட்டுல ரஜினிய விட்டா வேற கலைஞனே இல் லையா? இல்லன்னா ரஜினிய மாதிரி எதுக்கும் வளைஞ்சு கொடுக்குற கலைஞன் தமிழ்நாட்டுல மோடி அரசுக்கு கிடைக்கலையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## 30,000 கோடி ரூபாவை அழிக்க வேண்டிய நிலையில் இந்தியா!

30,000 கோடி ரூபாவை அழிக்க வேண்டிய நிலைக்கு இந்திய மத்திய அரசு தள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு அம்சத்தில் குறைபாடுகளுடன் 30,000 கோடி பெறுமதியான ஆயிரம் ரூபாய் நாணயத்தாளை மத்திய வங்கி அச்சடித்து, குறிப்பிட்ட அளவு புழக்கத்திலும் விட்டுள்ளது. ஆனால் எவ்வளவு தொகை புழக்கத்தில் உள்ளன என்ற தகவல் வெளியாகவில்லை.



கள்ள நாணயத்தாள் புழக்கத்தை தடுக்க அரசும் மத்திய வங்கியும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இருப்பினும் கள்ள நாணயத்தாளின் புழக்கம் குறைந்தபாடில்லை. எனவே, கூடுதல் பாதுகாப்பு அம்சங்களுடன் ரூபாய் நாணயத்தாளை வெளியிட்டு வருகிறது மத்திய வங்கி.

பாதுகாப்பு அம்சங்களில் ஒன்றாக, சில்வர் நிறத்தில் பாதுகாப்பு இழை ரூபாய் நாணயத்தாள்களில் இருக்கும். ஆனால், அண்மையில் இந்திய நாணயத்தாள் அச்சகத்தில் அச்சிடப்பட்ட ஆயிரம் ரூபா நாணயத்தாளில் இந்தப் பாதுகாப்பு இழை இல்லை. மத்திய பிரதேச மாநிலம் ஹோசங்காபாத்தில் உள்ள அச்சகத்தில் இவை அச்சிடப்பட்டு, பின்னர், நாசிக்கில் உள் அச்சகத்துக்கு கொண்டுவரப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இவற்றில் புழக்கத்தில் உள்ள நாணையத்தாளை திரும்ப பெற வேண்டும் என மத்திய வங்கி அவசர அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதற்கான வரிசை இலக்கத்தையும் அது வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் இந்த வரிசை எண் உள்ள நாணயத்தாள்களை வைத்திருந்தால் வங்கிகளில் மாற்றிக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மதுபானச்சாலைகள் மூடுவதற்கு தமிழக முதல்வர் மறுப்பு அழித்து விடுமாறு பீகார் முதல்வர் அறிவிப்பு

மது விலக்கு மறுத்துவரும் தமிழக அரசு, இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் மூடினால் தமிழகத்திலும் மூடுவதுகுறித்து ஆராயலாம் என்று கூறிவிட்டது. ஆனால் பீகார் மாநிலத்திலோ, மது ஆலைகளை அழியுங்கள் என்று மாநில முதல்வரே மக்களுக்குக் குறிப்பாக பெண்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

படிக்காதவர்கள் நிறைந்த மாநிலம், வளர்ச்சி அடையாத மாநிலம், சாதி மோதல்கள் அதிகம் உள்ள மாநிலம் என்றெல்லாம் விமர்சிக்கப்படும் பீகார் மாநிலம் படு துணிச்சலாக மது விலக்கு முடிவை எடுத்துள்ளது.



ஏப்ரல் 1ம் திகதி முதல் நாட்டு மது விற்பனைக்கு அந்த மாநில அரசு தடை விதித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளையும் பீகார் முதல்வர் நிதீஷ்குமார் உத்தரவின் பேரில் அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் பாட்னாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட முதல்வர் நிதிஷ்குமார் பேசுகையில், பீகாரில் நாட்டு மது விற்பனைக்கான தடை ஏப்ரல் 1ம் திகதி முதல் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். இதை கண்காணிக்க சிறப்பு பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் தொலைபேசி எண்கள் மக்களுக்கு வழங்கப்படும். சட்டவிரோதமாக யாராவது இந்த மதுவகைகளை விற்பனை செய்தால், அது குறித்து அறிவிக்க இது உதவிகரமாக இருக்கும்.



ஏப்ரல் 1ம் திகதிக்குப் பிறகும் பீகாரில் நாட்டு மது தயாரிப்பதை கண்டறிந்தால் அந்த தொழிற்சாலைகளை அழிக்க பெண்கள் தயங்க வேண்டாம். இதுதொடர்பாக அரசு அமைக்கும் தகவல் மையத்தை பெண்கள் தொடர்பு கொள்ளலாம். இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள், ஏப்ரல் 1ம் திகதிக்கு பிறகும் நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அரசின் குறிப்பிட்ட சில அங்காடிகளில் விற்பனை செய்யப்படும். 6 மாதங்களுக்கு பிறகு அதுவும் முழுமையாக தடை செய்யப்படும் என்றார் நிதீஷ்குமார்.

## ஐ.நா.வுக்கு இந்தியாவின் புதிய நிரந்தரத் தூதர் நியமனம்

ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதராக ஏற்கெனவே பணியாற்றி வந்த அசோக் முகர்ஜி, கடந்த ஆண்டு டிசம்பர் 31ம் திகதி தனது பதவியைவிட்டு விலகினார். அதையடுத்து, இந்தியா வின் 21வது நிரந்தரத் தூதராக சையது அக்பருதீன் நியமிக்கப் பட்டுள்ளார். 1985ம் ஆண்டில் இந்திய அயலகப் பணி அலு வலராகப் பணியில் சேர்ந்த அக்பருதீன், ஐ.நா.சபையில் இயங்கி வரும் இந்தியத் தூதரகத்தின் முதன்மைச் செயலராக ஏற்கெனவே பணியாற்றியுள்ளார். மேலும், மத்திய வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் உள்பட பல்வேறு பதவிகளையும் வகித் துள்ளார்.

ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதராக தன்னை நியமித்துள்ளதற்கான சான்றிதழ்களை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனிடம், சையது அக்பருதீன் கடந்த 25ம் திகதி ஒப் படைத்தார். அப்போது, ஐ.நா. சபை தனது குறிக்கோள்களை அடை யவும், நிகழாண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடை யவும் இந்தியா தனது பங்களிப்பை வழங்கும் என்று அக்பருதீன் தெரிவித்தார். மேலும், உலக நாடுகளின் அனைத்துப் பிரச்சினைக ளுக்கும் அமைதியான முறையில் அரசியல் சார்ந்த தீர்வுகளைக் காணும் ஐ.நா. சபையின் நடவடிக்கைகளுக்கு இந்தியா முழு ஆதரவளிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

சையது அக்பருதீனை வரவேற்று, பான்–கீ–மூன் பேசுகையில், ஐ.நா. சபையின் நீண்ட கால நட்பு நாடாக விளங்கும் இந்தியா, பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் ஐ.நா. சபைக்கு முக்கியப் பங்களிப்பை நல்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

## குஷ்புவினால் பதவி பறிபோன விஜயதரணி



தமிழக மகளிர் கொங்கிரஸ் தலைவராக இருந்த விஜயதரணி சட்டமன்ற உறுப்பினர் மாநில தலைவர் இளங்கோ வனுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக மகளிர் கொங்கிரஸ் தலைவர் பதவியை இழந்துள்ளார். இந்நிலையில் கடந்த வாரம் சட்டசபை யில் முதலமைச்சர் ஜெயலலிதாவை விஜயதரணி சந்தித்து பேசினார். இதனால் அவர், அ.தி.மு.க.வில் இணையலாம் என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி விஜயதரணி, அ.தி.மு.க.வில் இணைவீர்களா? என்று கேட்கிறீர்கள். கட்சி மேலிடம் எடுக்கும் நடவடிக்கையை பொறுத்துதான் அது உள்ளது. நான், சோனியா, ராகுலை சந்தித்து மீண்டும் விளக்கம் அளிக்க உள்ளேன். எனக்கு அனுமதி கிடைக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு எடுப்பேன் என்று கூறினார். அத்துடன், என்னுடைய பதவி நீக்கத் திற்கு குஷ்புவும் காரணமாக இருக்கலாம். குஷ்பு ஏற்கனவே தி.மு.க.வில் இருந்து வந்தவர். அங்கு குடும்பத்தில் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டு இங்கு வந்துள்ளார். இங்கும் குஷ்பு பிரச்சி னையை ஏற்படுத்தி வருகிறார் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

## இந்தியர்களால் முகநூல் நிறுவனத்திற்கு 123.5 கோடி வருமானம்!

இந்தியாவில் முகநூல் பயனர்கள் மூலம் அந்த நிறுவனத்தின் வருமானம் 2014–2015 நிதியாண்டில் 123.5 கோடியாக உயர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது. 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்திய முகநூல் வருமானம் 27 சதவீதம் அதிகரித்துள்ளது. 2015ம் ஆண்டில் இந்த வருமானம் 97.6 கோடியாக இருந்தது. 2012–2013ல் இந்த வருமானம் 75.6 கோடியாக இருந்துள்ளது. இந்தியாவில் முகநூல் பயன்படுத்து வோரில் ஒருவருக்கு சராசரியாக ரூபாய் 9 என்ற மதிப்பில் முகநூலானது வருவாய் ஈட்டியுள்ளது. அமெரிக்காவில் ஒரு பயன்பாட்டாளர் மூலமாக இந்நிறுவனத்துக்கு வருமானம் இந்திய மதிப்பில் ரூபாய் 630 ஆக உள்ளது.

இதேவேளை, உலகின் மிகப் பெரும் பணக்காரர்கள் பட்டிய லில் முகநூலின் நிறுவனர் 8வது இடத்தில் இருக்கின்றார். மிகவும் இளம் வயது பெரும் பணக்காரராக 31 வயதே ஆகும் பேஸ்புக் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் இடத்தைப் பிடித்துள்ளார். இதே வேளை, உலகிலுள்ள ஒரு இலட்சம் தொழிலதிபர்களின் பொரு ளாதார நிலையை சீராய்வு செய்து போர்ப்ஸ் வெளியிட்டுள்ள இப்பட்டியலில், 87.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்புடன் மைக்ரோசொப்ட் நிறுவன அதிபர் பில் கேட்ஸ் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

# ASCES

## 26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**E-mail : asces@free.fr Tél : 07 82 88 59 16**

Grande Section, CP, CE,CM,
Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique,
Chimie, SVT, Histoire

எமது 4வது கிளை: Neuilly sur Marneல் வகுப்புகள் - தையல் வகுப்பு 03-02-2016 பி.ப 2 மணி
Chapelle Saint Marie, 3, rue de Berry, 93330 Neuilly sur Marne
(Bus: 127, 203, 214, 303 தரிப்பிடம் Arrêt: île de France
திறந்திருக்கும் நேரம்: புதன் - சனி - ஞாயிறு பி.ப 1:30 - 5:30 மணி

DILF, DELF, TCE Nationality பெறுவதற்கான
மொழிப்பரீட்சைக்குத் தயார் செய்யும்
புதிய பிரஞ்சு வகுப்புகள்
08-02-2016 திங்கள், செவ்வாய் பி.ப 3:30 மணி
30-01-2016 சனி பி.ப 3:30 மணி DELF B1
16-01-2016 சனி, ஞாயிறு மாலை 4:00 மணி
05-12-2015 சனி, ஞாயிறு காலை 9:30 மணி
04-01-2016 திங்கள் - செவ்வாய் காலை 10:30மணி

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

**Bridal make up & cake icing**
மணப்பெண் அலங்காரம், கேக் அலங்காரம்
06-02-2016 சனி காலை 9.30 மணி ஆரம்பம்
வகுப்பிற்கான பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்





















# போரும் ஊடகமும்

3

மகா.தமிழ்ப் பிரபாகரன்
ஊடகவியலாளர்/ஆவணப்பட இயக்குநர்

24 யூலை 1983, பொரெல்லா பேருந்து நிலையத்தில் 'நிர்வாணமாக்கப் பட்ட தமிழ் இளைஞரை சுற்றி சிங்களர்கள் கும்மாளம் கொட்டி சிரிக்க' சந்திரகுப்தா அமரசிங்க என்ற புகைப்படவியலாளர் எடுத்த படமே இன்றும் தமிழர்களுக்கு எதிரான சிங்களர்களின் இனக்கலவரத்தை வெளிச்ச மிட்டு காட்டுவது. கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'அத்தா' வில் அப்போது இவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். இது போன்ற ஒன்பது படங்களை அவர் அப் போது எடுத்திருந்தார். ஆனால் அந்த காலக் கட்டத்தில் இதுபோன்ற செய்தி-படங்க ளுக்கு அரசு தடைவிதித்திருந்தது.

தனிசிங்களச் சட்டத் திணிப்பால் வடக்கு - கிழக்கில் உருவான ஆயுதப் போராட்ட சூழல், 1983 கறுப்பு யூலை எனப்படும் கல வரத்தால் இன்னும் வலிமையடைந்தது. இலங்கை அரசின் சிங்கள ஆதிக்கத்திற்கு எதிராக தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக் கில் ஆயுதப் போராட்டத்தின் வழியில் நகர்ந் தனர். மட்டக்களப்பிலும் கொழும்பிலும் கல்வி கற்ற தராக்கி சிவராமும் அதில் ஒருவர்.



சந்திரகுப்த அமரசிங்க எடுத்த படம்

முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளை அணுகியவர், அங்கு அவர்கள் அறிவுச்சார்ந்த தளத்தில் கவனம் செலுத்த சொல்ல Plote எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழ கத்தில் இணைந்து தஞ்சாவூரில் (தமிழ்நாடு) ஆயுதப் பயிற்சியும் பெற்றவர், அறிவுச் சார்ந்த அரசியல் தளத்திலேயே அதிகம் பணி யாற்றினார். 1989 யில் Plote இலிருந்து வெளி யேறவர், ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சூசா அறிமுகத்தில் 'இண்டர் பிரஸ் சர்வீஸ்' என்ற செய்தி மையத்திற்கு கட்டுரைகள் எழுதி வந்தார்.

'தி ஐலாண்ட்' செய்தி தாளின் ஆசிரியர் கமினி வீரகோன் தான், தர்மரத்தினம் சிவ ராமை 'தாரகை'யாக அறிமுகப்படுத்துகிறார். அதாவது நட்சத்திரம் என அர்த்தம் கொண்ட தாரகை, தராக்கி என தவறுதலாக அச்சுப் பிழையினால் பதிவாகிறது. பின்னர் வெளி உலகிற்கு தர்மரத்தினம் சிவராம் 'தராக்கி சிவராமாக' அறியப்படுகிறார்.

'தமிழ் இராணுவத்தின் இராணுவ உத்தி கள்' பற்றிய கட்டுரையை, தராக்கியின் முதல் கட்டுரையாக கமினி வீரகோன் குறிப்பிடு கிறார். போரியல் - அரசியல் இரண்டையும் மையம் கொண்ட தராக்கியின் கட்டுரை நோக்கத்தை பற்றி தமிழ் இதழ்களில் விமர் சனங்கள் கூட வைக்கப்பட்டுள்ளன.

'தமிழர் பிரச்சினையை சிங்கள தேசத் திற்கு முனைவது பயனற்ற செயல்' என்று முன்னதாக இங்கு குறிப்பிடப்பட் டிருந்த தராக்கியின் கட்டுரைக்கு தினக்குரல் விமர்சன தலையங்கத்தை எழுதியிருந்தது.

26 அக்டோபர் 2004 இல் எழுதப்பட்ட அத்தலையங்கம் 'தமிழ் மக்கள் தங்களது அர சியல் உரிமைக்கான போராட்டம் தொடா பில் அடுத்து என்ன செய்யவேண்டும்?' என்று சொல்கிறார் தராக்கி என கேள்வி எழுப்பு கிறது.

'தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களைச் சிங்கள மக்களுக்கு விளங்க வைக்க வேண்டுமென்பதில் விடுதலைப் புலிகள் அண்மைக் காலமாக அக்கறை காட்டி வரு கிறார்கள். இந்த நோக்கத்திற்காக ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வன்னியில் இருந்து 'தேதுன்ன' என்ற பத்திரிகையையும் அவர்கள் வெளியிட ஆரம்பித்தனர். பின்னர் அவர்க ளின் ஆலோசனையின் பேரில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் மத்தியில் குழுவொன்றும் நியமிக்கப் பட்டது.

> **2004 இல் தராக்கி சொல்லிய 'நாளை எம்மீது முழுமையான போராக பாயும் என்பதில் சந்தேகமில்லை'. 'இராணுவச் சமநிலையை சிங்களதேசத்தின் பக்கம் சாய்ப்பதிலேயே பேரவாக் கொண்டு செயற்பட்டு வருகின்றன' என்பதுமே 2008 முதல் 2009 வரை நிகழ்ந்தது. ஆனால் அந்த இராணுவச் சமநிலையைச் சாய்ப்பதோடு மட்டும் சிங்கள தேசம் நிற்கவில்லை, தமிழர்களுக்கு பிரதிநித்துவம் கிடைக்கும் அத்தனை மையங்களிலும் தொடர்கிறது.**

இக்குழுவினர் சில வாரங்களுக்கு முன் னர் மல்வத்தை பீடாதிபதியைச் சந்திக்க கண்டிக்குச் சென்ற வேளை சில பிக்குமார் உட்பட இனவெறிக் கும்பல் ஒன்று அடா வடித்தனத்தில் இறங்கியது. அக்கும்பலின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்து சமா தான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை அவருக்கு விளக்கி, விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தைத் தூண்டுமாறும் வேண்டுகோள் விடுத்திருந் தனர். அஸ்கிரிய பீடாதிபதி இவர்களைச் சந்திக்க முடியாதளவுக்கு தனக்கு வேலைப் பளு இருப்பதாகக் கூறி சந்திப்பைத் தவிர்த் தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண் டும் அரசாங்கம் ஏதுவான, அரசியல் சூழ் நிலை தென்னிலங்கையில் இல்லை என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. தென்னிலங்கை அரசியல் நிலவரத்தை சர்வதேச சமூகமும் புரிய ஆரம்பித்து விட்டது. பேச்சுவார்த் தைகளை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழ்நிலை தென்னிலங்கையில் இல்லை என்கின்ற அதே வேளை, மீண்டும் போருக்குச் செல்வதற்கு அரசாங்கம் தயாராயில்லை. இதனிடையே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையி லான குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று (தேக்க நிலையடைந்திருக்கும்) சமா தான முயற்சிகள் குறித்த தங்களின் நிலைப் பாடுகளை விளக்கிக் கூறி வருகின்றார்கள்.

இத்தகையதொரு பின்புலத்தில் கொழும் பில் இருந்து வெளியாகும் முன்னணி தமிழ்ப் பத்திரிகையொன்றின் ஞாயிறு இதழில், பிரபல அரசியல் ஆய்வாளர் டி.சிவராம் கடந்த சில வாரங்களாக எழுதிவரும் கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் குறித்து எமது பிரதிபலிப்பை வெளியிடுவது என நாம் கருது கின்றோம்.

தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை விளக்குவதற்கு மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு முயற்சியுமே பயனளிக்கப் போவதில்லை என்பதே சிவராமின் கருத் தாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குவதற்கு சிங்கள தேசியம் மற்றும் கலாசாரம் என்பவற்றின் அடிப்படைத் தன்மை இடமளிக்காது. பௌத்தமின்றி சிங்களத் தேசியத்தைப் பற்றி நாம் பேச முடியாது.

சிங்கள பௌத்தத்தைப் புரிந்து கொள் வது பேச்சுவார்த்தைக்கு அவசியம் என்றும் ஆய்வாளர் சிவராம் கருத்துகளை முன் வைத்து வருகின்றார்.

இலங்கைத் தீவு சிங்கள பௌத்தத்திற்கே உரியது என்பதும் தமிழ் விரோதமும் பல நூற்றாண்டுகளாகப் பரப்பப்பட்டு வந்த கருத்துகள் என்று கூறும் அவர், தமிழ் மக்க ளின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசை கள், இன்னல்கள் குறித்து சிங்கள மக்களி டையே நாம் இடையறாது பரப்புரைகளைச் செய்தால் அவர்கள் தமது ஆட்சியாளரின் சிங்கள பௌத்த தேசியம் என்ற கற்பித்த லில் இருந்து விடுபட்டு சரியான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு உறுதுணை செய்வார்கள் என்ற எண்ணம் வீணானது என்று வலியு றுத்த முயற்சிக்கின்றார்.

உண்மையிலேயே, சிங்களவர்கள் மத்தி யிலுள்ள சிந்தனைக் குழப்பம், செயற்குழப் பம் ஆகியவற்றுக்கு சிங்கள பௌத்த மத சிந்தனையில் ஒழுக்க நியாயப் பாரம்பரியம் ஒன்று இல்லாதமை ஒரு காரணம் என்ப தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறும் எவருமே சிங்கள அரசியல் சமுதாயத்தின் இன்றைய போக்குக் குறித்து உருப்படியான ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாது. இலங் கையில் இன நெருக்கடிக்கு அரசியல் தீர் வைக் காண மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளையும் தோற்கடிப்பதில் சிங்களத் தையும் பௌத்தத்தையும் ஒன்று கலந்து புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடு களுக்கே விரோதமான கருத்தியலை முன் னெடுத்த வக்கிர சக்திகளே காரணமாயிருந் தன. இன்றும் நிலைமை அவ்வாறே தொடர் ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இரு தசாப்தங்களுக்கும் கூடுத லான காலமாக ஆயுதமேந்திப் போராடி வந்த விடுதலைப் புலிகள் அரசாங்கப் படை களுடனான போர்நிறுத்தத்தின் பின்னரான சஞ்சலமான அமைதிச் சூழ்நிலையில் தங்க ளது போராட்டத்தின் அரசியல் நியாயத்தை சிங்கள மக்களுக்கு விளக்க வேண்டுமென்று அக்கறை காட்டும் போது அந்த அக்கறை தொடர்பில் தமிழ் மக்களுக்கு எதிர்மறை யான எண்ணத்தைத், தோற்றுவிக்கக் கூடிய கருத்துக்களை எதற்காக சிவராம் வலிந்து முன்வைக்கிறார் என்ற கேள்வியைக் கேட்



ரிச்சர்ட் டி சூசா

காமல் இருக்க எம்மால் முடியவில்லை.

அரை நூற்றாண்டுக்கும் அதிகமான கால மாக சிங்கள அரசியல் அதிகார வர்க்கத் தினால் ஏமாற்றப்பட்டு வந்துள்ள போதி லும், இருபது வருட கால உள்நாட்டுப் போரில் உயிர்களையும் உடைமைகளையும் இழந்து அவலங்களின் தாக்கங்களில் இருந்து இன்னமும் மீள முடியாமல் திணறுகின்ற நிலைமையிலும் கூட, தமிழ் மக்கள் சிங்கள அரசியல் சமுதாயத்துடனான ஊடாட்டத் தின் மூலம் அரசியல் தீர்வுகளைக் காண்பதில் நம்பிக்கையிழக்கவில்லை என்ற தோற்றப் பாடு தமிழ் மக்களின் போராட்டத்தின் அர சியல் நியாயத்துக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் வலுவைச் சேர்க்கும் என்று ஆய்வா ளர் சிவராம் நம்பவில்லையா? தமிழ் மக்க ளின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொள்வதற்கு அழுங்குப் பிடியாக மறுத்து சமாதானத்தை எதிரிகளாக தென்னிலங்கை அரசியல் சமுதாயமே விளங்குகிறது என்று உலகுக்கு மேலும் அம்பலப்படுத்த இது ஒரு சந்தர்ப்பம் என்று அவரால் ஏன் கருத முடிய வில்லை?

அத்துடன், தற்போதைய சமாதான முயற்சிகளும் விடுதலைப் புலிகள் அவை தொடர்பில் கடைப்பிடிக்கும் அணுகுமுறை களும் இரு தசாப்தகால ஆயுதப் போராட் டத்தின் சாதகமான விளை பயன்களைப் பறிகொடுக்காதிருப்பதற்கான தந்திரோ பாயம் என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். 2001 செப்டெம்பர் 11க்குப் பின் னரான உலகில் அமெரிக்காவும் அதன் மேற் குலக நேச அணிகளும் உலக வரைபடத்தில் இருந்து அழித்துவிடக் கங்கணம் கட்டிநிற் கும் (அப்பட்டமான பயங்கரவாதத்துக்கும் நியாயப்பூர்வமான ஆயுதப் போராட்டத் துக்கும் இடையிலான) வேறுபாட்டை தெளி வாகப் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து

தொடர்ச்சி 26ம் பக்கம்

CONFEDERATION COMITE TAMOUL - FRANCE
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு

## பெப்பிரவரி, 2016ம் ஆண்டுக்கான பிரதான நிகழ்வுகள்

04 பெப்பிரவரி: சிங்களச் சுதந்திர நாள் ( தமிழர் கரி நாள்)
07 பெப்பிரவரி: மாவீரர் நினைவு சுமந்த பூப்பந்தாட்டப் போட்டி
13 பெப்பிரவரி: வன்னிமயில்
14 பெப்பிரவரி: வன்னிமயில்
20 பெப்பிரவரி: பிரெஞ்சு மக்களை நோக்கி
27 பெப்பிரவரி: பனிவெளியாடல்
28 பெப்பிரவரி: வன்னிமயில்

CCTF
116, Rue de Bellville
75020 Paris
Métro ligne 11 : Pyrenées ou Jourdain
தொடர்புகள்: 01 43 15 04 21

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய
கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு விற்பனை செய்யப்படும்.
வாடிக்கையாளரின் வசதிக்காக முத்துயல் (Mutuelle) சி.எம்.யு (C.M.U)
என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.



18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
2 4 5 B D E

Horraires d'ouverture
Lundi au Samedi
10h à 19h30

தொடர்புகளுக்கு
TEL: 01.75.42.92.30

MT CASH & CARRY
CERGY EXO 95
பல்பொருள் அங்காடி
23 avenue Mondétour - 95800 Cergy st Christophe
Tél.: 01 34 24 20 01

Asnavi Coiffure
அஸ்னவி சலூன்
MAISION ALFORT - ALFORTVILLE (RER-D) அருகாமையில்
உங்களிற்கான முடிதிருத்துனர் நிலையம்
60 rue des Camélias
94140 Alfortville
06 51 60 90 44
07 51 23 90 82
06 50 35 48 85

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள்
மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை
பேசி அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

Rapid Emballages
1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax : 01 39 83 68 81 Rép. : 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00

சங்கதி 24
www.sankathi24.com
- செய்திகள்
- ஆய்வுகள்
- பிரான்ஸ்
- தமிழகம் மற்றும் பன்னாட்டுச் செய்திகள்
தாயகச் செய்திகளின் தேசியத்தளம்

J.K.S ALIMENTATION GENERALE
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria · Western Union · MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை
உங்கள் Le Bourget இல்
மலிவாகவும் தரமாகவும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்
52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
தினமும் 9h00 - 21h00
jks.alimentation@gmail.com

## வீடு விற்பனைக்கு - A Vendre

தொடருந்து நிலையத்திற்கும், வர்த்தகமையங்களிற்கும் அருகாமையில், நிலத்தளத்தில் அமெரிக்க ரகச் சமையலறை, வரவேற்பறை மற்றும் கழிப்பறையும், முதலாம் மாடியில், ஒரு விராந்தையுடன் கூடிய மூன்று அறைகளும், கழிப்பறை மற்றும் குளியலறையும், இரண்டாம் மாடியில், சுவரிற்குள் பொருத்தப்பட்ட அலமாரிகளுடன் கூடிய இரண்டு அறைகளுடன்,வாகனத்தரிப்பிடமும், பெரும் வேலைத்தளமும் கொண்ட, 104m² வசிப்பிடத்துடன் கூடிய, 404m² பரப்பளவுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.



Je vend ma maison proche des transports et commerce.
il y au rez de chaussée une cuisine américain avec salon et WC
a l étage vous avec un couloir avec trois chambre WC avec douche
et deuxième étage deux chambre avec buanderie et bureau.
il y un garage et un grand atelier. la maison habitable fait 104m² et 40m² au total
pour plus d information contact:
Prix: 355000€
0685968375 (Français, Hindi)

SRI MAHAL
உங்கள் அனைத்து
மளிகைத்
தேவைகளுக்கும்.
197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12

ஒரு கதை

## பக்கிரி வைத்தியம்!

ஸ்வர்ணபுரி அரசனின் பெயர் விமலன். அளவுக்கு அதிகமாக சாப்பிடவும் பழரச பானங்களைக் குடிக்கவும் செய்வான். சாப்பாட்டில் அவனுக்கு அவ்வளவு பிரியம்.

இப்படிச் சாப்பிட்டு சாப்பிட்டு அவனது உடல் பெருத்துப் போய்விட்டது. அவனால் சாதாரணமாக நடக்கக்கூட முடியாமல் மிகவும் சிரமப்பட்டான். மேலும் இதனால், வயிற்றுக்கோளாறுகளும் பல உடல் உபாதைகளும் அவனுக்கு ஏற்பட்டன. அந்த நிலையிலும்



அவனால் அந்த உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அமைச்சர்கள் எடுத்துக்கூறியும் அவன் கேட்கவில்லை.

அதே நாட்டில் ஒரு பக்கிரி இருந்தார். அவர் தவ வலிமை உள்ளவர் என்றும், தீராத நோய்களையும் தீர்ப்பவர் என்றும் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

அரசன் விமலன், பக்கிரியை அரசவைக்கு அழைத்து, “சுவாமி! நான் உண்பதில் அதிக விருப்பமுள்ளவன். அப்பழக்கத்தினால் என் உடல் பெருத்து இயல்பாக நடமாட முடியவில்லை. உடல்நோவுகளும் வந்துவிட்டன. என்னை இந்த நிலையிலிருந்து தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும்” என பக்கிரியை வேண்டினான்.

பக்கிரி, அரசன் உடல் நிலையைச் சோதித்துப் பார்த்துவிட்டு, “உன் உடலில் பல நோய்கள் உள்ளன. அவற்றைக் குணப்படுத்த நீண்டகாலமாகும்.

தொடர்ச்சி 26ம் பக்கம்

ஒரு விதை

## தமிழர் உள்ளங்களில் தீயைப் பற்றவைத்தவன்



முத்துக்கள் விளையும் தமிழகத்துத் தூத்துக்குடி மாவட்டத்துக் கடலோரக் கிராமமான கொல்லுவைநல்லூர் எனும் கிராமத்தைச் சேர்ந்த இலட்சிய வேங்கை முத்துக்குமார், கலைத்துறையிலும், எழுத்துத்துறையிலும் சிறந்து விளங்கிய இளைஞன். சிங்களப் பேரினவாத அரசுடன் உலகமே கைகோர்த்து நின்று ஈழத் தமிழர்களைக் கொன்றுகுவித்தபோது, அவர்களைக் காக்கக் கதியற்றுப் போனோமே என்ற வேதனையில், தன் உடலில் தீயை மூட்டி உலகத் தமிழர்களின் மனங்களெங்கும் விடுதலை நெருப்பை இன்னும் வீச்சாக பற்ற வைத்துக் கொண்டார். மிகவும் அறிவுக்கூர்மை உள்ள புத்திசாலியான இளைஞனான முத்துக்குமார் உலகத் தமிழினம் எழுச்சிகொண்டு, தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கு முன்வரவேண்டும் என்பதற்காகவே நீண்ட வரலாற்றுக் கடிதத்தை எழுதிவைத்துவிட்டு தன்னை 29.01.2009 அன்று தீக்கிரையாக்கிக் கொண்டார்.

தீக் காயங்களுடன் மருத்துவமனையில் உயிர் போகும் நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றவேண்டும் என்றே அவரின் குரல் ஒலித்தது.

“நீ இப்படிச் செய்யலாமா?” என்று மருத்துவர்கள் கேட்டபோது, “என்னைப் போன்ற ஆயிரமாயிரம் புத்திசாலி இளைஞர்கள் ஈழத்தில் மடிகிறார்களே? என் உயிர் பெரிதா?” என்று கேட்டிருக்கிறார்.

ஏற்கனவே 1995ம் ஆண்டு இறுதியில் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக அப்துல் ரவூப் என்ற இளைஞர் தன்னை தீக்கிரையாக்கி பேரும் அர்ப்பணிப்பைச் செய்திருந்தார். முத்துக்குமாரின் இழப்பு தமிழக மக்களிடமும் மாணவர்களிடமும் ஒரு பெரிய மாறுதலை, எழுச்சியை ஏற்படுத்தியது. ஆனால், ஆட்சியில் இருந்த கருணாநிதி அரசு அதனைத் தடுத்து நிறுத்தி தமிழினத்தின் பேரழிவுக்குத் துணைபோனது. ஈழத் தமிழரின் தியாக வரலாற்றில், முத்துகுமாரின் தியாகமும், புகழும் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு குறள்

**அறத்துப்பால் – நீத்தார் பெருமை**



குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

ஒரு நகைச்சுவை

## சிந்திக்கும் படை வீரர்கள்!

ஒரு முறை ஹங்கேரிய ஜனாதிபதி ஜனோஸ் கத்தாரும் ரஷ்ய அதிபர் பிரெஸ்னேவும் தத்தமது நாட்டு இராணுவ வீரர்கள்தான் உலகில் சிறந்தவர்கள் என்று ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ரஷ்ய அதிபர், “சோவியத் வீரர்கள்தான் சிறந்தவர்கள். சோவியத் வீரன் முதலில் சிந்திக்கிறான், பிறகு செயல்படுகிறான்” என்று கூறினார்.

ஹங்கேரி அதிபர், “இல்லை.. இல்லை. எங்கள் நாட்டு வீரர்கள்தான் சிறந்தவர்கள். எங்கள் வீரர்கள் முதலில் செயல்படுவார்கள், பிறகுதான் சிந்திப்பார்கள்” எனக் கூறினார்.

அவர்கள் இருவரும் இப்படியே விவாதித்துக் கொண்டிருக்க, இரண்டு நாட்டு வீரர்களையும் அழைத்து சோதித்துப் பார்த்துவிடுவது என்று முடிவுசெய்தார்கள்.


பிரஸ்னேவ் தனது வீரனை அழைத்து, “வீரனே, இதோ இங்கிருப்பது ஹங்கேரிய ஜனாதிபதி ஜனோஸ் கத்தார். அவரை சென்று தாக்கு” என்றார். சோவியத் வீரன் சற்றே யோசித்து, “இல்லை, என்னால் நம் நாட்டு நண்பரைத் தாக்க முடியாது” என்றான்.

ஹங்கேரிய ஜனாதிபதி தனது வீரனிடம் “இதோ, இங்கிருப்பது சோவியத் அதிபர் ப்ரெஸ்னேவ். அவரை உடனே சென்று பலமாகத் தாக்கு” என்றார். அந்த வீரனும் சற்றும் யோசிக்காமல் உடனே பிரஸ்னேவை பலமாகத் தாக்கியதில் அவர் சற்று தள்ளிக் கீழே விழுந்தார்.

அந்த வீரன் கதவு வரை சென்று ஏதோ சிந்திக்கத் தொடங்கினான். தான் பந்தயத்தில் வெற்றி பெற்றோம் என்ற களிப்பில் இருந்த கத்தார், அந்த வீரன் போகாமல் இருப்பதைப் பார்த்து, “ஏன் நிற்கிறாய் போகாமல்? என்ன சிந்தனை உனக்கு? என்னைப் பந்தயத்தில் வெற்றிபெற விடமாட்டாய் போலிருக்கிறதே...” என்றார் எரிச்சலுடன்.

அந்த வீரன் சொன்னான், “இல்லை.. தாக்கியது போதுமா அல்லது உதைக்கவும் வேண்டுமா?” என்றுதான் யோசிக்கிறேன் என்றான்.

**இந்தத் தவளைக்குள் ஒரு குதிரை மறைந்துள்ளது கண்டுபிடியுங்கள்.**



ஒரு பொன்மொழி

**தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.** - லெனின்

ஒரு பழமொழி

**அரிசி வாங்கலாமென்று அக்கா வீட்டுக்குப் போனாளாம். அக்காக்காரி ஈச்சம்பாயை இடுப்பிலே சுற்றிக்கிட்டு எதிரே வந்தாளாம்.**

ஒரு வரலாறு

## இப்படியும் ஒரு முதலமைச்சர் இருந்தார்!

ஒருசமயம் காமராஜர் தமிழக சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் தமிழக முதல் அமைச்சராக இருந்தார்.



பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி காணச் சென்றபோது காமராஜரிடம் ஒரு மாற்றத்தைக் கண்டனர். எப்போதும் அவர் மேல் துண்டை தன் வலது தோளின் மீதுதான் போட்டுக் கொள்வார். தற்போது வழக்கத்திற்கு மாறாக இடது தோளின் மேல் போட்டுக் கொண்டிருந்தார்.

அதைப் பற்றி நிருபர்கள் கேட்டபோது, “ஒன்றுமில்லை சும்மாதான்...” என்றார் காமராஜர்.

நிருபர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஏதோ ஒரு காரணம் இருக்கும் என நினைத்து மீண்டும் மீண்டும் பல தடவை துருவித் துருவிக் கேட்டபோது காமராஜர் கோபத்துடன், “எனது இடது தோள் பகுதியில் சட்டை கிழிந்துள்ளது. அதை மறைக்கத்தான் எனது துண்டை இடது தோளின்மீது போட்டுக் கொண்டிருக்கிறேன்... போதுமா?” என்றார்.

ஒரு தகவல்

## வெளவால்கள் ஏன் தலை கீழாய் தொங்குகின்றன?

வெளவால் இனம் தோன்றி சுமார் 5.3 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்கின்றது ஆய்வுகள். வெளவால் பறவைபோல் பறந்தாலும் பிராணி இனத்தைச் சார்ந்ததுதான். அதற்குக் காரணம் பெண் வெளவால் குட்டிகளை ஈன்று பாலூட்டுகிறது. வெளவாலின் உடல் முழுவதும் ரோமம் அடர்ந்திருக்கும். வெளவாலுக்கு பறப்பதற்கென இறக்கைகள் தனியாக இல்லாவிட்டாலும் அதன் கரங்கள் பறப்பதற்கு ஏற்றாற்போன்று விசித்திர அமைப்பைக் கொண்டவை. அதனால் பறவைகளைப் போலவோ பிராணிகளைப் போலவோ கால்களை ஆதாரமாகக்கொண்டு வெளவாவால் நிற்க முடியவில்லை. எனவே உள்ளங்கால்களின் உட்பக்கம் மடிப்புகளின் உதவியைக் கொண்டு மேற்சுவரில் தலைகீழாகத் தொங்குகிறது. வெளவாலில் சுமார் 1000 வகைகள் உள்ளதாக கூறப்படுகிறது. பகல் பொழுதில் தலைகீழாகத் தொங்கும் வெளவால் பெரும்பாலும் இரவில்தான் தனது இரைவேட்டையைத் தொடங்குகின்றது. இரை தேடப் புறப்படும் வெளவால் மனிதர்கள் கேட்க முடியாத மிக மெல்லிய ஓசையை எழுப்புகிறது. அதனால் கலவரமடைந்த கொசுக்கள் மிகச்சிறிய வண்டுகள், பூச்சிகள் எல்லாம் இருட்டில் பறக்க ஆரம்பிக்கின்றன. மிக மெல்லிய ஒலியை எழுப்பவல்ல வெளவாலால் மிக நுண்ணிய ஒலியைக் கேட்க முடியும். எனவே சலனமடைந்த கொசுக்கள், வண்டுகள், பூச்சிகள் ஆகியவற்றின் அசைவுகளால் வெளிப்படும் ஓசையை காதுகளால் கேட்கும். அதே நேரத்தில் அதிநுட்பமாக நுகரும் சக்தியையும் மோப்ப சக்தியையும் கொண்ட மூக்கின் உதவியால் இரை இருக்கும் இடத்தை எளிதாக அடைந்துவிடுகிறது. ஒவ்வோர் இரவிலும் கணிசமான அளவு கொசு, வண்டு, பூச்சி ஆகியவற்றை வெளவால் தின்று விடுகிறது. சில வெளவால் இனங்கள் பழங்களைத் தின்று வாழும். இவற்றைவிட இரத்தத்தை உறிஞ்சும் ஒரு வகை வெளவால் இனமும் காணப்படுகிறது. அது மிருகங்களை மட்டுமல்ல மனிதர்கள் அகப்பட்டாலும் விட்டுவைக்காது.



# புலிகளின் போராட...

வேரோடு சிதைக்க திட்டம் தீட்டி, சர்வதேச உதவியுடன் அப்படியே செய்தும் முடித்திருக்கின்றது. ஆனாலும், இன்றுவரை தமிழ் மக்களின் மனங்களில் விடுதலைக் கனல் பெரும் நெருப்பாக எரிந்துகொண்டே இருக்கின்றது. இந்த நெருப்பை அணைக்க எந்த பேரினவாத சக்தியாலும் முடியாது. இந்த விடுதலைக் கனலை வெளிப்படுத்துபவையாகவே ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் தமிழீழ மாவீரர்நாள் நினைவு தினங்கள் அமைந்திருக்கின்றன.

சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கம். இந்த இயக்கத்தின் எந்தவொரு நிகழ்வுகளையும் எவரும் பின்பற்றக்கூடாது. மாறாக பின்பற்றினால் அவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம் பாயும் என்பது சிறீலங்காவின் விதி.

ஆனால், இந்த விதிகள், அடாவடிகள், அடக்குமுறைகள் அனைத்தையும் மீறியே வருடா வருடம் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நிகழ்வுகளினூடாக தமிழரின் விடுதலைக் கனல் வெளிப்படுகின்றது. இந்த விடுதலைக் கனல் தமிழ் மக்களின் மனங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்ற வரை தமிழர்கள் எந்த இனத்திற்கும் அடிமையானவர்கள் அல்ல. தமிழர்களுக்கு தமிழீழ தாயகம் கிடைக்கவேண்டும். இதற்காக தமிழர்கள் சர்வதேசத்தை நோக்கி கவனத்தை ஈர்க்கவேண்டும்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் என்று பட்டம் சூட்டிய சிங்களப் பேரினவாதத்திற்கு பதிலடி கொடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் முப்பது வருடகாலம் நடத்திய போராட்டம் சுதந்திரப் போராட்டம் என்பதை சர்வதேசத்திற்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு அறிவிப்பதற்கு தகுதியும் பொறுப்பும் உரிய ஒரே இடம் வடக்கு மாகாண சபை மட்டுமே ஆகும். தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றது. வடக்கு மாகாண சபையின் ஆட்சியை தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள்.

இந்தச் சபையின் முதலமைச்சராக இருக்கின்ற சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களில் அக்கறையுள்ளவர். அவருக்கு உறுதுணையாக சிவாஜிலிங்கம் போன்ற தீவிர தமிழ்த் தேசியப் பற்றுடைய அரசியல்வாதிகள் இருக்கின்றனர்.

வடக்கு மாகாண சபை, வன்னியில் இடம்பெற்றது இனப்படுகொலை என்ற முக்கியமானதொரு தீர்மானத்தை நிறைவேற்றி உலகத்தின் பால் தமிழர் மீதான பெரும் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இந்த தீர்மானம் உருவாக காரணமாக இருந்தவர் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம். அது முழுமை பெற்று இறுதி வடிவம் பெறக் காரணமாக இருந்தவர் வடக்கு முதலமைச்சர். அதிலும் உறுப்பினர்களின் பங்களிப்பும் பெரிதும் உறுதுணையாக இருந்தது.

இந்த நிலையில், 'தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் சுதந்திரப் போராட்டம்' என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவேண்டும். வடக்கு மாகாண சபையில் உள்ள தீவிர சிந்தனை உள்ள சிவாஜிலிங்கம் போன்றோர் இந்த பிரேரணையைக் கொண்டு வந்து முதலமைச்சர் தலைமையில் நிறைவேற்றவேண்டும்.

இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது வடக்கு மாகாண சபை தமிழ் மக்களுக்கு செய்த பேருதவியாக, பெரும் சாதனையாக நோக்கப்படுகின்றது. இந்த தீர்மானத்தை விடவும் மிகப் பெரும் அறிவிப்பாக சுதந்திரப் போராட்டப் பிரகடனம் அமைய வேண்டும்.

வன்னியில் இடம்பெற்றது இனப்படுகொலை என்றால், ஏன் அந்த இனப்படுகொலை நிகழ்ந்தது என்று காரணம் தேடினால், புலிகள் சுதந்திரப் போர் நடத்தியதால் அதற்கு பங்களித்த மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது முடிவாக அமையும்.

தமிழ் மக்கள் தமக்கென்று தனியான மொழி, தனியான தேசம், தனியான பண்பாடு, கலாசாரம் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய இனம். அனைத்தும் ஒருங்குசேரப் பெற்றதாலும், சிங்கள இனம் தொடர்ச்சியாக அடக்கியாள முற்பட்டதாலும் தமிழ் இளைஞர்கள் முகிழ்த்தெழுந்து தமிழீழ விடுதலைப் புலிகளாக தோற்றம் பெற்று சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்பதே உண்மை. இந்த உண்மையை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இந்த உண்மையை சர்வதேசத்தில் நிலைநாட்ட வடக்கு மாகாண சபையின் தற்போதைய கட்டமைப்பை விட வேறொரு கட்டமைப்பு இனிமேல் கிடைக்கப்போவதில்லை. எனவே, இந்தச் சபையே இதனைச் செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைக் கனலை உலகுக்கு வெளிகாட்ட தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் தயாராக வேண்டும்.


புலம்பெயர் தேசத்து உறவுகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை 'சுதந்திரப் போராட்டம்' என்று என்று அறிவிக்குமாறு வடக்கு மாகாண சபையிடம் கோரிக்கை விடுக்க முடியும். தமிழகத்தில் உள்ள உறவுகளும் இந்த விடயத்தில் உரிய கவனம் எடுக்க வேண்டும். இதுவரை நடைபெற்ற ஜனநாயக வழிப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டம் என்பன வீண் போகக்கூடாது. இந்த விடயத்தில் அனைவரும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றோம்.

# தந்தைக்காகத்....

அவ்வாறு இருந்தும் கூட தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு பற்றியோ, அன்றி தமிழ் மக்களின் அபிலாசைகள் பற்றியோ தெளிவான பார்வை எழுபதுகளின் தொடக்கத்தில் கூட எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இதற்கான உதாரணமாக 14.05.1972 அன்று திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழர் ஐக்கிய முன்னணியின் (அன்று அது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என அழைக்கப்படவில்லை) மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாம் கொள்ளலாம். அம் மாநாட்டில் தமிழர் தாயகம் பற்றியோ, அன்றி தமிழர்கள் ஒரு தேசம் என்பது பற்றியோ எவ்விதமான வாசகங்களும் உள்ளடக்கப்படவில்லை. மாறாகத் தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்களாகவே வரையறுக்கப்பட்டிருந்தனர்.

இது பற்றி போரும் சமாதானமும் என்ற தனது நூலில் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'ஒரு புறம் சிங்கள அரசியல் கட்சிகள் தமது கொள்கை வேறுபாடுகளை மறந்து, ஒரே அணியில் ஒன்றிணைந்து ஒரு கட்டிறுக்கமான சிங்கள-பௌத்த ஏதேச்சாதிகார அரச வடிவமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்க, மறுபுறம் தமிழ்த் தலைவர்கள், தமது ஆரம்ப கால அரசியல் இலட்சியத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்காத, அர்த்தமற்ற பூடகமான கோரிக்கைகளை முன்வைக்க முனைந்து கொண்டிருந்தனர்.




தெளிவான அரசியல் தரிசனமும் உருப்படியான செயற்திட்டமும் இல்லாத காரணத்தினால் தமிழ்த் தலைவர்கள் மீது தீவிரவாதத் தமிழ் இளம் சமுதாயம் நம்பிக்கை இழந்தது. எவ்வித பயனுமின்றி, முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் கடைப்பிடித்து வந்த சாத்வீக அரசியல் அணுகுமுறை மீது, அரசியல் விழிப்புணர்வு பெற்ற இளைஞர் சமூகத்திற்கு நம்பிக்கை இடிந்தது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணும் வகையில் நடைமுறைச் செயற்திட்டங்களைக் கொண்ட புரட்சிகரமான அரசியல் அணுகுமுறையையே இளைய தலைமுறை விரும்பியது. ஒருபுறம் ஆயுதப் படைகளின் அடக்குமுறையும் மறுபுறம் அரச இனவாத ஒடுக்குமுறையுமாக ஒரு புரட்சிகரமான புறநிலையை எதிர்கொண்டு நின்ற இளைஞர் சமூகம், காந்திய தத்துவத்தில் நெரிக்கப்பட்ட சாத்வீக அரசியல் வழிமுறையை கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டது. தாம் எதிர்கொண்டு நிற்கும் யதார்த்த சூழ்நிலைக்குச் சாத்வீகம் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதோடு புரட்சிகரமான அரசியல் அணுகுமுறைக்கு ஏற்றதாக அமையாது என்பதையும் இளைஞர்கள் உணர்ந்து கொண்டார்கள். எழுபதுகளின் முற்பகுதியில் தமிழ் அரசியல் அரங்கில் வெடித்த தமிழ் இளைஞர்களின் அரசியல் வன்முறை, பின்பு காலப்போக்கில் ஒழுங்கமைவான எதிர்ப்பு இயக்கமாக வடிவெடுத்தது. தீவிரவாத இளைஞர்களின் இந்த அரசியல் வன்முறையானது பழமைபேண் தமிழ்த் தலைமைக்கும் சரி, சிங்கள ஒடுக்குமுறை ஆட்சியாளருக்கும் சரி சிம்ம சொப்பன அரசியல் யதார்த்தமாக தோற்றம் எடுத்தது.'

அதாவது தமிழர் தேசத்தின் மிதவாத அரசியல் தலைமைகள் என்று அன்று கூறிக்கொண்ட தமிழரசுக் கட்சியும் சரி, தமிழ்க் காங்கிரசும் சரி, தமிழீழ தேசத்தின் அபிலாசைகள் என்று வந்த பொழுது அரசியல் வெறுமைக்குள்ளேயே தேங்கிக் கிடந்தன எனலாம். ஆனால் அதே காலப்பகுதியில் பதினேழு வயது இளைஞனாக விளங்கிய தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களிடம் தமிழீழ தேசத்தின் அபிலாசைகள் பற்றிய தெளிந்த பார்வை இருந்தது. அதனால்தான் தனது பதினெட்டாவது வயதை நெருங்கும் தறுவாயில் (தமிழர் ஐக்கிய முன்னணியின் திருகோணமலைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில மாதங்களில்) 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற தாரக மந்திரத்துடன் புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பை அவர் நிறுவினார்.

இந்த வகையில் தமிழீழம் என்று 1922ஆம் ஆண்டு சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள் அறிமுகம் செய்த சொற்பதத்திற்கு முதன் முதலில் கருத்தியல் வடிவமும், செயல் வடிவமும் கொடுத்த பெருமையும், உரிமையும் தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும். கடந்த பத்தியில் நாம் குறிப்பிட்டது போன்று 1970களில் பிரவாகமெடுத்த தமிழீழ தேசியத் தலைவரினதும், அவரது தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் எழுச்சியே 14.05.1976 அன்று வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் அவசர அவசரமாக தமிழர் ஐக்கிய முன்னணிக்கு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்று பெயர் மாற்றம் செய்ததற்கும், தமிழீழத் தனியரசை நிறுவுவதே தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று அறிவித்தமைக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம்.

இதற்கான சான்றாக வட்டுக்கோட்டையில் தமிழீழத் தனியரசை நிறுவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸில் அமைந்திருந்த தனது வதிவிடத்தில் வைத்து சிங்கள ஊடகவியலாளரான திஸ்ஸநாயக்க என்பவரிடம் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தெரிவித்த கருத்தை நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அப்பொழுது மரணப் படுக்கையில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இருந்தார்.

'சமஸ்டியைப் பெறுவதில் நான் தோல்வி கண்டால் எனது இனம் பிரிவினையை நாடும் என்று நான் உங்களிடம் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆனால் நான் கனவில் கூட நினைக்காது என்னவென்றால் இது எனது வாழ்நாளில் நடந்து விடும் என்பதுதான்.

நானும், ஜி.ஜி.பொன்னம்பலமும் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். வேலுப்பிள்ளை பிரபாகரன் அல்லாது நானும், ஜி.ஜி.பொன்னம்பலமுமே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். ஆனாலும் நாங்கள் இருவரும் இப்பொழுது மரணிக்கும் தறுவாயில் இருக்கின்றோம். தமிழீழத் தனியரசை நிறுவும் முயற்சியைப் வேலுப்பிள்ளை பிரபாகரனும், அவரது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமுமே எடுக்கும். ஆனால் அவர்கள் சத்தியாக்கிரக வழியில் இருந்து அந்நியப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.'

இவ்வாறு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் கூறிய பொழுது, தமிழீழ தேசியத் தலைவர் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட ஒருவராக இருக்கவில்லை. அத்தோடு அக்காலப் பகுதியில் மிகப்பெரும் தாக்குதல்கள் எவற்றையும் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்யவுமில்லை (சிங்கள காவல்துறையினருக்கு எதிரான முதலாவது வெற்றிகரமான தாக்குதல் 14.02.1977 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது). எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் மரணப்படுக்கையில் இருந்த பொழுது இருபத்தொரு வயதுடைய இளைஞனாக விளங்கிய தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் குறிப்பிடத்தக்க மூத்த தலைவர்களாலும், எதிரியாலும் மட்டுமே அறியப்பட்டவராக விளங்கினார்.

தொடர்ச்சி 26ம் பக்கம்



# தமிழ்ச் சொற்களைச் சாகடிக்கலாமா?

02

## வேண்டாத 'விஜயம்'

நம் தாய் மொழியாகிய தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுக்காலப் பழைமை உடையது. எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் தொன்று தொட்டு இன்று வரை நின்று நிலைபெற்றுள்ள சிறப்பு நம் தமிழ் மொழிக்கு இருக்கிறது.

பிறமொழிகளின் துணையில்லாமலும் பிறமொழிச் சொற்களின் கலப்பு இல்லாமலும் தனித்து இயங்கும் வல்லமை நம் தமிழ்மொழிக்கு உண்டு.

ஆயினும் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே வடமொழிச் சொற்கள் சிலவற்றைத் தமிழுடன் கலக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வடமொழியில் எழுதப்பட்ட புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள நேர்ந்த போது, புராண இதிகாசங்கள் தொடர்பான வடமொழிச் சொற்கள் சில தமிழ்மொழி வழக்கில் இடம்பெற்றன.

வட இந்தியாவில் நுழைந்து வாழ்ந்த ஆரியர்களின் வேதங்களையும், அந்த வேதங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப் பட்ட வைதிக மதத்தையும் தமிழர்கள் ஏற்றுக்கொண்டதால், வைதிக மதம் தொடர்பான பல வடமொழிச் சொற்கள் தமிழுடன் கலக்கப்பட்டன.

பிற்காலத்தில், பிறமொழியினர் பலர் தமிழர்களுடன் கலந்து வாழ நேர்ந்த போது, உருது, அரபு, போர்த்துக்கீசம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து பல சொற்கள் தமிழ் மொழியுடன் கலக்கப்பட்டன, அதனால் இன்று தமிழ் மொழியின் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் வடமொழி, அரபு, உருது, போர்த்துக்கீசம், ஆங்கிலம் முதலான பலமொழிகளின் சொற்கள் கலந்துள்ளன.

பிறமொழிக் கலப்பு இயல்பானது என்றோ தவிர்க்க முடியாதது என்றோ நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது. ஒன்றைக் குறிப்பிடுவதற்கு உரிய சொல் தமிழில் இருக்கிறதா என்பதை ஆழமாக ஆராய்ந்து அறியவேண்டும். ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பதற்கு ஏற்ற சொல் தமிழில் இருக்கிறதா என்பதைத் தமிழ் அறிஞர்களைக் கண்டு, கேட்டு அறிய வேண்டும். ஏற்புடைய சொல் தமிழில் இல்லை என்பது உறுதிசெய்யப்படுமானால் பிறமொழியில் சொல்லப்படுகின்ற ஒன்றைக் குறிப்பிடப் புதிய தமிழ்ச் சொல்லை ஆக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சியும் பயன்தரவில்லை என்றால், அந்த நிலையில், பிறமொழிச் சொல்லைத் தமிழுடன் கலக்கலாம். குறிப்பிட்ட பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் காலப்போக்கில் கண்டறியப்படுமானால், அதுவரை தமிழுடன் கலந்திருந்த பிறமொழிச் சொல்லைத் தவிர்த்துவிடவும் புதிதாக ஆக்கப்பட்ட தமிழ்ச் சொல்லை ஏற்றுக் கொள்ளவும் நாம் தயங்கக்கூடாது.

பேச்சிலும் எழுத்திலும் பிறமொழிச் சொற்களைக் கலப்பது குறித்து இந்தக் கொள்கையை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அஃதாவது தேவைப்படாத நிலையில் எந்தவொரு சொல்லையும் பிறமொழிகளிலிருந்து தமிழுடன் கலக்கக் கூடாது.

தேவையில்லாமல் பல பிறமொழிச் சொற்களைத் தமிழுடன் கலந்து பேசுகிறோம், சான்றாக விஜயம், தினம், சந்தோஜம், தோஜம், சொந்தம், சாதம் முதலிய வடமொழிச் சொற்களையும் goodmorning, birthday, marriage, happy, best wishes முதலிய ஆங்கிலச் சொற்களையும் வேறு சில மொழிகளின் சொற்களையும் தேவையில்லாமல் தமிழுடன் கலந்து பேசுகிறோம். இந்தச் சொற்களும் இவை போன்ற வேறுபல சொற்களும் தமிழ்க்கு வேண்டாத சொற்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

வேண்டாத சொற்கள் என்ற வரிசையில், 'விஜயம்' என்னும் வடமொழிச் சொல் தமிழ் மொழிக்கு வேண்டாத சொல் என்பதை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இன்றமிழ் உறவுகளே! நாம் தமிழில் பேசும் போது எந்த எந்த இடங்களில் 'விஜயம்' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

'நண்பரே உங்களிடம் ஒரு விஜயம் சொல்ல விரும்புகிறேன்' என்பவர், 'நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்' என்று சொல்லலாம். 'அவர் பல விஜயங்களை என்னிடம் பேசினார்' என்று சொல்லத் தேவை இல்லை. 'அவர் பலவற்றை என்னிடம் பேசினார்' என்றால் போதும்.

தமிழில் பேசுவோர் பிறமொழிச் சொற்களைத் தவிர்ப்பதுடன் தமிழ்மொழி மரபையும் பின்பற்ற வேண்டும்.

உ.வே.சா. அவர்களால் உரை எழுதப்பட்டு, 1894-ஆம் ஆண்டில் புறநானூறு வெளியிடப்பட்டது. புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்ற அரும்பொருள் குறித்த சொற்களும் தொடர்களும் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அந்த அகரவரிசைக்கு 'விஜய சூசிகை' எனத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

'விஜயம்' எனும் பிறமொழிச் சொல் புறநானு?ற்றில் இடம்பெறவில்லை. எந்தப் பழந்தமிழ் இலக்கியத்திலும் அந்தச் சொல் இடம்பெறவில்லை. ஆனாலும் நூறாண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் பேச்சு வழக்கில் 'விஜயம்' என்ற சொல் இடம்பெற்று விட்டதால் அந்தச் சொல் தமிழ்ச் சொல் அன்று என அறிந்திருந்தும் 'விஜய சூசிகை' என வடமொழிச் சொற்கள் இடம் பெற்று விட்டன.

பொருள் அட்டவணை அல்லது பொருள் அடைவு எனத் தமிழில் சொல்லலாம்? 'விஜய சூசிகை' தமிழுக்கு வேண்டாத ஒன்று என்பது நாம் அறியத்தக்கது.

அந்த நாட்களில், 'விஜயாலோசனை' என்ற தொடர் வழக்கில் இருந்தது, 'விஜயம்', 'ஆலோசனை' என்ற பிறமொழிச் சொற்களை இணைத்து 'வி'யாலோசனை? என்று வழங்கினர். ஏதோ ஓர் அமைப்பின் பொறுப்

**அறிவரசன்**

பாளர்கள் ஒன்று கூடி ஒரு பொருள் குறித்துப் பேசி முடிவு செய்வதற்காக விஜயாலோசனைக் கூட்டம் நடத்தப் பட்டது.

அன்று 'விஜயாலோசனை' என்று சொன்னதை இன்று தமிழில் 'கலந்தாய்வு' என்கிறோம். 'மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வு', ஆசிரியர் இடமாறுதல் கலந்தாய்வு என்று சொல்கிறோம். விஜயம் வேண்டாததாகிவிட்டது.

'இந்த நூலில் எல்லா விஜயமும் இருக்கிறது' என்று சிலர் சொல்கிறார்கள். திருக்குறளில் எல்லா விஜயமும் இருக்கிறது என்று சொல்ல விரும்பிய மதுரைத் தமிழ் நாகனார் என்ற வண்டமிழ்ப் புலவர் 'விஜயம்' வேண்டாம் என விலக்கி,

'எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை'

என்று நல்லதமிழில் நவின்றதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.

'உங்களுக்கு விஜயம் தெரியுமா? எனக் கேட்பவர்கள் 'விஜயம்' என்ற சொல்லை விலக்கி, உங்களுக்குத் தெரியுமா? என்றோ உங்களுக்கு ஒன்று தெரியுமா? என்றோ கேட்கலாம்.

'அவர் நிறைய விஜயம் தெரிந்தவர்? என்று சொல்ல வேண்டாம்' அவர் நிறையத் தெரிந்தவர் என்று சொன்னால் போதும். 'விஜயம்' - தமிழர்க்கு வேண்டாதது.

'விஜயம்' - எனும் சொல்லைத் தவிர்த்துத் தமிழில் இயல்பாகப் பேசமுடியும். எப்படி?

ஒரு விஜயம் சொல்லவா? - ஒன்று சொல்லவா?

என்ன விஜயம்? சொல்லுங்கள் - என்ன என்று சொல்லுங்கள் ?

அந்த விஜயம் என்னாச்சு? - அது என்னாச்சு?

சொல்வதற்கு நிறைய விஜயம் இருக்கிறது - சொல்வதற்கு நிறைய இருக்கிறது. இந்த விஜயத்தை மறந்து விடு - இதை மறந்து விடு

இப்பொழுது சொல்லுங்கள், 'விஜயம்' - நமக்கு வேண்டாததுதானே?

ஈழத்தமிழ் உறவுகள், 'விஜயம்' என்ற சொல்லை அப்படியே பயன்படுத்துவதில்லை. நாம் வருஜத்தை 'வருடம்' என்று சொல்வது போல, அவர்கள் விஜயத்தை 'விடயம்' என்று சொல்கிறார்கள்.

விடயமும் தமிழ்க்கு வேண்டாமே.

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## 38 பில்லியன் டொலராக உயரும் இந்தியாவின் இணையவழி வர்த்தகம்!

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் இணையவழி வர்த்தகம் 2016ம் ஆண்டில் 38 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு உயரும் என வரத்தக கூட்டமைப்பு அசோசாம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு (அசோசாம்) வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டள்ளதாவது, இந்தியாவின் இணைய வழி வர்த்தகம் 2015ம் ஆண்டில் 23 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இருந்தது. 2016ம் ஆண்டில் இது 38 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு, அதாவது 67 சதவீதம் உயரும். உயர்ந்து வரும் எரிபொருள் விலை மற்றும் இணையவழி வர்த்தக நிறுவனங்கள் அளித்த அதிரடி தள்ளுபடிகள், தேர்ந்தெடுப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளிட்ட காரணங்களால் 2015ம் ஆண்டு இணையவழி வர்த்தகம் வெகுவாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில், மும்பை வாசிகள்தான் அதிக அளவில் இணையவழி வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து டில்லி வாசிகள் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளனர். ஆமதாபாத், பெங்களூர், கொல்கத்தா நகரங்கள் முறையே 3, 4, 5 இடங்களைப் பிடித்துள்ளனர் என அசோசாம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இணைய வழி வர்த்தகம் அதிகரித்து வருவதற்கான காரணங்கள் குறைந்த விலை மற்றும் அதிகமான தள்ளுபடி, நேரம் மற்றும் வெளியே செல்லும் செலவு குறைவு, வீட்டிலிருந்தப்படியே நினைத்த நேரத்தில் வர்த்தகம் செய்யலாம், பல்வேறு ரகங்களில் கிடைக்கும் விதவிதமான பொருள்கள், பொருள்கள் குறித்த முழுமையான தகவல்கள், பொருள்களை ஒப்பீட்டு பார்க்கலாம், பொருள்கள் குறித்த வாடிக்கையாளர்கள் அளிக்கும் கருத்துகள் எனக் கூறப்படுகின்றது.

## இந்தியாவிற்குள் நுழையும் அமெரிக்க நெட்பிளிக்ஸ்

இணையவழி மூலம் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உட்பட பல அம்சங்களையும் தரும் பிரபல அமெரிக்க நிறுவனம் நெட்பிளிக்ஸ் (netflix), இந்தியாவில் கால் பதிக்க முடிவெடுத்துள்ளது. அமெரிக்கா உட்பட 60 நாடுகளில் 70 மில்லியன் பேர் இதன் சந்தாதாரராக தற்போது உள்ளனர். ஹொலிவுட் முதல் பல நாட்டு படங்களையும் வெளியிடுவதுடன், பன்னாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வரை எல்லாவற்றையும் வெளியிடும் இந்த 'நெட்பிளிக்ஸ்' சேவை இனி இந்தியாவில் பரவ உள்ளது. மாத சந்தா 500, 650 மற்றும் 800 ரூபாயில் மூன்று வகையில் நெட்பிளிக்ஸ் தன் சேவையை இணையவழி மூலம் வழங்க உள்ளது. இந்தியாவில் இணைய சேவையின் வேகம் அதிகரித்த படி உள்ளது. அத்துடன் 4ஜி அலைக்கற்றை சேவையுடன் கூடிய செல்பேசி வசதிகளும் அதிகரித்துள்ளது. இதனால், அதிக சந்தாதாரர்களை இந்தியாவில் பிடிக்கலாம் என்று நெட்பிளிக்ஸ் கணக்கு போடுகிறது.




## இலவச 'வாட்ஸ் அப்'

பிரபல சமூக வலைத்தளமான 'வாட்ஸ் அப்'–ஐ உலகம் முழுவதும் 100 கோடி பேர் பயன்படுத்தி வருகின்றனர். தனது நண்பர்களுடன் தொடர்பில் இருப்பதற்கு பெரும்பாலும் இதை சார்ந்தே பலரும் இருக்கிறார்கள். தற்போது வரை வாட்ஸ் அப்–க்கு ஓராண்டுக்கு பிறகு பயன்படுத்த ஆண்டு ஒன்றுக்கு 1 டொலர் சந்தா கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், இனி இந்த கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என வாட்ஸ் அப் அறிவித்துள்ளது. இன்னும் சில வாரங்களில் வாட்ஸ் அப்பின் அனைத்து பதிப்புகளுக்கு கட்டணம் முற்றிலுமாக நிறுத்தப்படுகிறது. 2014ம் ஆண்டு 19 பில்லியன் டொலருக்கு வாட்ஸ் அப்–ஐ பேஸ்புக் நிறுவனம் விலைக்கு வாங்கியது குறிப்பிடத்தக்கது.

WhatsApp

## பிலிப் மோரிஸ் நிறுவனத்துக்கு தாய்லாந்தில் அபராதம்!

PHILIP MORRIS

அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப் மோரிஸ் சிகரெட் நிறுவனத்துக்கு வரி ஏய்ப்பு செய்தது தொடர்பாக தாய்லாந்து நீதிமன்றம் 220 கோடி டொலர் அபராதம் விதித்துள்ளது. மல்போரோ மற்றும் எல்ஆஎம் பிராண்டு உரிமையாளரான பிலிப் மோரிஸ் நிறுவனம், 2003 மற்றும் 2006 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தாய்லாந்தில் சிகரெட் வகைகளை இறக்குமதி செய்த வகையில், 55.127 கோடி டொலர் மதிப்பிற்கு வரி ஏய்ப்பு செய்ததாக அந்த நிறுவனத்தின் மீது 2011ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விசாரணை முடிவில், பிலிப் மோரிஸ் நிறுவனம் விதிமுறைகளை மீறி வரி ஏய்ப்பில் ஈடுபட்டதை தாய்லாந்து நீதிமன்றம் உறுதி செய்தது. இதையடுத்து, அந்நிறுவனத்துக்கு 220 கோடி டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

## புங்குடுதீவு மக்கள் ஒன்றியம்-பிரான்ஸ்
## பாரதி விளையாட்டுக்கழகம் இணைந்து நடாத்தும்
### 7வது முத்தமிழ் விழா–2016
முன்னோடி நிகழ்வாக

அமரர் நடராசா இராசமணி"கெலன் றெஜினா"(ஆசிரியை), அமரர் பொன்னம்மா கனகசபை(ஆசிரியை), அமரர் திருமேனிப்பிள்ளை இரத்தினசபாபதி (ஆசிரியை) ஆகியோரின் ஞாபகார்த்த

# அறிவுத்திறன் போட்டி 2016
(27-02-2016 - சனிக்கிழமை காலை 8.30 மணி)

### போட்டிகள் பற்றிய விபரங்கள்

**காலம்: 27-02-2016, 08.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை**

**பாலர்பிரிவு: 9 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்.** (01-01-2006க்கு பின் பிறந்தவர்கள்)

1. திருக்குறள் மனனப்போட்டி
   அதிகாரம 22: ஒப்புரவறிதல், அதிகாரம் 41: கல்லாமை, அதிகாரம் 28: கூடாவொழுக்கம் ஆகிய அதிகாரங் களில் ஏதாவது ஓர் அதிகாரத்தில் தொடராக பத்து குறள்கள் பிழையின்றி மனனம் செய்து ஒப்பிக்க வேண்டும்.
2. ஓவியப்போட்டி
   - கொடுக்கப்படும் வரைபடத்திற்கு வர்ணம் தீட்டுதல் (வயது 3-6 க்கு உட்பட்டவர்கள்). (1hr)
   - கொடுக்கப்பட்ட வரைபடத்துக்கு வர்ணம் தீட்டுதலும் கொடுக்கப்படும் தலைப்பில ஏதாவது ஒன்றிற்கு கற்பனையில் வரைதல் (வயது 6-9 க்கு இடைப்பட்டவர்கள்) (1h30)
     தலைப்புக்கள்: 1. கடற்கரைக் காட்சி, 2. உங்களுக்குப் பிடித்த அழகான பறவை

**கீழ்ப்பிரிவு: 12 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்.** *(01-01-2004க்கு பின் பிறந்தவர்கள்)*

1. திருக்குறள் மனனப்போட்டி.
   அதிகாரம் 42:கேள்வி, அதிகாரம் 34: நிலையாமை, அதிகாரம் 66: வினைத்தூய்மை, ஆகிய அதிகாரங்களில் ஏதாவது ஓர் அதிகாரத்தில் தொடராக பத்து குறள்கள் பிழையின்றி மனனம் செய்து பொருளுடன் நடுவர் முன்னிலையில் ஒப்பிக்க வேண்டும்.
2. சொல்வதெழுதல் போட்டி. (தமிழ் மொழியில் வாசிக்கப்படும் பந்தியை பிழையின்றி எழுதுதல்)

**காலம்: 27-02-2016 13.30 மணி தொடக்கம் 15.00 மணிவரை**

**மத்தியபிரிவு: 15 வயதுக்குக்கீழ்ப்பட்டவர்கள்.** (01-01-2001 க்கு பின் பிறந்தவர்கள்.)

1. பேச்சுப்போட்டி: அழகான எனது கிராமம், அன்பான எனது அப்பா (ஏதாவது ஒரு தலைப்பில் பற்றி 5நிமிடங்களுக்குள் உச்சரிப்பு பிழையின்றி பேசவேண்டும்.)
2. கட்டுரைப்போட்டி. (100-150 சொற்களுக்குள் கட்டுரை அமையவேண்டும்) (நேரம்: 1H30)
   தலைப்புக்கள்: 1. என் இனிய நண்பன், 2. தமிழ்மொழி (இரண்டில் ஏதாவது ஒரு தலைப்பில் கட்டுரை எழுத வேண்டும்)

**காலம்: 27-02-2016 13.30 மணி தொடக்கம் 15.15 மணிவரை**

**மேற்பிரிவு: 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்.** (01-01-1998 க்கு பின் பிறந்தவர்கள்.)

1. பேச்சுப்போட்டி.
   தலைப்புக்கள்: 1. திருக்குறளின் பெருமை 2. சுவாமி விவேகானந்தர்
   இரண்டில் ஏதாவது ஒரு தலைப்பில் உச்சரிப்பு பிழையின்றி பேசவேண்டும்.
2. கட்டுரைப் போட்டி: தலைப்புக்கள்: 1. உடற்பயிற்சி 2. காலநிலைமாற்றம்
   இரண்டில் ஏதாவது ஒரு தலைப்பில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யபடும் விடயத்தைப்பற்றி 150-200 சொற்களுக்குள் கட்டுரை அமையவேண்டும். (நேரம்: 1H30)

**27-02-2016 15.00 மணி தொடக்கம் 17.00 மணி வரை**

**அதிமேற்பிரிவு: 18-22 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.** (01-01-1994 - 31-12-1997 க்கும் இடையில் பிறந்தவர்கள்.

1. பேச்சுப்போட்டி: தலைப்புக்கள: 1. தனிநாயகம் அடிகளார் 2. ஆதிக்கப்போட்டியும் அமைதியும்
   இரண்டில் ஏதாவது ஒரு விடயத்தைப்பற்றி 8 நிமிடங்களுக்கு பேசவேண்டும்.
2. மொழி பெயர்ப்பு: தமிழ் ஆக்கத்தை பிரஞ்சில் மொழிபெயர்த்தல், பிரஞ்சை தமிழாக்கம் செய்தல். (நேரம் 1H30)

குறிப்பு:

1. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும், பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் 08.05.2016ல் நடைபெறும் எமது ஒன்றியத்தின் முத்தமிழ்விழாவின்போது பரிசளிக்கப்படும்)
2. போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள்யாவும் 20.02.2016க்கு முன்னதாக ( CAFÉ BHARATH, 67, RUE LOUIS BLANC, 75010-PARIS) என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விண்ணப்ப படிவங்களை www.Pungudutivu.fr இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

### போட்டிக்கான விதி முறைகள்:

- போட்டிக்கான திகதியில போட்டியாளர் குறித்த வயதெல்லைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- போட்டிக்கான விண்ணப்பங்கள் 20.02.2016க்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கவும்.
- ஒவ்வொரு போட்டிக்கும் அனுமதிக்கட்டணமாக தலா மூன்று யூரோக்களை (நிகழ்வு நடைபெறும் இடத்தில்) நேரடியாகச் செலுத்த வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும்.
- பரீட்சைக்கான மேலதிக விண்ணப்பப்படிவங்களையும், விபரங்களையும் எமது இணையத் தளத்திலும், Café Bharath லும் பெற்றுக்கொள்ளலாம். www.Pungudutivu.fr

### விண்ணப்பப் படிவம்

01. முழுப்பெயர்:..........................................................

02. சொந்த முகவரி:..........................................................

..........................................................

03. தொலைபேசி இலக்கம்:..........................................................

04. பிறந்த திகதியும், இடமும்:..........................................................

..........................................................

05. விண்ணப்பதாரர் சார்ந்த கல்வி நிறுவனம்:..........................................................

..........................................................

**விண்ணப்பதாரர் தனிப்பட்ட முறையில் பங்குகொள்ளுமிடத்து, பெற்றோர் அல்லது பாதுகாவலர்**

பெயர்:..........................................................

01. தொலைபேசி இலக்கம்:..........................................................

அல்லது கைத்தொலைபேசி இலக்கம்:..........................................................

..........................................................

ஆகிய என்னால் மேலே தரப்பட்ட அத்தனை தரவுகளும் சரியானவை எனவும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துவதுடன்,

1. ..........................................................போட்டி
2. ..........................................................போட்டி

ஆகிய ...................... போட்டி........... பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் விண்ணப்பதகினை அனுப்புவதுடன் அதற்கான நுழைவுக்கட்டணம் .................................. யூரோக்களை மண்டபநுழைவாயிலில் செலுத்து கின்றேன். அத்துடன், போட்டி விதிமுறைகளைப் பூரணமாகப் பின்பற்றுவதுடன், நடுவர்களின் தீர்ப்பினையும் பூரண சம்மதத்துடன் ஏற்றுக்கொள்வேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

.................................................. ..................................................

ஒப்பம் ஒப்பம்

பெற்றோர் / பாதுகாவலர் / ஆசிரியர் விண்ணப்பதாரர்

*(முக்கிய குறிப்பு: விண்ணப்பப் படிவத்துடன் போட்டியில் பங்குகொள்ளும் பிள்ளைகளின் பிறந்த திகதியை நிர்ணயம் செய்து உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றின் பிரதியை சமர்ப்பிப்பதன் மூலம், நடைமுறைச் சிக்கல்கள், வழக்கள் ஏற்ப டாமல் நாம் போட்டியை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.)*

தொடர்புகளுக்கு: 06 20 52 46 90.:. 06 62 22 66 40.:. 06 84 15 23 96.:. 06 16 47 65 91

போட்டிகள் நடைபெறும் இடம்: Salle Jeanne d'Arc, 50 Place de Torcy, 75018 Paris. M° : Marx Dormoy

காலம்: 27/02/2016 காலை 8.30.

# அச்சுறுத்தும் ஜிகா வைரஸ் நோய் கர்ப்பிணிகளே அதிகம் இலக்கு

உலகில் மனிதர்கள் அதிகமாக உயிரிழப்பதற்குக்கு முதல் காரணம் நுளம்புகள்தான் என்று கூறப்படுகின்றது. அதனை இன்னும் உறுதிப்படுத்துவதுபோல் நுளம்பு மூலம் பரவும் ஜிகா வைரஸ் (Zika virus) தென் அமெரிக்க நாடுகளை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. புதிதாகப் பரவிவரும் இந்த வைரஸ், அமெரிக்கக் கண்டம் முழுவதும் அதாவது தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, கரிபீயன் தீவுப் பகுதிகளில் மிக வேகமாகப் பரவும் ஆபத்துக் காணப்படுவதாக, உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நோய், கரீபியன் தீவுகள், வட, தென் ஏற்படுத்துவதாக இதுவரை அறியப்படாதபோதும், மனிதர்களுக்கு பெரும் பாதிப்புகளையே ஏற்படுத்துவதாகக் கருதப்படுகிறது. சுகாதார அதிகாரிகளின் அண்மைய கருத்தின்படி, நரம்பியல் பாதிப்புகளை இது ஏற்படுத்தக்கூடு மெனவும், பிறப்பின்போது, குழந்தைகளுக்குக் கடத்தப் படக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, நீண்ட கால நோக்கில், பாரிய அச்சுறுத்தலாக இது அமையுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நோயைத் தடுப்பதற் கான மருந்துகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், இதைத் தடுப்பதென்பது, பாரிய சவாலானதான



அமெரிக்கக் கண்டங்களில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது. இந்த வைரசினால் ஏற்படும் நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளாக, மெல்லிய காய்ச்சல், விழி வெண்படல அழற்சி, தலையிடி ஆகியன அறிவிக்கப்பட்டுள்ளன.

80 சதவீதம் பேருக்கு எந்த அறிகுறியும் தெரியாது. அதுவும் கர்ப்பிணி பெண்களுக்கு ஜிகா வைரஸ் தாக்குதல் பாதிப்பை கண்டுபிடிப்பது சிரமம். ஆனால் பாதிப்பு தீவிரம். இந்த வைரஸ் உகாண்டாவில் உள்ள ஜிகா காட்டில் உள்ள குரங்குகளிடம் இருப்பது முதன் முதலில் 1947ம் ஆண்டு கண்டுபிடிக்கபட்டது. அதனால் இந்த வைரஸ்சிற்கு ஜிகா என்று பெயர் சூட்டப்பட்டது. ஆனால், இந்த வைரஸ் பற்றிய ஆய்வுகள் இப்போதுதான் தீவிரமாக மேற்கொள்ளப்பட் டுள்ளது. கர்ப்பிணி பெண்களுக்கு இந்த ஜிகா வைரஸ் எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் பற்றியும் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. ஆனால் இந்த வைரஸ் பாதிப்பால் குழந்தைகள் ‘மைக்ரோசெபாலி’ பாதிப்புடன் பிறக்குமா என்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மைக்ரோசெபாலி பாதிப்பு ஏற்பட்டால் குழந்தைகள் சிறிய தலையுடன் பிறக்கும். இதை வாழ்நாள் முழுவதும் சிகிச்சையால் சரி செய்யவே முடியாது. ஜிகா வைரஸ் பாதித்த கர்ப்பிணிகளுக்கு சிறிய தலை, மூளை வளர்ச்சியின்மை, பார்வை குறைபாடு, நரம்பு மண்டல பாதிப்பு உள்ளிட்ட பல பிரச்னைகளுடன் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. பாதிப்பு தீவிரமாக இருந்தால், அந்தக் குழந்தைகளுக்கு பேச்சு பயிற்சி, உடற் பயிற்சி போன்றவை எதிர்காலத்தில் அளிக்க வேண்டியிருக்கும்.



இதனால் எல் சல்வடார், பிரேசில் மற்றும் கொலம்பியா உட்படச் சில நாடுகளில் பெண்கள் இன்னும் 2 ஆண்டுகளுக்குகருத்தரிப்பதைதவிர்க்கும்படிஅறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஜிகா வைரசால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என கணக்கெடுக்கப்படவில்லை என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும், தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் 20,297 பேருக்கு ஜிகா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 2 ஆயிரத்தி 116 பேர் கர்ப்பிணி பெண்கள்கள் என்றும் அந்நாட்டு சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. பிரேசிலில் மட்டும் இதுவரை 15 இலட்சம் பேர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 25 நாடுகளில் சுமார் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்ணளவான தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுளம்புக் கடியினால் ஏற்படும் இந்நோய், மரணத்தை ஒன்றாக மாறியுள்ளது.

இந்த வைரசால் ஏற்படும் பாதிப்புக்குறித்து ஆலோசிக்க உலக சுகாதர அமைப்பு ஜெனீவாவில் பெப்ரவரி முதலாம் திகதி அவசர கூட்டத்தை கூட்டி ஆராய்ந்துள்ளது. இந்த வைரஸ்சிற்கு மருந்து கண்டு பிடிக்கும் ஆய்வில் அமெரிக்கா, கனடா, தென்கொரியா போன்ற நாடுகள் ஏற்கனவே ஈடுபட்டுள்ளன. வைரஸை தடுக்கும் தடுப்பு மருந்துகள், அதற்கான சிகிச்சைகள் குறித்து விரைவாக கண்டு பிடிக்குமாறு அதற்குறிய தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் அமெரிக்க அதிபர் ஒபாமாவும் கோரியுள்ளார். இந்நிலையில், கனடா விஞ்ஞானி சேரி கோபின்கர் ஜிகா வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் மருந்து கண்டு பிடித்துள்ளதாகக் கூறியுள்ளார். ஜிகா வைரஸ் நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. முதல் கட்டமாக வருகிற ஓகஸ்ட் மாதத்தில் நோய்பாதித்தவர்களின் உடலில் செலுத்தி பரிசோதிக்கப்படும். அதில் வெற்றி கிடைத்து விட்டால் ஒக்டோபர் அல்லது நவமபர் மாதத்தில் பொது மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்படும் என கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, இந்த வைரஸ் அச்சுறுத்தலால் பிரேசில் ஒலிம்பிக் போட்டி நடைபெறுமா? என சந்தேகம் எழுந்துள்ளது. தென் அமெரிக்கா கண்டத்தில் முதன் முறையாக ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது. பிரேசில் தலைநகரம் ரியோ டி ஜெனீரோவில் வருகிற ஓகஸ்ட் மாதம் தொடங்குகிறது. பிரேசிலில் தான் சிகா வைரஸ் நோய் அதிவேகமாக பரவுகிறது. எனவே போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் பார்வையாளர்களை தாக்கும் அபாயம் உள்ளது. இது குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து சர்வதேச ஒலிம்பிக் சபை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதே வேளை, இது குறித்து உலக சுகாதார நிறுவனம் பிரேசில் நாட்டு அதிகாரிகளுடனும் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், ஒலிம்பிக் போட்டிகளில், இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரேசில் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## மனிதனுக்கு காது தரும் எலி

ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானிகள் எலியொன்றின் முதுகில் மனித காதொன்றை வெற்றிகரமாக வளர்ச்சியடையச் செய்துள்ளனர். ஆய்வுகூடத்தில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விருத்தி செய்யப்படும் காதுக்கான அடிப்படைக்கூறுகள் காது வடிவான பிளாஸ்டிக் கட்டமைப்பில் உட்செலுத்தப்பட்டு எலியொன்றின் முதுகில் பொருத்தப்பட்டு வளர்ச்சியடையச் செய்யப்படுவதாக



அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த செயன்முறையைப் பயன்படுத்தி வளர்ச்சியடையச் செய்யப்படும் காதுகளை எதிர்வரும் 5 வருட காலத்துக்குள் மனிதர்களில் பயன்படுத்த முடியும் என நம்புவதாக டோக்கியோ மற்றும் கயோட்டா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காதுகளை பிறப்பு ரீதியிலும் நாய்களால் கடித்துக் குதறப்பட்டும் காதுகளை இழந்த சிறுவர்களுக்கு பொருத்தி அவர்களுக்கு இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு உதவியளிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்ப்பதாக அவர்கள் கூறுகின்றனர். அது மட்டுமல்லாது போர்களிலும் விபத்துகளிலும் காதுகளை இழந்தவர்களுக்கும் இவ்வாறு ஆய்வுகூடத்தில் விருத்திசெய்யப்படும் காதுகள் உதவும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அமெரிக்க யோகா குருவுக்கு ஒரு மில்லியன் டொலர் அபராதம்

பாலியல் தொல்லை தொடர்பான வழக்கில், அமெரிக்காவின் பிரபல யோகா குரு விக்ரம் சௌத்திரிக்கு அமெரிக்க நீதிமன்றம் 1 மில்லியன் டொலர் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. இந்தியாவைச் சேர்ந்த 69 வயதான யோகா குரு விக்ரம் சௌத்திரி. அமெரிக்காவில் யோகா பயிற்சி அளித்து வருகிறார். இவரிடம் வழக்கறிஞராக பணியாற்றியவர் மீனாட்சி ஜபா போத்தன். அப்போது அவருக்கு பாலியில் தொல்லை கொடுத்துள்ளார். இதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். யோகா மையத்துக்கு வந்த மற்ற பெண்களுக்கும் விக்ரம் சௌத்திரி பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.




இது குறித்த விசாரணையில் மீனாட்சி ஈடுபட்டார். இதையடுத்து அவரை வேலையில் இருந்து நீக்கினார் விக்ரம். இதையடுத்து அமெரிக்க நீதிமன்றத்தில் விக்ரம் சௌத்திரிக்கு எதிராக மீனாட்சி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் யோகா குருவுக்கு 1 மில்லியன் டொலர் அபராதம் விதித்து லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. தாம் எந்த தவறும் செய்யவில்லை என சௌத்திரி நீதிமன்றத்தில் மறுத்தார். இவை அனைத்தும் பொய் என்றும் அவர் கூறினார். எனினும், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால் அபராதம் விதிக்கப் பட்டது. இந்தத் தொகையை பாதிக்கப்பட்ட பெண் சட்டத்தரணி மீனாட்சிக்கு வழங்கும்படியும் உத்தரவிட்டது. யோகா குரு மீது மேலும் 5 பெண்கள் இது போன்ற முறைப்பாடுகளை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவாக பிரித்தானியாவில் துண்டுப் பிரசுரங்கள்

ஐரேப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா இணைந்திருப்பதை வலியுறுத்தி 1 கோடி துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவான இயக்கம் முடிவு செய்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய

## குடியரசு நோக்கி அவுஸ்திரேலியா!

அவுஸ்திரேலியாவைக் குடியரசு நாடாக்குவதற்கான இயக்கம், பலம்பெற்று வருகின்றது. இதனால் அந்நாடு, குடியரசு நாடாக மாறுவதற்கான காலம், விரைவில் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவைக் குடியரசாக்குவதற்குவதற்கான இயக்கத்தில் பங்கெடுப்பதற்காக, அவுஸ்திரேலியாவின் மாகாணங்களினதும் பிராந்தியங்களினதும் தலைவர்களில் பெரும்பாலானோர், தங்கள் சம்மதத்தை வெளிப்படுத்தி கைச்சாத்திட்டுள்ளனர். மேற்கு அவுஸ்திரேலியாவின் பிரதமரான கொலின் பார்னெட் மாத்திரமே, இதில் கைச்சாத்திடாத ஒரே ஒரு மாகாணத் தலைவராவார். எனினும், அவர் கூட, இந்த இயக்கத்துக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். இதை முன்னெடுப்பதற்கான நேரம் தற்போது சரியாகக் காணப்படவில்லை என்பதே, அவரது கருத்தாகும். அவுஸ்திரேலியாவில் ஜனநாயகரீயாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் காணப்படுகின்ற போதிலும், நாட்டின் தலைமைப் பொறுப்பு, பிரித்தானிய மகராணியிடமே காணப்படுகிறது. இதை மாற்ற வேண்டுமென்பதே, இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

## பாகிஸ்தானில் இதுவரை 332 பேருக்கு மரண தண்டனை

மரண தண்டனைக்கு பாகிஸ்தான் அரசு தானாகவே விதித்துக் கொண்ட தடையை விலக்கிக் கொண்ட பிறகு, இதுவரை 332 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2014ம் ஆண்டு டிசம்பர் 16ம் திகதி பெ'ாவர் பாடசாலையில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 150ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலான மாணவர்கள். இந்தக் கொடூரத் தாக்கு தலையடுத்து, ஆறு ஆண்டுகளாக மரண தண்டனை நிறைவேற்றத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பாகிஸ்தான் அரசு விலக்கிக் கொண்டது. அதையடுத்து, அந்நாட்டில் இதுவரை 332 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர்கள் பயங்கரவாதக் குற்றங்கள், போதை மருந்து கடத்தல், கொலைக் குற்றம் உள்ளிட்ட கொடிய குற்றங்களுக்காக மரணதண்டனைவிதிக்கப்பட்டவர்கள்.

## உலகிலேயே வயதானவர் சாவு

உலகிலேயே அதிக வயதுடைய மனிதர் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற ஜப்பானை சேர்ந்த யசுடாரோ கோய்டே காலமானார். இதே ஜப்பான் நாட்டில் வாழ்ந்து வந்த சகாரி மொமாய் கடந்த ஓகஸ்ட் மாதம் காலமானதை யடுத்து, கோய்டே உலகிலேயே அதிக




வயதனாவர் பட்டியலில் முதலிடம் பிடித்தார். தையல் தொழிலாளியான கோய்டே, இதயம் செயல் இழந்ததால் இறந்ததாக மருத்துவர்கள் கூறினார். இன்னும் இரு மாதங்களில் 113வது பிறந்த நாளை கொண்டாடவிருந்த கொய்டே வாழ்நாள் முழுவதும், புகை மற்றும் மது பழக்கங்கள் இல்லாமல் வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்து வந்ததாக உறவினர் ஒருவர் கூறினார்.

## அமெரிக்க காவலருக்கு 263 ஆண்டு சிறை

அமெரிக்காவில், தனது பணிக் காலத்தின்போது கறுப்பினப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த குற்றச்சாட்டில் முன்னாள் காவலருக்கு 263 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஓக்லஹோமா மாகாணத்தில் காவல் துறை அதிகாரியாகப் பணியாற்றியவர் டேனியல் ஹோல்ட்ஸ்கிளா. 2013 முதல் 2014ம் ஆண்டு வரை அவர் கறுப்பினப் பெண்களை பாலியல் பலாத்காரம் மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியதாக குற்



றம்சாட்டப்பட்டது. அவரால் பாதிக்கப்பட்ட டெமெட்ரியா கேம்பல் என்ற பெண், இது தொடர்பாக 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் வழக்கு தொடர்ந்தார். டேனியலுக்கு எதிராக குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் கிடைத்ததையடுத்து, அவர் கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டர். இந்த நிலையில், டேனியல் மீதான 36 குற்றச்சாட்டுகளில் 18 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நீதிமன்றம் அறிவித்தது. இந்த நிலையில், இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிமன்றம், டேனியலுக்கு 263 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

## இறந்து பிறந்த 25 இலட்சம் குழந்தைகள்!

உலகில் இறந்த நிலையில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 2015ம் ஆண்டில் மட்டும் இருபத்து ஐந்து இலட்சத்தை விட அதிகம் என புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது. இறந்து பிறக்கும் குழந்தைகளின் விகிதம் உலகிலேயே அதிகமாக உள்ள நாடு பாகிஸ்தான் என்றும் அந்த ஆய்வு அறிக்கை கூறுகின்றது. இறந்து பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கிலானவை ஆபிரிக்காவில் தான் இடம்பெறுகின்றதாம். இறந்து பிறந்த குழந்தைகளின் தொகையில் பாதிக்கும் மேலானவை பிரசவத்தின்போது இறந்தது தான், பயங்கரமான அதிர்ச்சியை தருவதாக தெரிவித்துள்ள அந்த அறிக்கை, அப்படியான இறப்புகளில் பெரும்பாலானவற்றை தடுத்திருக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளது. இறந்து பிறக்கும் குழந்தைகளில் 6.7 சதவீதமானவை 35 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய தாய்மாருக்கு பிறந்துள்ள அதேசமயம், ஏழ்மையும் இந்த குழந்தைகள் இறந்து பிறப்பதில் முக்கிய பங்கை வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## மின்சார கட்டணம் செலுத்தாத கடைசி மன்னர்!

நேபாளத்தின் கடைசி மன்னரான ஞானேந்திரா, கடந்த 10 ஆண்டுகளாக மின்சார கட்டணம் செலுத்தவில்லை என மின் ஆணையம் தெரிவித்துள்ளது. மன்னராட்சி நடந்து வந்த நேபாளத்தில், மாவோயிஸ்டுகள் தலைமையில் நடந்த பெரும் போராட்டத்தின் விளைவாக அங்கு மன்னராட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, ஜனநாயக அரசு பொறுப்பேற்றுள்ளது. இந்நிலையில், அவர் அந்த அரண்

→ 25

அமைப்பின் உறுப்பினரான பிரித்தானியா, அந்த அமைப்பில் தொடர்ந்து நீடிக்கலாமா, வேண்டாமா என்பது குறித்த பொது வாக்கெடுப்பை வரும் 2017ம் ஆண்டின் இறுதியில் நடத்த உள்ளது.

இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் நீடிப்பதால் பிரித்தானியாவிற்குக் கிடைக்கும் நற்பலன்களை விளக்கும் 1 கோடி துண்டுப் பிரசுரங்களை 'ஐரோப்பாவுடன் இருந்து அதிக பலம் கொள்வோம்' அமைப்பு பொதுமக்களிடம் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர் கேரன் பிரேடி கூறியதாவது: உலகம் முழுவதும் 50–க்கும் மேற்பட்ட நாடுகளுடன் தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலம், பிரித்தானிய நிறுவனங்கள் உலகச் சந்தைகளை எளிதாக அடைகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருந்தால்தான் பிரித்தானிய நிறுவனங்களால் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றார் அவர்.

## 'கடவுள் மீது நம்பிக்கையாக' அமெரிக்க நாணயத்தாளுக்கு எதிராக வழக்கு

அமெரிக்க அரசியல் சாசனத்துக்கு எதிராக நாட்டின் பணத் தாள்களில் உள்ள 'கடவுள் மீது நம்பிக்கையாக' என்ற வாசகத்தை நீக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஸ்கார்மெண்டோ பகுதியில் வசிக்கும்




மருத்துவம் மற்றும் வழக்கறிஞர் தொழில் செய்து வரும் மைக்கேல் நியூடௌ உள்ளிட்ட பலர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். அமெரிக்க டொலர் பணத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள 'கடவுள் மீது நம்பிக்கையாக' என்ற வாக்கியம் 1993ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மத சுதந்திர சட்டத்துக்கு எதிராக உள்ளது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், அந்த வாசகம் கிறிஸ்துவ ஏகத்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் உள்ளது என்றும் கூறியுள்ளனர். 112 பக்கம் உள்ள அந்த மனுவில் 100க்கும் அதிகமான முறையில் கடவுள் (God) என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. எனினும் ஒவ்வொரு முறையும் அவர்கள் அதை 'G–d' என்ற குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, மைக்கேல் நியூடௌ முன்னதாக 2010ம் ஆண்டு கலிபோர்னியாவில் உள்ள நீதிமன்றத்தில் இதுபோன்ற ஒரு வழக்கை தொடுத்திருந்தார். அதை நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அட இதற்கும் ஆயுள்தடை!

வாகனங்கள் ஓடுபவர்கள் மிகமோசமாக அதனைச் செலுத்தி விபத்துக்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு ஆயுளுக்கும் வாகனங்கள் ஓடாமல் தடை விதிக்கப்படுவது பல்வேறு நாடுகளிலும் நடக்கின்ற ஒன்று. ஆனால், பிரித்தானியாவில் ஒருவருக்கு மிதிவண்டி (சைக்கிள்) ஓடுவதற்கு நீதிமன்றம் ஆயுள்தடை விதித்திருக்கின்றது.

பிரித்தானியாவில் பல பகுதிகளில் உரிமையாளர்களால் நிறுத்தப்பட்டிருந்த மிதிவண்டிகள் தொடர்ந்து காணாமல் போவதாக காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர். இதுகுறித்து விசாரணை மேற்கொண்ட அதிகாரிகள் போதை மருந்துக்கு அடிமையான 47 வயது ஜோன் லிடிகோட் என்பவரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், பல்வேறு பகுதிகளில் இருந்து மிதிவண்டிகள் மற்றும் பல்வேறு பொருட்களை திருடியதை காவல்துறை உறுதி செய்தது.

இந்நிலையில் நீதிமன்றத்தில் தமது குற்றங்களை ஒப்புக்கொண்ட ஜோன் லிடிகோட்டுக்கு மிதிவண்டிகளை பயன்படுத்த ஆயுள் தடை விதித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், மூன்றரை ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்துள்ளது. தண்டனை காலம் முடிவடைந்த பின்னர், மிதிவண்டி அருகாமையில் இருந்தால் கூட மேலும் 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்படும் எனவும் நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார். லிடிகோட்டுக்கு மிதிவண்டிகள் பலவீனம் என்பதால் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள் என எந்த பொது வளாகங்களிலும் செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளது. பிரித்தானியாவிலேயே மிதிவண்டி பயன்படுத்த ஆயுள் தடை விதிக்கப்படுவது முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் 20 மாதங்களில் 19 ஆயிரம் பேர் பலி!

## ஐ.நா. கூறுகின்றது

ஈராக்கில் 20 மாதங்களில் சுமார் 19 ஆயிரம் பொது மக்கள் உயிரிழந்துள்ளதை ஐ.நா. அறிக்கையொன்று உறுதிப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவித்த வன்முறையானது அதிர்ச்சியடைய செய்யும் விதமானது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. 2014 ஜனவரி 1ம் திகதியில் இருந்து 2015ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி வரையில் சுமார் 18,802 பேர் கொல்லப்பட்டும், 36,245 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்றும் இந்த எண்ணிக்கை



யானது மிகவும் அதிகமானது என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் புதிய அறிக்கையின்படி மேற்குறிப்பிட்ட காலகட்டங்களில் சுமார் 3.2 மில்லியன் மக்கள் இருக்க இடமற்று உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொதுமக்களை, பணையக் கைதிகளாக பிடித்து வைத்து கொடூரமான முறையில் கொலை செய்து வருகின்றனர். ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் திட்டமிட்டு பரவலான வன்முறையை செய்துவருகிறது என்று குற்றம் சாட்டியுள்ள ஐ.நா., தீவிரவாதிகள் 3500 பேரை அடிமைகளாக வைத்துஉள்ளனர், இதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று தெரிவித்துள்ளது.

இராணுவம், தீவிரவாதிகள் மற்றும் குர்திஷ் படைகளும் மீறல்களில் ஈடுபட்டுள்ளன என்று ஐ.நா. பதிவு செய்துள்ளது. மனித உரிமைகளுக்கான ஐ.நா.வின் தூதர் அல்–ஹுசையின், "ஈராக் அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கும், பிற பகுதிகளுக்கும் தப்பிக்க முயற்சி செய்வதே இதனை அப்பட்டமாக விளக்குகிறது. அவர்கள் தங்களது சொந்த மண்ணில் எதிர்கொண்டது மிகவும் கொடூரமானது" என்று புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஈராக்கிறான ஐ.நா.வின் உதவி மையம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதகரம் தரப்பில் அறிக்கையானது அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015ம் ஆண்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூரங்களில் சில ஐ.நா.வினால் பட்டியலிடப்பட்டுள்ளன. ஆவையாவன...

10 யூலை: மத்திய மொசூல் நகரில் தங்களிடம் பிடிபட்டவர்களை வரிசையாக படுக்கவைத்து, பொது மக்கள் முன்னிலையில் அவர்கள் மீது புல்டோசர் ஏற்றப்பட்டது.

4 யூன்: ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டதாக 2 இளைஞர்கள் மற்றும் ஒரு முதியவர் நினிவாவில் மாடிக் கட்டடத்தில் இருந்து தூக்கிவிசப்பட்டனர்.

1–2 ஓகஸ்ட்: மொசூல் நகரில் தீவிரவாதிகளுடன் உடலுறவிற்கு மறுத்த 19 பெண்கள் கொலை செய்யப்பட்டனர்.

21 யூன்: மொசூல் நகரில் நடைபெற்ற குர்ஆன் மனப்பாடமாக சொல்லும் போட்டியில் முதன்மையாக வந்த முதல் மூன்று பேருக்கு, பெண்கள் பாலியல் அடிமைகளாக வழங்கப்பட்டனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களிடம் சிக்கியவர்களை தலையை வெட்டியும், தீயிட்டு கொழுத்தியதும், தண்ணீரில் மூழ்கடித்ததும் கொலை செய்தனர்.

மோதலில் பாதிக்கப்பட்ட மேற்கு மாகாணமான அன்பர் மாகாணத்திலே அதிமான மக்கள் உயிரிழந்தனர். மாகாணத்தின் பல பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்ததன் விளைவாகவே உயிரிழப்பு நேரிட்டது.

பாதி உயிரிழப்பு பாக்தாத் மாகாணத்தில் பதிவாகி உள்ளது. கண்ணி வெடிகுண்டுகள் பொது மக்களுக்கு எதிராக பயன்படுத்தியதே இறப்பிற்கு காரணமாகும் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது. இருப்பினும், ஈராக்கில் கடந்த 2006 மற்றும் 2007ம் ஆண்டுகளில் ஏற்பட்ட குறுங்குழுவாத எழுச்சியில் ஏற்பட்ட உயிரிழப்பைவிட குறிப்பிடத்தக்க அளவில் குறைவானதே என்று கூறப்பட்டுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதமானது தொடர்ந்து திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டு வருகிறது மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறி வருகிறது என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் குற்றம் என்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றமாகும், இன அழிப்புக்கு வாய்ப்பு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கின் மொசூல் நகரில், ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினரால் பணம் வைக்கப்பட்டிருந்த கட்டடத்தை அமெரிக்க இராணுவத்தினர் விமானங்களில் இருந்து குண்டுவீசி தகர்த்தனர். பதுக்கி வைத்திருந்த பணம் அனைத்தும் எரிந்து சாம்பலாகின. இதனால் ஐஎஸ் தீவிரவாதிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மொசூல் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கென கருவூலம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்து உலகம் முழுவதும் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு பணம் அனுப்பபட்டு வருகின்றது. இந்நிலையில், அவர்களுக்கு பணத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும், பொருளாதார ரீதியில் நிலைகுலைய வைக்கும் பொருட்டும் அவர்களது கருவூலத்தை அழிக்க அமெரிக்க திட்டமிட்டது. அதற்கான வியூகங்களை வகுத்த அமெரிக்க படையினர், பணம் பதுக்கி வைத்திருந்த கட்டடத்தின் மீது இலக்குவைத்து தாக்குதல் நடத்தினர். அமெரிக்க போர் விமானங்கள் மூலம் குண்டு வீசப்பட்டு கருவூலம் அழிக்கப்பட்டது. அங்கிருந்த பணம் முழுவதும் அழிக்கப்பட்டுவிட்டது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. கருவூலத்தின் மீது குண்டுவீசப்பட்டது குறித்து பென்டகன் வட்டாரங்கள் அதிகாரப்பூர்வமாக அறித்துள்ளது. குண்டுவீசி அழிக்கப்பட்ட பணத்தின் மதிப்பு குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. கருவூலத்தை அழிக்க ஒரு தொன் நிறையுள்ள குண்டுகள் பல பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

தாக்குதல் எதிரொலியாக ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு வழங்கப்படும் மாதச் சம்பளம் பாதியாக குறைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


## கோழிக்கழிவுகளை உணவாகக் கொடுத்த கே.எப்.சி!

கே.எப்.சி. அடிக்கடி மோசமான உணவுவகைகளை கொடுத்து வாடிக்கையாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை சந்திப்பது வழக்கம். தற்போது வாடிக்கையாளர் ஒருவருக்கு பொரித்த கோழிக்கால் வழங்குவதற்குப் பதிலாக வேகாத, அதுவும் கழிவாக தூக்கி எறியப்படும் கோழியின் கழிவுப் பொருட்களை, அதுவும் வேகாத நிலையில் பரிமாறி கடும் சர்ச்சையில் மீண்டும் சிக்கியுள்ளது. பிரித்தானியாவைச் சேர்ந்த கசாண்ட்ரா பெர்கின்ஸ் என்ற இளம்பெண், வெலிங்போராவில் உள்ள நார்த்தாண்ட் கே.எப்.சி. கிளைக்கு கடந்த 13ம் திகதி சாப்பிடச் சென்றபோதே இந்த அவலத்தைச் சந்தித்துள்ளார்.

# பிரான்சில் மையம் கொள்ளும் பயங்கரவாதச் சூறாவளி!

தயேஷ் எனப்படும் இஸ்லாமியதேசப் பயங்கரவாதிகள், பிரான்சிற்கான தாக்குதல் எச்சரிக்கை அடங்கிய காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளனர். 17 நிமிடங்கள் நீடிக்கும் இந்த எச்சரிக்கைக் காணொளியானது, சிரிய – ஈராக்கியப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிடித்து வைத்திருக்கும் கைதிகளைத் தலைவெட்டிக் கொல்லும் இரக்கமற்ற பயங்கரவாதிகளின் சான்றாக இந்த எச்சரிக்கை அமைந்துள்ளது. இந்தக் காணொளியில், பரிசில் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை ஒழுங்கமைத்து நடாத்திப் பின்னர், காவற்துறையினரின் அதிரடித்தாக்குதலில் கொல்லப்பட்ட, அப்தெல் ஹமீத் அபாவூத் இன் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட இவரது குரல் போன்ற ஒரு குரலில், பிரெஞ்சுமொழியில், பிரான்சின் மீதான கடுமையான வெறுப்பும், துவேசமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ‘நாங்கள் உங்களைக் கட்டாயம் கொல்வோம். இதற்காக நாம் உறுதிபூண்டுள்ளோம்’ என, ஜிகாதிப் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றை உறுதி செய்துள்ளனர். பரிசின் மீதான நவம்பர் பதின்மூன்றின் தாக்குதலை மகிமைப்படுத்தி இந்த எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

பிரான்சிற்கான எச்சரிக்கையோடு, அனைத்து இஸ்லாமியர்களையும், ரோமை இலக்கு வைத்து எழுச்சி கொள்ளுமாறு கோசமிடப்பட்டுள்ளது. அத்தோடு பிரித்தானியா மீதும், அதன் பிரதமர் டேவிட் கமரூன் மீதும் தாக்குதல் நடத்துமாறும், இஸ்லாமியர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. ‘நீங்கள், உங்கள் வீடுகளில், ஏன் உங்கள் கனவுகளில் கூடப் பாதுகாப்பாக இருக்க முடியாது’ என வருங்காலத் தற்கொலைப் பயங்கரவாதிகள் இந்தக் காணொளியில் எச்சரித்துள்ளனர். கடந்த வாரம் தயேஷ் வெளியிட்ட, அவர்களது பிரச்சாரச் சஞ்சிகையில், பரிசின் மீது 2015 இல் தாக்குதல் நடாத்திய அத்தனை பயங்கரவாதிகளிற்கும் புகழ்பாடப்பட்டுள்ளது. இதில் இன்னமும் தேடப்பட்டுக் கொண்டிருக்கும், சாலா அப்தெல்சலாம் மட்டும் இருக்கவில்லை என்பது குறிப்படத்தக்கது.






‘நாங்கள் எங்கள் நடவடிக்கைகள் எதனையும் நிறுத்தமாட்டோம். எச்சரிக்கைக் காணொளிகள் பயங்கரவாதிகளிற்கே எதிரானதாக அமையும். இது எங்களை அச்சுறுத்திவிட முடியாது’ என தயேஷின், பிரான்சிற்கான எச்சரிக்கைக் காணொளி குறித்து, ஜனாதிபதி பிரான்சுவா ஒல்லோந்த் கண்டனம் தெரிவித்துப் பதிலடி கொடுத்துள்ளார். இந்தக் காணொளியின் உண்மைத் தன்மை இன்னும் ஆராயப்படவில்லை என, ஜனாதிபதியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியாவிலிருந்தே ஜனாதிபதி, இந்தக் காணொளி எச்சரிக்கைக்கு உடனடியாகவே பதில் அளித்துள்ளார். இந்தக் காணொளியில் சிவப்பு இலக்கு வைக்கப்பட்டவர்களில் பிரதமர் மனுவல் வால்சும் இணைக்கப்பட்டுளார்.

கடந்த திங்கட்கிழமை காலை இந்தியத் தலைநகர் டில்லியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில், இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட, பிரான்சுவா ஒல்லோந்த், தன்னைப் பயங்கரவாதத்திற்கு எதிரான, இராணுவத் தளபதியாக உறுதி செய்து கொண்டார். ‘எங்களை எதுவும் தடைசெய்யமுடியாது. எந்த எச்சரிக்கையோ, அச்சுறுத்தலோ, பிரான்சின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரைத் தடுத்து விடமுடியாது. நான் அவசர காலத் தடைச்சட்டத்தை நீட்டிக்கக் கோருவதன் காரணம், தொடரும் இந்த அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்காகவே! நாங்கள் எங்கள் தேசத்தைக் காக்கவும், சுதந்திரத்தைப் பேணவும், எங்கள் நடவடிக்கையைத் தொடருவோம்’ என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த உரையின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் அருகில் இருந்தார். ஜனவரி மாத ஆரம்பத்தில், இந்திய – பாக்கிஸ்தானிய எல்லையில் அமைந்துள்ள, பக்கென்தோ இராணுவ முகாம் மீது, இஸ்லாமியப் பயங்கரவாதிகள் தாக்குதல் நடாத்தியதில் பதினொரு பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தயேஷின் இந்தப் பயங்கரவாதத் தாக்குதற் திட்டங்களை உறுதிப்படுத்தும் வகையில், இஸ்லாமியதேசப் பயங்கரவாதிகளான தயேஷ், ஐரோப்பா மீது, முக்கியமாகப் பிரான்சின் மீது, மிகவும் ஆபத்தான தாக்குதல்களை நடாத்தத் தயராக உள்ளதாக, ஐரோப்பியக் காவற்துறையினரான யூரோபோல் (EUROPOL) இயக்குநர் எச்சரித்துள்ளார். தயேஷ், ஒரு புதிய தாக்குதல் யுக்தியைப் பயிற்சி எடுத்து, மிகவும் பாரிய அளவில் தாக்குதல்களை நடாத்த உள்ளனர் என, ஆம்ஸ்டெர்டாமில் நடைபெற்ற, உள்துறை அமைச்சர்களின் சந்திப்பில், யூரோபோலின் இயக்குநர் Rob Wainwright எச்சரித்துள்ளார்.

‘தயேஷ் ஐரோப்பிய உறுப்பு நாடுகளின் மீது தங்களின் தாக்குதலை மையப்படுத்த உள்ளனர். முக்கியமாகப் பிரான்ஸ் குறிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் அமைதியையும், பொருளாதாரத்தையும் சீர்குழைக்க, பொதுமக்கள் மற்றும், பொதுப்பணி நிறுவனங்களை, இவர்கள் குறிவைத்துள்ளார்கள். இவர்கள் தாக்குதல் முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உலகின் எந்தப் பகுதியிலும் நினைத்தவுடன் தாக்குதல் நடாத்தும் வகையில் இவர்கள் வளர்ச்சியடைந்துள்ளார்கள். இவர்களின் தாக்குதல் தளபதிகளிற்கு, ஒவ்வொரு இடத்திலும் நடாத்தப்படும், தாக்குதலகளின் முறையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களிற்கான தாக்குதலை நடாத்தபவர்கள் ஏற்கனவே அந்தந்த நாடுகளிற்குள் ஊடுருவி உள்ளனர். பிரான்சிற்குள் ஏற்கனவே பலர் ஊடுருவித் தங்கித் தயாராக உள்ளனர்’ என யூரோபோல் தனது எச்சரிக்கையையும், அவதானிப்பையும் தெரிவித்துள்ளது.

இதற்காகப் ‘புதிய ஐரோப்பிய பயங்கரவாத எதிர்ப்பு மையம்’ «Centre européen de contre-terrorisme» ஒன்றை அமைப்பதுடன், அனைத்து ஐரோப்பிய நாடுகளும் இணைந்து, பயங்கரவாதத்திற்கு எதிரான, மிகவும் கடுமையான, ஒன்றிணைந்த நடவடிக்கையை, மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனாலும், கடந்த வசந்தகாலத்திலிருந்து (printemps), பிரான்ஸ், முக்கியமான ஆறு பயங்கரவாதத் தாக்குதல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளதாக, உள்துறை அமைச்சர் பேர்நார் காசநெவ் தெரிவித்துள்ளார்.

‘முறியடிக்கப்பட்ட தாக்குதல்கள் அனைத்துமே, நவம்பர் பதின்மூன்றாம் திகதித் தாக்குதல் போன்றதும், சில அதை விட மோசமானவையும் ஆகும். 2015ஆம் ஆண்டில், மிக முக்கியமானதும் ஆபத்தானதுமான, பயங்கரவாதிகளின் பதினொரு தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன. ஒரு இசை மண்டபத்தின் மீதான தாக்குதலும், நவம்பர் பதின்மூன்று போன்றதான, பெருநகர வீதியில் நடாத்த இருந்த தாக்குதல் ஒன்றும் முறியடிக்கப்பட்டுள்ளன’ என அமைச்சர் தொலைக்காட்சி ஊடகச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இதே போன்றதான தாக்குதல்கள், நவம்பர் பதின்மூன்றில், 130 உயிர்களைப் பலியெடுத்திருந்தது. இவை தடுக்கப்படாவிட்டால் மேலும் பலநூறு இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலிற்கெதிரான, ஐரோப்பாவின் ஒருங்கிணைந்த, இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்குமறு ஐரோப்பிய ஒன்றியம், இந்த நாடுகளிற்குத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஹாரிஸ் அளித்த பேட்டியில், அது பார்க்கவே மிகக் அருவெருப்பாக இருந்தது. நான் அதைத் தொடக்கூட விரும்பவில்லை. பார்ப்பதற்கு மூளை அல்லது நுரையீரலின் பச்சை மாமிசம் போல் இருந்தது. எனது பேர்கரில் கூட தலைமுடி இருந்தது. பார்த்ததும் குமட்டிக் கொண்டு வந்தது. நிச்சயமாக என் வாழ்நாளில் இனி ஒருபோதும் இனி கே.எப்.சி உணவகத்தில் சாப்பிடவே மாட்டேன் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், நடந்த இந்த விவகாரம் குறித்து மன்னிப்புப் கேட்டுள்ள கே.எப்.சி நிர்வாகம் இது ஒரு விபத்து என்று குறிப்பிட்டுள்ளது. நீக்கப்பட வேண்டிய நேரத்தில் கோழியின் கழிவுகள் நீக்கப்படாமல் விடுவதால் சில எதிர்பாராத தருணங்களில் இது போன்ற தவறுகள் நடந்து விடுகின்றன. வருங்காலத்தில் உணவின் சுகாதாரம் குறித்து கூடுதல் அக்கறையுடன் இருக்குமாறு எங்கள் ஊழியர்களுக்கு நாங்கள் நினைவு படுத்தியுள்ளோம். அதே நேரத்தில் வாடிக்கையாளர்கள், உணவில் ஏதேனும் குறை இருந்தால் எங்களிடம் உடனடியாக தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளது.

## கன்னித்தன்மையுடன் இருக்கும் மாணவிகளுக்கு சலுகை!

தென் ஆபிரிக்க உதுகேலா நகரில் கன்னித்தன்மையுடன் இருக்கும் கல்லூரி மாணவிகளுக்கு விசேட புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளதாக அந்நகரின்



நகரபிதா அறிவித்துள்ளார். தென் ஆபிரிக்காவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள குவாஸலா மாகாணத்தின் நகரபிதா மஸிபுகோ அம்மையாரே இப்புலமைப் பரிசிலை வழங்க முன்வந்துள்ளார். மாணவிகள் தூய்மையாக இருப்பதுடன் கல்வியில் கவனத்தை குவிக்கச் செய்வதை ஊக்குவிப்பதற்காக இத் திட்டம் நடைமுறைப்படுகிறது என நகரபிதா அலுவலகத்தின் பேச்சாளரான ஜபுலானி எம் கோன்ஸா தெரிவித்துள்ளார்.

இப் புலமைப் பரிசிலை பெற விரும்பும் மாணவிகள் கல்வியை பூர்த்திசெய்யும் வரை கன்னித் தன்மையாக இருப்பதற்கு இணங்குவதுடன், குறிப்பிட்ட கால இடைவெளியில் கன்னித்தன்மை சோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு இணங்கவும் வேண்டும். முதல் கட்டமாக 16 மாணவிகளுக்கு இப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட உயர்தரப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவிகளுக்கு இப் புலமைப் பரிசில் வழங்கப்படும் என எம்கோன்ஸா தெரிவித்துள்ளார். நகரபிதா இது தொடர்பாக கூறுகையில், எம்மைப் பொறுத்தவரை, நீங்கள் பட்டதாரியாகும் வரை அல்லது சான்றிதழை பெறும் வரை எதிர்வரும் 3 வருட காலம் நீங்கள் நீங்களாகவே இருந்து கல்வியில் கவனம் செலுத்துவதற்கு நன்றி கூறுவதாகும். இளம்வயது கர்ப்பங்களையும் பாலியல் நோய்களின் பரவலையும் இத் திட்டம் கட்டுப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கன்னித்தன்மையுடைய பெண்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் இந்தத் திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பும் எழுந்துள்ளது. இந்த நடவடிக்கைக்கெதிராக, அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சி, மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதேபோல், பாலின சமவுரிமைச் செயற்பாட்டாளர்களும், கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். எனினும், தனது திட்டம் குறித்து உறுதியாக உள்ள அந்நகரபிதா பால்வினை நோய் (ஏச்.ஐ.வி) மிக இளவயதுக் கர்ப்பம் போன்றவற்றைத் தடுப்பதற்கான சிறந்த நடவடிக்கையாக இது அமையுமெனத் தெரிவித்துள்ளார்.

மனையில் குடியேறிய நாள் முதல் இது வரையில் அங்கு பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணத்தை அரசுக்கு செலுத்தவில்லை என நேபாள மின் ஆணையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எந்தக் கடிதம் அனுப்பினாலும் அரண்மனை அதிகாரிகளிடம் பதில் இல்லை. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் அவர் 70 இலட்சம் ரூபாய் வரை பாக்கி வைத்துள்ளதாகவும் மின் ஆணைய உதவி இயக்குனர் தெரிவித்தார்.

## ஆங்கிலம் தெரியாதவர்கள் நாடுகடத்தப்படுவர்

பிரித்தானியாவில் வசிக்கும் திருமணமான வெளிநாட்டு பெண்களுக்கு ஆங்கில அறிவை சோதிப்பதற்காக தேர்வு நடத்தப்படும் என்றும், அதில் தோல்வி அடைபவர்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பிவிட வேண்டும் என்றும் அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார். மேலும் இது குறித்து அவர் கூறியதாவது, பிரித்தானியாவில் வசிக்கும் பெண்கள் ஆங்கில அறிவு பெற்றிருப்பது அவசியம். எனவே இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக பிரித்தானியாவில் தங்கியிருக்கும் பெண்களுக்கு ஆங்கில தேர்வு நடத்தப்பட வேண்டியது அவசியம். ஒக்டோபர் மாதம் முதல் இந்த கொள்கை செயல்படுத்தப்படும். அதற்குள் தயார்படுத்திக்கொண்டு தேர்வில் வெற்றிப் பெறாதவர்கள் தங்களது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, இது குறித்து பிரதமர் டேவிட் கமரூன் ‘தி டைம்ஸ்’ பத்திரிகையில் எழுதியிருப்பதாவது, பிரித்தானியாவில் குடியேறிய பெண்களில் 1 இலட்சத்து 90 ஆயிரம் பேருக்கு போதிய ஆங்கில அறிவு இல்லை என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அவர்கள் ஓரளவுக்கு ஆங்கிலத்தில் பேசுகின்றனர் அல்லது சுத்தமாக ஆங்கிலமே தெரியாமலேயே பல ஆண்டாக வசிக்கிறார்கள். அவர்களுக்காக ஆங்கில பயிற்சி வகுப்புகள், அவர்கள் விருப்பப்படும் இடங்களில் நடத்தப்படும். 5 ஆண்டு வாழ்க்கை துணை விசாவில் இங்கு வரும் பெண்களுக்கு ஆங்கில பயிற்சி அளித்து, இரண்டரை ஆண்டுக்கு பிறகு தேர்வு நடத்தப்படும். இதில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே இங்கு தொடர்ந்து வசிக்க முடியும் என்று கூறியுள்ளார்.

## இரண்டு திருமணம் செய்யாவிட்டால் சிறை

எரித்திரியா நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆண்களும் குறைந்த பட்சம் இரண்டு பெண்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறில்லாவிட்டால் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. அந்த நாட்டில் பெண்கள் தொகை



அதிகமாகவும் ஆண்களின் சனத் தொகை குறைவாகவும் காணப்படுவதே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டில் உள்ள மொத்த சனத் தொகை 4 மில்லியன்களாகும். 1998 – 2000ம் ஆண்டு வரையான காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் 150,000 இராணுவத்தினர் கொல்லப்பட்டதனால் அந்த நாட்டு ஆண்களின் தொகை குறைவடைந்துள்ளது. இதன் காரணமாகவே அரசாங்கம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இவ்வாறு ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்கு தேவையான பண உதவிகளையும், வீட்டு வசதிகளையும் அந்த நாட்டு அரசாங்கம் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போரும் ஊடக...

கொள்ள மறுக்கும் எவரும் இலங்கை உள்நாட்டுப் போர் தொடர்பில் சரியான அனுமானத்தைக் கொண்டிருக்க வாய்ப்பில்லை.

சிங்கள மக்களைக் காலங்காலமாக தவறான வழியில் இட்டுச் சென்ற சிங்கள அரசியல் அதிகாரவர்க்கத்துடன் விடுதலைப் புலிகள் பேசுவது குறித்து என்றுமே கிஞ்சித்தும் கவலை கொள்ளாத ஆய்வாளர் சிவராம், சிங்கள மக்களை அணுகும் விடுதலைப் புலிகளின் முயற்சிகளை வரவேற்காத பின்னணியில் அவரிடம் சில கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.

சிவராமின் நிலைப்பாட்டையே ஏற்றுக் கொள்வதானால், இன்றைய சர்வதேச நிலைவரங்களின் பின்புலத்தில் அவர் தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைக்கான போராட்டம் தொடர்பில் அடுத்து என்ன செய்யவேண்டும்? ஒருதலைப்பட்சமாக மீண்டும் போரை ஆரம்பிக்க வேண்டுமா? ஒருதலைப்பட்ச சுதந்திரத்தைப் பிரகடனம் செய்ய வேண்டும்? இவற்றில் எந்தவொரு மார்க்கத்தையும் பின்பற்றினால் தற்போதைய சூழ்நிலைகளில் ஏற்படக் கூடிய விளைவுகள் எவை? சிவராம் பதிலளிக்கக் கடமைப்பட்டவர் என்பது எமது உறுதியான அபிப்பிராயம்.' என்பதாக அமைகிறது தினக்குரல் தலையங்கம்.

அதற்கு வீரகேசரி நாளிதழில் பதில் எழுதியிருந்த தராக்கி, 'எமது இன்னல்களைப் பற்றியும் அரசியல் அவாவுதல்களைப் பற்றியும் நாம் எந்தளவிற்கு சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துரைத்தாலும் நடக்கப் போவது ஒன்றுமில்லை எனவும் இதற்கு சிங்கள தேசியத்தின் அடிப்படைத் தன்மையே காரணம்' எனவும் நான் எழுதியதை தினக்குரல் கடும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

எமது சமூகத்தில் புதிய எண்ணங்களையும் பயனுள்ள விவாதங்களையும் ஓரளவேனும் தூண்டிவிட எனது எழுத்துக்கள் பயன்பட்டால் அதுவே பெரிய விடயம் எனக் கூறிக்கொண்டு தினக்குரல் ஆசிரியர் தலையங்கம் எழுப்பியுள்ள கேள்விகளைக் கவனிப்போம்.

'இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக ஆயுதமேந்திப் போராடிவந்த விடுதலைப் புலிகள் அரசாங்கப் படைகளுடனான போர்நிறுத்தத்தின் பின்னரான சஞ்சலமான அமைதிச் சூழ்நிலையில் தங்களது போராட்டத்தின் அரசியல் நியாயத்தை சிங்கள மக்களுக்கு விளக்க வேண்டுமென்று அக்கறை காட்டும் போது அந்த அக்கறை தொடர்பில் தமிழ் மக்களுக்கு எதிர்மறையான எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடிய கருத்துக்களை எதற்காக சிவராம் வலிந்து முன்வைக்கிறார் என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க எம்மால் முடியவில்லை'

இது தினக்குரல் ஆசிரியர் தலையங்கம் எழுப்பியிருக்கும் முதலாவது கேள்வி. இதற்கான விடை அடுத்த நாள் (27.10.2004) தினக்குரல் ஆசிரியர் தலையங்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது.

'தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் சுயாட்சிக்கான அவர்களின் கோரிக்கையையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு உந்துதல் அளிக்கக்கூடியதான வெகுஜன இயக்கமொன்றை தென்னிலங்கையில் கட்டியெழுப்ப முடியாமல் போய்விட்டது என்பது குறித்து பெரும் கவலை தெரிவித்த வாசுதேவ, அத்தகையதொரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுவிட்டமைக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் சொன்னார்' என தினக்குரல் ஆசிரியர்தலையங்கம் எழுதிச் செல்கிறது. சிங்களத் தேசியம் பற்றி நான் கூறியதை இது நிறுவுகிறதன்றோ.

சிங்கள தேசத்தில் பத்தாண்டுகளுக்கு மேலாக இடதுசாரிகளுடனும் கிளர்ச்சியாளர்களுடனும் பழகியதன் அடிப்படையிலும் இலங்கை முழுவதற்குமான சமூக விடுதலைக்காக அவர்களுடன் இணைந்து செயல்பட்ட அனுபவங்களின் அடிப்படையிலுமே நான் எனது கருத்துகளை முன்வைத்தேன்.

கடந்த 15 வருடங்களாக தென்னிலங்கையின் ஆங்கில ஏடுகளில் தொடர்ந்தெழுதி வந்ததில் கிடைத்த அனுபவங்கள் எனது மேற்படி கருத்துகளை மேலும் வலுப்படுத்தியுள்ளன. கிழமைக்குக் கிழமை கருத்தரங்கிற்குக் கருத்தரங்கு எமது பிரச்சினையை ஆங்கிலத்தில் எழுதியும் பேசியும் கண்டபயன் ஏதுமில்லை என சலித்து நான் சிறிதுகாலம் என்னுடைய தராக்கி பத்தியை எழுதாது விட்டதுமுண்டு.

எனக்குக் கிடைத்த அனுபவங்களையும் அதன் அடிப்படையில் நான் கற்றுக்கொண்ட பாடங்களையும் எனது மக்களுக்குக் கூற வேண்டுமென்று எண்ணினேன். அவ்வளவே. எனது கருத்துக்கு மாறான அனுபவங்களையும் ஆதாரங்களையும் தர்க்கங்களையும் தினக்குரல் ஆசிரியர் தலையங்கம் முன்வைக்குமேயானால் நன்றியுடையவனாவேன். அது பயனுள்ளது.

அடுத்ததாக தினக்குரல் ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது:

'....சிங்கள மக்களைக் காலங்காலமாக தவறான வழியில் இட்டுச் சென்ற அரசியல் அதிகார வர்க்கத்துடன் விடுதலைப் புலிகள் பேசுவது குறித்து என்றுமே கிஞ்சித்தும் கவலை கொள்ளாத ஆய்வாளர் சிவராம் சிங்கள மக்களை அணுகும் விடுதலைப் புலிகளின் முயற்சிகளை வரவேற்காததின் பின்னணியில் அவரிடம் சில கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.'

வீரகேசரி வார இதழில் நான் முதன் முதலாக எழுதிய கட்டுரைத்தொடரில் புலிகளின் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றியும் அமைதிப் பேச்சின் இன்னோரன்ன விடயங்கள் பற்றியும் தினக்குரல் ஆசிரியர் நேரங்கிடைக்கும்போது சற்றே நோக்குவாராயின் அவரது கூற்று எந்தளவிற்கு தவறு என்பது புரியும்.

கடைசியாக கீழ்வரும் கேள்விகளை என்மீது தொடுத்துள்ளது தினக்குரல் ஆசிரியர் தலையங்கம்.

'சிவராமின் நிலைப்பாட்டையே ஏற்றுக்கொள்வதானால், இன்றைய சர்வதேச நிலைவரங்களின் பின்புலத்தில் தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைக்கான போராட்டம் தொடர்பில் அடுத்து என்ன செய்யவேண்டும்? ஒரு தலைப்பட்சமாக மீண்டும் போரை ஆரம்பிக்க வேண்டுமா? ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்யவேண்டுமா? இவற்றில் எந்தவொரு மார்க்கத்தையும் பின்பற்றினால் தற்போதைய சூழ்நிலைகளில் ஏற்படக்கூடிய விளைவுகள் எவை? சிவராம் பதிலளிக்கக் கடமைப்பட்டவர் என்பது எமது உறுதியான அபிப்பிராயம்.'

தமிழ் மக்கள் ஒரு தலைப்பட்சமாக மீண்டும் போரை ஆரம்பிக்கத் தேவையே இல்லை. அந்த வேலையை இப்பொழுதே சிறிலங்கா படைத்துறையின் உளவியற் போர் பணியகம் தொடங்கி முன்னெடுத்து வருகிறது. இது நாளை எம்மீது முழுமையான போராக பாயும் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமன்றி போர் நிறுத்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியும் சரி சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் சரி இலங்கையின் இராணுவச் சமநிலையை சிங்களதேசத்தின் பக்கம் சாய்ப்பதிலேயே பேரவாக் கொண்டு செயற்பட்டு வருகின்றன என்பது கண்கூடு.

நாம் இன்று அனுபவிக்கும் உரிமைகள் அனைத்துமே பேசிப் பெற்றவையல்ல, அடித்துப் பெற்றவையே என போர்நிறுத்தம் ஏற்பட்ட காலத்தில் நான் திருமலையில் பேசியதை தினக்குரல் முன்பக்கத்தில் வெளியிட்டதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கால்நூற்றாண்டுக்கு மேலாக சட்டவல்லுநர்களான எமது தமிழ் அரசியல்வாதிகள் எவ்வளவோ பேசிப்பார்த்தும் நீக்கப்படாத பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சிங்கள தேசம் இறுதியாக எமது படைபலத்தைக் கண்டு அஞ்சியே தற்காலிகமாக நீக்கவேனும் உடன்பட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்காக எந்த அழிவையும் சந்திக்க தயாராகவே இருக்கின்றேன். ஓடி விடமாட்டேன். எமக்குத் தேவையான கருத்துகளை விவாதிப்பதற்கான களத்தை மேலும் விரிவாக்கியதற்கு தினக்குரலுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என நீண்டதொரு அரசியல் பூர்வமான விளக்கத்தை அளித்திருந்தார்.

2004 யில் தராக்கி சொல்லிய 'நாளை எம்மீது முழுமையான போராக பாயும் என்பதில் சந்தேகமில்லை', 'இராணுவச் சமநிலையை சிங்களதேசத்தின் பக்கம் சாய்ப்பதிலேயே பேரவாக் கொண்டு செயற்பட்டு வருகின்றன' என்பதுமே 2008 முதல் 2009 வரை நிகழ்ந்தது. ஆனால் அந்த இராணுவச் சமநிலையைச் சாய்ப்பதோடு மட்டும் சிங்கள தேசம் நிற்கவில்லை, தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும் அத்தனை மையங்களிலும் தொடர்கிறது.

தராக்கியை ஊடகத் தளத்திற்கு அறிமுகப்படுத்திய ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சூசா வாழ்வும் 1990 ஆம் ஆண்டு கடத்தல் கொலையில் தான் முடிவுற்றது.

1959 இல் பிறந்த தராக்கி சிவராமிற்கு முன்பே இலங்கையில் இன முரண்பாடுகள் பிறந்தவிட்டன. 1915 முஸ்லீம்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறையை எடுத்துக் கொண்டால் இலங்கை இனக்கலவரங்களுக்கு நூற்றாண்டு வரலாறே உள்ளது. தராக்கி பிறப்பதற்கு ஓராண்டிற்கு முன்பு நிகழ்ந்த 1958 இனக்கலவரத்தினை 'எமர்ஜென்சி 58' என கொழும்பைச் சேர்ந்த செய்தியாளர் தார்சி வித்தாச்சி பதிவு செய்துள்ளார். அந்த இனக்கலவரத்தின் தாயான அவசரகால (எமர்ஜென்சி) நிலையை இது ஆதாரப்பூர்வமாக எடுத்து சொல்கிறது.

# தந்தைக்காகத்....

அப்படியிருக்கும் பொழுது தலைவர் பிரபாகரன் பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றியும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் குறிப்பிட்டமையானது தமிழீழத் தேசியத் தலைவரின் செயற்பாடுகள் அன்று கூட்டணித் தலைமையால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டதையே உணர்த்துகின்றன. இந்த வகையில் தமிழீழ தாயகத்தில் வீசிய தனியரசு அலை தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சாதகமாக அமையக் கூடாது என்ற நோக்கத்தோடு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கூட்டணியினர் கொண்டு வந்திருந்தாலும்கூட அதனையிட்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவரின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கும் தமிழீழத்திற்கான கருத்தியலின் தோற்றுவாயை கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலுக்குள் முடக்குவதற்கு உருத்திரகுமாரனும் அவரது அடிவருடிகளும் முற்படுவது மானமுள்ள எந்தத் தமிழர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஆனாலும் இவ்வாறு உருத்திரகுமாரன் நடந்து கொள்வதற்கு அவரது பின்னணியில் இருக்கும் கே.பியும், இந்திய உளவு நிறுவனங்களும் மட்டும் காரணம் அல்ல.

தமிழீழத் தேசியத் தலைவருக்கு எதிரான உருத்திரகுமாரனின் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியும், பழிவாங்கும் எண்ணமும் கூட இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறலாம். இச்செய்தி பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம். ஆனால் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு இவ் உண்மை புலப்படும். அதாவது கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலில் திழைத்தவரான உருத்திரகுமாரனின் தந்தை சட்டத்தரணி விசுவநாதன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அடிவாங்கியவர். இது யாழ்ப்பாணத்தில் 1981ஆம் ஆண்டு நடந்தேறியது.

1976ஆம், 1977ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழீழம் பற்றி மேடைகளில் முழங்கிய அமிர்தலிங்கம், தனது வீராவேசப் பேச்சுக்களைக் காற்றில் பறக்க விட்டு மாவட்ட சபையே தமிழருக்கான தீர்வாக அமையும் என்று அந்தர் பல்டி அடித்து விட்டு யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை 1981ஆம் ஆண்டு நடாத்திய பொழுது, அவ்விடத்திற்கு விரைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளான கேணல் கிட்டு, லெப்.செல்லக்கிளி, லெப்.சீலன் ஆகியோரை உள்ளடக்கிய அணி, அமிர்தலிங்கத்தையும், அங்கு அவருடன் நின்ற உருத்திரகுமாரனின் தந்தை விசுவநாதனையும் கலைந்து செல்ல உத்தரவிட்டது. எனினும் அதற்கு இவர்கள் மறுத்த பொழுது, விசுவநாதன் மீது லெப்.செல்லக்கிளி அவர்களால் தாக்குதல் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமிர்தலிங்கம் அவர்களின் வாகனமும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

இதன் எதிரொலியாகத் 'தம்பி நீயுமா?' என்று அமிர்தலிங்கம் கேள்வியெழுப்புவது போன்ற தலையங்கத்துடன் மறுநாள் வெளிவந்த பத்திரிகை ஒன்றில் செய்தி பிரசுரமாகியிருந்தது. இதனை அன்றைய செய்தித் தாள்களைப் புரட்டிப் பார்ப்பதன் ஊடாக உறுதி செய்யலாம்.

எனவே தனையன் தன் தந்தைக்கு ஆற்றும் கடன் தந்தை சுட்டுவிரல் நீட்டுவோரை ஒழித்துக் கட்டுவது என்ற பரசுராமனின் சித்தாந்தத்தை தலையில் வைத்துக் காவடி எடுப்பதில் பெயர் போனவர் என்று அறியப்படும் உருத்திரகுமாரன், தன் தந்தைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் கொடுத்த அடிக்கு பழிதீர்க்கின்றார் என்று கருதுவதில் தவறில்லை.

# பக்கிரி வைத்...

உடலைச் சோதித்ததில் உன் வாழ்நாள் ஆறுமாதம்கூட இல்லையென்று தெரிகிறது. நான் வைத்தியம் செய்ய, அதனால் நீ இறந்து போனாய் என்ற பழி எனக்கு வரக்கூடாது. நான் ஆறு மாதம் கழித்து வருகிறேன். அப்போது நீ உயிரோடு இருந்தால் வைத்தியம் செய்கிறேன். இப்போது போகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

மன்னன் விமலன் அதிர்ச்சியடைந்தான். "நான் இன்னும் ஆறு மாதத்தில் இறந்து விடுவேனா..? பக்கிரி சொல்லிவிட்டாரே, ஐயோ!" என்று அலறினான்.

அவன் மனைவி, மந்திரி, மற்றுமுள்ளவர்கள் வருத்தப்பட்டனர்.

"எதையும் குணமாக்கும் பக்கிரியே, கைவிட்டுவிட்டார். உங்கள் கடைசிக்காலத்தையாவது விரதம், தியானம், கடவுள் வணக்கத்தில் செலவு செய்து, நல்ல மோட்சம் கிடைக்கப் பாருங்கள்" என்று ஆலோசனை சொன்னார்கள்.

மன்னன் தனது கடைசிக்காலத்தை தியானத்திலும் விரதத்திலும் கழிக்க ஆரம்பித்தான். உண்பதை நிறுத்தி விரதம் பூண்டான். மரணம் பற்றிய பயத்தில் அவனவது உடல் இளைத்துவிட்டது.

இப்படி சில மாதங்கள் சென்றன.

மறுபடியும் பக்கிரி, அரசன் விமலன் அரண்மனைக்கு வந்தார்.

"சுவாமி உங்கள் கணக்குப்படி என் முடிவு நாள் நெருங்கிவிட்டது. நான் இன்னும் ஒருமாதம்தான் உயிரோடு இருப்பேன். என் நல்ல காலம் உங்களை என் வாழ்நாளில் திரும்பவும் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நான் மோட்சமடைய வாழ்த்தி ஆசீர்வதியுங்கள்" என்றவாறு பக்கிரி காலில் அரசன் விமலன் விழுந்து வணங்கினான்.

"அவசியமில்லை மகனே! எழுந்திரு. இனி உனக்கு மரணமில்லை. நீ உடல் இளைத்து, அதனால் உன் உடல் நோய்கள் நீங்கி நன்றாக ஆகிவிட்டாய். உன் நோய்க்கு இதுதான் வைத்தியம் என்றே உன் மரணச் செய்தியைச் சொன்னேன். மரணம் கணித்ததல்ல. இனி இந்தப் பழக்கத்தையே கைக்கொண்டு, அளவாக உண்டு நோயில்லாது நீண்டகாலம் வாழ்வாய்!" என்று ஆசீர்வதித்துச் சென்றார் பக்கிரி.

- மதுரை க.பரமசிவன்

# Express station service

● எரிபொருள் நிரப்பு நிலையம் ● பணம் அனுப்பும் சேவை ● புத்தம் புதிய கைத்தொலைபேசிகள் ● தொலைபேசி உதிரிப்பாகங்கள்

- விரைவாகவும் பாதுகாப்பாகவும் சர்வதேச ரீதியில் பணம் அனுப்பிக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும்...
- அதிகூடிய மாற்று வீதம்...
- குறைந்த சேவைக்கட்டணம் (விலைக்கழிவு)...
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடான சேவை...
- அனைத்து முகவர்களும் ஒரே இடத்தில்...
- 2 நிமிடங்களில் எல்லா நாடுகளிலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்...
- வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ய...
- நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்...

Ria Money Transfer

WU WESTERN UNION

MoneyGram money transfer




**Tél.: 01 40 18 07 44**

E-mail: express-station@hotmail.com

**25 boulevard de la Chapelle**
**75010 Paris** metro: La chapelle





# லலிதா நகை மாளிகை

பாரிஸ்

40 வருட அனுபவம் வாய்ந்த நகை விற்பன்னர்களால்
பாரம்பரிய, நவீன டிசைன் தங்க நகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள

Lalitha Jewellery

01, rue Cail - 75010 Paris
Tél. : 01 53 26 36 16 / 06 58 07 03 26
Metro : La Chapelle - Gare Du Nord



செல்லில் - உங்கள் அபிமான பேபியின் புதிய உதயம்



# அபி சலூன்

தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்

11 avenue Maréchal Foch
77500 Chelles

07 82 31 73 94
07 51 28 81 34



## Aubervilliers Quatre cheminsல் ஒரு தமிழ்க்கடை

# Anna Marché

அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...

மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65



## பரம் திருமண ஏற்பாட்டாளர் பிரான்சு

திருமண பந்தத்தில் இருமணம் கலந்து இல்லற வாழ்க்கையில் இணைய இருக்கும் மணமகன், மணமகளை தெரிவுசெய்ய தொடர்புகளை அறிமுகம் செய்து கொள்கின்றோம்.

எம்முடன் தொடர்புகொள்ள:

12, rue Perdonnet, 75010 Paris
e-mail: parissparam@gmail.com
**Tél.: 07 53 84 42 84**

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் தினமும் மாலை 5:00மணி முதல் 8:00 மணி வரை





# RAMI COIFFURE

உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள

Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44



## பாரீஸ் அறிவாலயம்

# Paris Arivalayam

7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.





# சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS

**LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE**

எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு

CITY EXPRESS We Move the Businessclass

**Tél: 0 651 651 729 - 06 95 95 63 73**

www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis




BIJOUTERIE RIAN
தங்கம் வாங்க விற்க

எமது நிறுவனம் பிரான்ஸ் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால்
நீங்கள் விற்கும் அனைத்து நகைகளிற்குமான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

பழைய நகைகளைப் புதுப்பித்துத் தங்கத் தண்ணீர் போட்டுக் கொடுக்கப்படும்.
தங்க நகைகள் திருத்திக் கொடுக்கப்படும் – மணிக்கூடுகள் உடனுக்குடன் திருத்திக்கொடுக்கப்படும்!
தங்க நாணயங்கள் அன்றைய வங்கி விலையில் பெற்றுக்கொள்ளலாம்!

09 80 90 60 69
07 81 71 00 19

Metro - Gare de L 'est / Gare du Nord

5 rue de Chabrol
75010 Paris

LA SOCIÉTÉ EST DÉCLARÉE AU BUREAU DE GARANTIE DES DOUANES

Noisiel, Torcy, Lognes, Noisy Champs வாழ் மக்களுக்காக...
நிலா மளிகை ஸ்தாபனம்



இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள், தொலைபேசி அட்டைகள்
8, Allée Boris Vian - 77186 Noisiel
Noisiel RER Mairie Annexe du Luzard,
Noisiel RERக்கு முன்பாக
Police Municipale, Hotel Hipotel Marne la vallée école, Manché
பாடசாலைகள் சந்தை ஆகியவற்றுக்கு அருகில்
Tel. : 09 51 89 69 80

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
WESTERN UNION MONEY TRANSFER
Ria
MoneyGram money transfer
IMPORT & EXPORT
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0984478750 - Port: 0667204000

S.P TRADERS



உங்கள்
மளிகைத்தேவைகள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M° : Gare du Nord / La Chapelle

Baly Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்



Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

பாலன்ஸ் சலூன்



தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்
புதுப் பொலிவுடன் புதிய முகவரியில்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien



30 ஈரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.



COIFFURE
VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

சகாதேவன் மொழிபெயர்ப்பு
நிலையம்
நகர சபையில் திருமணம் செய்ய, நகர சபையில் திருமண அறிவிப்பு கொடுக்க, குடும்பத்தை ஸ்பொன்சர் செய்ய, வெளிநாட்டு அமைச்சு மூலம் ஸ்பான்சர் செய்ய, தேசிய பிரஜா உரிமை கோர, போலீசில் வாகனச்சாரதிப் பத்திரம் மாற்ற, போலீசில் வதிவிட உரிமைப் பத்திரம் (விசா) பெற, நீதிமன்றத்தில் பெயர் மாற்றம் செய்ய, ஒப்ரா மற்றும் கமிசனுக்கு விண்ணப்பிக்க
☛ எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
☛ நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்



DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

● எலிகள் – சுண்டெலிகள்
● கரப்பான் பூச்சிகள்
● தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
Tél.: 01 60 07 34 29

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
சுதா / விமல் : 06 34 18 80 04